தமிழின் முதல்தர
வார இதழ்

# தீபம்

www.deepam.lk

விலை 30 ரூபா • தீபம் 137 • 08.04.2018






## ஆதரவு கேட்ட கூட்டமைப்பு

# டக்ளஸ் தேவானந்தா போனில் சொன்ன ஒரு வார்த்தை

# அமெரிக்க பாணி போருத்தியை பாவித்த புலிகள்!

கூட்டமைப்பை உடைக்க இரகசியமாக நடந்த சதி ஒப்ரேஷன்!

பேரூந்து நுழையாத வவுனியா பேரூந்து நிலையம்

# சமுர்த்தி ஊழல்

இந்தவாரம் சந்திவெளி




தமிழ் புத்தாண்டு வாழ்த்துக்கள்
KIRUBA A LEARNERS
KIRUBAA LEARNERS
கிருபா லேணர்ஸ்
அரச அங்கீகாரம் பெற்ற கனரக
(A) சாரதிப் பயிற்சிப் பாடசாலை
நல்ல சாரதி நாட்டுக்கு தேவை.
இன்றே கிருபா லேணர்ஸ் உடன் இணைந்து கொள்ளுங்கள்.
யாழ்ப்பாணம்
முதலாம் கட்டைச் சந்தி பருத்தித்துறை 021 4923201 071 4546961
இல 227/6 கே.கே.எஸ் வீதி சுன்னாகம் (மதவாடி அண்மையில்) 021 224 2022 071 454 6958
பிரதான வீதி, நெல்லியடி (பொலிஸ் நிலையம் முன்பாக) 021 300 6550 071 454 6958
கண்டி வீதி, சாவகச்சேரி (நீதிமன்றம் அண்மையில்) 021 492 3202 021 227 0700
யாழ்.கச்சேரியடி, யாழ்ப்பாணம் 39, நல்லூர் வீதி 021 222 6699 076 722 5292
ஓம் பிளாசா பருத்தித்துறை வீதி, ஆவரங்கால் 021 222 6688 077 242 2622
கிளிநொச்சி
ஏ9 கிளிநொச்சி (கச்சேரி முன்பாக) 021 228 5505 071 454 6955
வாடியச்சந்தி பூநகரி 021 320 1818 070 333 7171
புளியடிச்சந்தி (முல்லைவீதி, விசுவமடு 021 320 1515 071 454 6955
வவுனியா
நாச்சிகுடா சந்தி மன்னார் வீதி, முழங்காவில் 021 300 6544 070 333 6161
216, ஏ9 வீதி, வவுனியா (வசந்தி திரையரங்கு முன்) 024 222 7777 077 710 0444
மன்னார்
இல 94, பிரதான வீதி மன்னார் 023 225 1656 077 847 2732
பெண்களாலேயே பெண்களுக்கு பயிற்சி வழங்கப்படும்
தலைமைக் காரியாலயம்: 226, கஸ்தூரியார் வீதி. யாழ்ப்பாணம்
021 222 4353, 021 492 3200, 077 722 5292


Jaffna
Rent A Car
நாங்கள் தருகின்றோம்
நீங்கள் ஓட்டிச் செல்லுங்கள்.
Point Pedro Road, Nallur, Kalviyankadu.
mobile - 0777484820
office - 0212223339


துஷாந்
பல்பொருள் வாணிபம்
உங்கள் இல்லத்திறக்கு தேவையான அனைத்து பொருள்களையும் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ள நீங்கள் நாட வேண்டியது....
அம்மன் கோவில் வீதி, முள்ளியவளை, வற்றாப்பளை
0773482178

# பிரபாகரனும் ஆனோல்ட்டும் ஒன்றா?

சொப்பன சுந்தரியை யார் வைத்திருக்கிறார்கள் என தமிழ் சினிமாவில் ஒரு நகைச்சுவை உண்டு. கொஞ்சம் விரசமானதுதான். என்றாலும், தமிழ் அரசியலில் தற்போதுள்ள நிலைமைக்கு அதை விட வேறு சிறந்த உதாரணம் இருக்கிறதா என்பது தெரியவில்லை. தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கும், ஈ.பி.டி.பிக்குமிடையில் கூட்டணி இருக்கிறதா, இல்லையா என்ற விவாதம், சொப்பன சுந்தரி அளவிற்கு ஆகிவிட்டது.

அந்த விவாதம் இருக்க, நாம் மேலதிகமாக சில விசயங்களை சொல்கிறோம். யாழ் மாநாகரசபை மேயர் தெரிவிற்கு முன்னர், இரண்டு தரப்பும் புரிந்துணர்வுடன் செயற்படுவதென்றுதான் இருந்தது. ஆனால் ரெமீடியஸ், யோகேஸ்வரி ஆகியோர்தான் கட்சியின் முடிவுடன் உடன்பட்டிருக்கவில்லை. ரெமீடியஸ் போட்டிக் களத்தில் குதித்து, பின்னர் நடந்ததெல்லாம் செய்தியாகி விட்டது. இதில் வெளிவராத இரண்டு விசயங்கள் உள்ளன.



முதலாவது கட்சி முடிவையும் மீறி ஈ.பி.டி.பிக்குள் ஒரு அணி ஏன் ஆனோல்ட்டை எதிர்த்தது?

இதற்கு கட்சி சார்ந்த காரணங்கள் எதுவும் கிடையாது. ரெமீடியசும், ஆர்னோல்ட்டும் உறவினர்கள். ஒரே பகுதியை சேர்ந்தவர்கள். ஆனோல்ட் மேயரானால், அவரது செல்வாக்கு உயர்ந்து, தனது அரசியல் எதிர்காலம் பாதிக்கப்பட்டு விடும் என ரெமீடியஸ் நினைத்தார். இதனால்தான், இறுதிவரை ஆனோல்ட்டை எதிர்க்கும் முடிவில் இருந்தார்.

ஆனோல்ட் மேயரானால், தமிழரசுக் கட்சியின் செல்வாக்கை உயர்த்தி விடுவார் என யோகேஸ்வரி அபிப்பிராயம் கூறியிருக்கிறார். ஆனோல்ட் ஓரளவு நிர்வாக திறனுடையவர். தற்போது ஐ.தே.கவுடன் தமிழரசுக் கட்சிக்கு நெருக்கமுள்ளது, இதன் மூலம் மாநகரசபைக்கு அதிக நிதியை பெற்று புதிய திட்டங்களை ஆரம்பிப்பார்கள், அப்படி நடந்தால் தமிழரசுக்கட்சியின் செல்வாக்கு சடுதியாக உயர்ந்துவிடும் என கட்சி கூட்டங்களில் குறிப்பிட்டிருந்தார்.

இரண்டாவது செய்தி அது இதனுடன் தொடர்புடைய தொடர்ச்சியானதுதான்.

யாழ் மாநகரசபை மேயர் தெரிவு முடிந்ததும், அன்று மாலை டக்ளஸ் தேவானந்தா கொழும்பில் இருந்தபடி தொலைபேசியில் முன்னாள் மேயர் யோகேஸ்வரியை தொடர்புகொண்டிருக்கிறார். கட்சியின் முடிவை மீறி செயற்பட்டு, அதை சொதப்பலாக முடித்திருக்கிறீர்கள், இதனால் கட்சிக்குத்தான் நெருக்கடி என கடும் தொனியில் பேசியிருக்கிறார்.

அன்று கட்சியின் முக்கியஸ்தர் ஒருவர், தமிழரசுக்கட்சியின் பிரமுகரான மாகாணசபை உறுப்பினரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு, நடந்த சம்பவத்திற்கு sorry சொல்லியிருக்கிறார். ஈ.பி.டி.பி சார்பில் மேயர் வேட்பாளர் களமிறக்கப்பட்டது கட்சியின் முடிவல்ல, அது தனிநபர்களின் முடிவு, கட்சியின் முடிவல்ல என கூறியுள்ளார்.

மேயர் தெரிவிற்கு முதல்நாள் கூட்டமைப்பின் தலைவர்கள் சிலர் டக்ளஸ் தேவானந்தாவுடன் தொலைபேசியில் உரையாடியிருக்கிறார்கள். அப்பொழுது டக்ளஸ் தேவானந்தா ஆனோல்ட் மேயரானால் தமிழரசுக் கட்சியின் செல்வாக்கு உயர்ந்து, ஈ.பி.டி.பிக்கு நெருக்கடியாகுமென எங்கள் கட்சிக்காரர்கள் சிலரும் பயப்பிடுகிறார்கள். ஆனால், எனக்கு ஆனோல்ட் மேயராவதில் எந்த கருத்தும் இல்லை. பிரபாகரனான பிரபாகரனுடனேயே எதிர்த்து நின்ற எனக்கு ஆனோல்ட் எல்லாம் ஒரு சவாலா?" என கூறினார்!




# முன்னணிக்குள் அதிருப்தி!

தமிழ் தேசிய மக்கள் முன்னணி அதிக ஆசனங்களை எடுத்தும், இரண்டு சபைகளில் ஆட்சியமைக்க முடியாமல் போனது, கட்சிக்குள் அதிருப்தியை கிளப்பியுள்ளது. ஆட்சியமைக்க வாய்ப்பிருந்தும், அதற்கு முயற்சிக்காத கட்சி தலைமைத்துவம் தொடர்பில் உறுப்பினர்கள் பகிரங்க விமர்சனத்தை முன்வைக்க தொடங்கியுள்ளனர். குறிப்பாக சபைகளிற்கு தெரிவான புதிய உறுப்பினர்களிடமே இந்த விமர்சனம் எழுந்துள்ளது.

சாவகச்சேரி, பருத்திதுறை நகரசபைகளில் தமிழ் தேசிய மக்கள் முன்னணிதான் அதிக ஆசனங்களை பெற்றிருந்தன. எனினும், ஆட்சியமைப்பதற்கு எந்த கட்சியுடனும் அவர்கள் பேச்சு நடத்தவில்லை. இலங்கையின் எல்லா அதிகார மட்டத்திலும் கூட்டணி ஆட்சிக்கு மட்டுமே வாய்ப்பு என்ற சூழல் உருவாகி வரும் நிலையில், புதிய தேர்தல் முறையால் குழப்பமடைந்துள்ள உள்ளூராட்சி சபைகளில் ஆட்சியமைப்பதற்கு கூட்டணியை தவிர வேறு வாய்ப்புக்களே இல்லையென்பதுதான் யதார்த்தம். அரசியல் சூழல் இப்படியிருக்க, யாருடனும் கூட்டணி வைக்க மாட்டோம், யாருடனும் பேச மாட்டோம் என விடாப்பிடியாக முன்னணி தலைமை இருந்தது.

நீண்டகாலமாக முன்னணியுடன் செயற்பட்டுவருபவர்கள் தலைமையை புரிந்திருப்பார்கள். எனினும், இம்முறை உள்ளூராட்சிசபை தேர்தலிற்காக கட்சிக்காக களமிறக்கப்பட்ட பலர், சபைகளை கைப்பற்ற வேண்டுமென்ற விருப்பத்துடன் இருந்தார்கள். ஒரு சில சபைகளையாவது கைப்பற்றி, சரியான நிர்வாகம் நடத்தி காட்டினால், அடுத்தமுறை அதிக சபைகளை கைப்பற்றலாமென அவர்கள் கருதுகிறார்கள். கட்சி தலைமையிடமும் இதை வலியுறுத்திக் கூறியிருக்கிறார்கள். என்றாலும், அதை தலைமை காதில் வாங்கிக்கொள்ளவில்லை.

வடக்கு கிழக்கில் வெறும் ஐந்து உறுப்பினர்களை கொண்ட ஈ.பி.ஆர்.எல்.எவ் பத்மநாபா அணியுடனும் (தமிழர் சமூக ஜனநாயக கட்சி) தொலைபேசியில் தொடர்பு கொண்டு தமிழரசுக்கட்சி தலைவர்கள் ஆதரவு திரட்டியிருந்தார்கள். ஆனால், இப்படியான திட்டமிடலெதுவும் த.தே.ம.முன்னணியிடம் இருக்கவில்லை. குறைந்தபட்சம் ஒத்த நிலைப்பாடுள்ள சுயேட்சை அணிகளுடனானவது பேச்சு நடத்தி, கூட்டணி வைத்திருக்கலாமென அதிருப்தியாளர்கள் குறிப்பிடுகிறார்கள்.

## சங்கதி சொல்கிறோம்


# வடக்கிற்கு புதிய எதிர்க்கட்சி தலைவர்?

வடமாகாணசபை எதிர்க்கட்சி தலைவர் பதவி தொடர்பான சர்ச்சை மீண்டும் உருவாகியுள்ளது. எதிர்க்கட்சி தலைவர் பதவியை சி.தவராசா தார்மீக அடிப்படையில் வகிக்முடியாது என வடமாகாணசபை எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பலர் போர்க்கொடி உயர்த்தியுள்ளனர். அதிக ஆசனங்களை வைத்துள்ள அகில இலங்கை மக்கள் காங்கிரசிற்கே எதிர்க்கட்சி தலைவர் பதவி வழங்கப்பட வேண்டுமென அவர்கள் வலியுறுத்துகின்றனர்.

வடமாகாணசபையின் முதலாவது எதிர்க்கட்சி தலைவரானவர் ஈ.பி.டி.பி உறுப்பினராக இருந்த கமலேஸ்வரன். பின்னர், கொலைக் குற்றச்சாட்டில் சிக்கி எதிர்க்கட்சி தலைவர் பதவியை இழக்க, சி.தவராசாவை எதிர்க்கட்சி தலைவராக நியமிக்கும்படி ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பு கோரியது. தவராசா எதிர்க்கட்சி தலைவரானார். ஆனால் பின்னர் கட்சிக்குள் ஏற்பட்ட மோதலால் தவராசாவை எதிர்க்கட்சி தலைவர் பதவியிலிருந்து நீக்க ஈ.பி.டி.பி கடும் முயற்சியெடுத்தது. ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பின் பொதுசெயலாளர், வடக்கு அவைத் தலைவரிற்கு கடிதமொன்றும் எழுதியுள்ளார்.

எனினும், தவராசா தொடர்ந்தும் எதிர்க்கட்சி தலைவராக பதவி வகித்து வருகிறார். தவராசா எதிர்க்கட்சி தலைவராக பதவியை தொடர்வதில் அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானத்தின் பங்கு இருப்பதாக விமர்சனம் கிளம்பியுள்ளது.

எதிர்கட்சி தலைவர் பதவியை வகிப்பதற்கான தார்மீக தகுதியை தவராசா இழந்து விட்டார், அவரது கட்சியே அவரை நீக்க கோருகிறது, அதிக உறுப்பினர்களை கொண்ட எதிர்க்கட்சிக்கு, எதிர்கட்சி தலைவர்



பதவியை வழங்க வேண்டுமென கோரிக்கை வலுத்து வருகிறது. அகில இலங்கை முஸ்லிம் காங்கிரசின் மூன்று உறுப்பினர்கள் வடமாகாணசபையில் . உள்ளனர். வேறெந்த எதிர்க்கட்சிக்கும் இவ்வளவு அதிகமான உறுப்பினர்கள் கிடையாது. இதனால் அவைத்தலைவரை சந்தித்து, எதிர்க்கட்சி தலைவர் பதவி பொருத்தமானவருக்கு வழங்கப்பட வேண்டுமென அவர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

எதிர்க்கட்சி தலைவர் பதவியிலிருந்து தவராசாவை நீக்குமாறு கோரி, ஐ.ம.சு.கூட்டமைப்பு கடிதம் அனுப்பியபோது, எதிர்க்கட்சி உறுப்பினர்களை அழைத்து தவராசாவை ஆதரிக்குமாறு அவைத் தலைவர் கேட்டிருந்ததையும் நினைவுபடுத்தியே, இப்பொழுது உறுப்பினர்கள் இந்த கோரிக்கையை முன்வைத்துள்ளனர்.


# அறிக்கை ராசாவா எதிர்க்கட்சி தலைவர்?

தமிழ் அரசியலை ஜனநாயக அரசியலை நன்றாக கவனித்தீர்கள் எனில், அது சில சொற்களில்தான் தங்கியுள்ளது. 70களில் தியாகி துரோகி அரசியலை கட்டமைத்ததும் தமிழ் மிதவாத தலைவர்கள்தான். பின்னாளில் துப்பாக்கிகளால் அதற்கு செயல்வடிவம் கொடுத்தது ஆயுத இயக்கங்களாக இருக்கலாம். ஆனால் அந்த கருத்தியலை உருவாக்கி, வளர்த்தது எல்லாமே மிதவாத தலைவர்கள்தான்.

அல்பிரட் துரையப்பாவை சுட்டுக்கொன்றது பிரபாகரனாக இருக்கலாம். ஆனால் அந்த சூழலை உருவாக்கியது தமிழரசுக்கட்சி பின்னாளில் தமிழர் விடுதலை கூட்டணியின் தலைவர்கள்தான், துரையப்பா கொல்லப்பட வேண்டியவர் என அடையாளப்படுத்தினார்கள்.

தமிழரசு, தமிழர் விடுதலைக்கூட்டணி மிதவாத தலைவர்கள் உருவாக்கிய தியாகி வூ துரோகி அரசியல் தமிழ் சூழலில் எவ்வளவு விளைவுகளை ஏற்படுத்தி விட்டு சென்றுவிட்டது.

தமிழ் அரசியல் பெரும்பாலும் மிக சில சொற்களை கொண்டே கட்டமைக்கப்பட்டுள்ளது. தியாகி துரோகி, வீரம் என சில சொற்கள் உள்ளன. சமகாலத்தில் புதிதாக இன்னொரு சொல்லையும் தமிழ் அரசியல் சேர்த்துக் கொண்டுள்ளது. அது வினைத்திறனில்லாத தமிழ் அரசியல்.



வடக்கு எதிர்க்கட்சி தலைவர் சி.தவராசாவின் அரசியலேவினைத்திறனில்லாதவடமாகாணசபை என்ற ஒற்றை சொல்லை மையப்படுத்தி கட்டியெழுப்பப்பட்டதுதான்.

வாரத்திற்கு ஒன்றோ இரண்டோ அறிக்கை, மாகாணசபையில் முதலமைச்சரை குறைசொல்லி ஒரு உரை என அவரது "எதிர்க்கட்சி தலைவர்" அரசியல் நகர்ந்து கொண்டிருக்கிறது. வடமாகாணசபை வினைத்திறனில்லாமல் இயங்குகிறது என்ற ஒரு வரியில் தனது அரசியலை குறுக்கிக் கொண்டுள்ளார்.

தவராசாவின் அரசியலை இரண்டு வகையாக பிரிக்கலாம். முதலாவது, ஈ.பி.டி.பி காலம். அப்பொழுது பொத்தாம் பொதுவாக தமிழ் தேசிய கூட்டமைப்பை குற்றம்சாட்டிக் கொண்டிருந்தார். ஈ.பி.டி.பிக்குள் ஏற்பட்ட தனிப்பட்ட முரண்பாட்டால் வெளியேறிய பின்னர், முதலமைச்சர் விக்னேஸ்வரனை குறிவைத்துதாக்குவதாக தன்னுடைய அரசியலை மாற்றியுள்ளார்.

வடமாகாணசபையில் நிறைய குறைபாடுகள் உள்ளன என்பது ஒன்றும் இரகசியமல்ல. அந்த அத்தனை குறைபாடுகளுமே முதலமைச்சர் விக்னேஸ்வரன் என்ற ஒற்றை மனிதனை சுற்றியதாகவே காண்பிக்கப்படுவதுதான் அநாகரிக அரசியல். உண்மை அப்படியல்ல. வடமாகாணசபை வினைத்திறனில்லையென்றால் அதற்கு பல காரணங்கள். முக்கியமாக அதன் அதிகாரிகளில், உத்தியோகத்தர்களிலும் காரணமுள்ளது. நிர்வாக அனுபவமின்மையும் ஒரு காரணம். பல கூட்டு காரணிகளால் ஆன வடமாகாணசபை வினைத்திறன் குறைவை, ஒரு தனிமனிதனின் தோளில் சுமத்த முயல்வது அறிவார்ந்ததல்ல. அப்படியென்றால், வடமாகாணசபையிலுள்ள அத்தனை உறுப்பினர்களும் அந்தபொறுப்பைஏற்கவேண்டும். அவைத்தலைவர், அமைச்சர்கள், எதிர்க்கட்சி தலைவர்கள், உறுப்பினர்கள் அனைவரின் வினைத்திறனின்மையுமே வடமாகாணசபையின் வினைத்திறனின்மையாகும்.

எதிர்க்கட்சி தலைவர் செய்ய வேண்டியது என்ன? தன்னிடம் அறிவும், நிர்வாக அனுபவமும் இருக்கிறதென்றால் அவர்தான் அதை சொல்கிறார் குற்றம் கண்டுபிடிப்பதில் மட்டுமே அதை செலவிட வேண்டும்?

அமைச்சர்களுடன் உட்கார்ந்து வினைத்திறனாக செயலாற்றுவது எப்படியென பேசி, வழிகாட்டியிருக்கலாமே. அதை செய்யாமல் வாரம் ஒரு அறிக்கை விடுவதால் என்ன பலன்? எதிர்க்கட்சி தலைவர் எந்த அமைச்சருடனும் உட்கார்ந்து பேசி, தனது அறிவையும், அனுபவத்தையும் பகிர்ந்ததாகவோ அல்லது எதிர்க்கட்சி தலைவர் பகிர்ந்த அறிவையும், அனுபவத்தையும் எந்த அமைச்சரும் ஏற்க மறுத்ததாகவோ ஒரு சம்பவமாவது பதிவாகவில்லையே.

இப்படியென்றால் எங்கே பிழையிருக்கிறது?

முன்னாள் அமைச்சர் ஐங்கரநேசனின் தமிழ் தேசிய பசுமை இயக்கத்தின் அலுவலக திறப்பு விழாவிற்கு சென்றதற்கு, முதலமைச்சர் வெட்கப்படவில்லையா என்றும் தவராசா கேள்வியெழுப்பியிருந்தார். வடக்கு எதிர்க்கட்சி தலைவர் தனது சக்தியை இப்படி விரயம் செய்ய வேண்டியதில்லை. தான் செய்ய வேண்டியவற்றை விட்டு, இப்படியான சில்லறைதனமான அறிக்கைகள் விட்டுக் கொண்டிருப்பது, அவர் ஏதோ ஒரு தரப்பிடம் அரசியல் தஞ்சமடைய முயல்கிறாரோ என்ற சந்தேகத்தையும் எழுப்பும்.

தமிழ் தேசிய பசுமை இயக்கத்தின் அலுவலக திறப்பு விழாவிற்கு முதலமைச்சர் சென்றதற்கு வெட்கப்பட வேண்டுமென்றும் தவராசா ஒரு அறிக்கை வெளியிட்டிருந்தார். வடக்கு எதிர்க்கட்சி தலைவர் பதவியில் சி.தவராசா நீடிப்பதற்கு, அவைத்தலைவரின் நடவடிக்கைகளும் ஒரு காரணம். எதிர்க்கட்சி தலைவர் பதவியில் நீடிப்பதற்கான தார்மீக தகுதி அவருக்கு இல்லை. எதிர்க்கட்சி தலைவர் பதவியை வகிப்பதற்கான தார்மீக அறத்தை நீங்கள் இழந்து விட்டீர்கள் என்பதை சுட்டிக்காட்டி, முதலமைச்சர் பதிலறிக்கை வெளியிட்டால் என்ன நடக்கும்? மாறிமாறி அறிக்கை வெளியிட்டு கொண்டிருப்பதிலேயே காலம் முடியும்.

முதலாவது வடமாகாணசபையின் அந்திமக் காலத்தில் நிற்கிறோம். நமக்கு அறிக்கைகள் வேண்டாம். செயல்களே வேண்டும். அது முதலமைச்சரிடம் இல்லையென்றால், எதிர்க்கட்சி தலைவரிடமும் இல்லையென்பதே மெய்.

செயல்கள் மட்டுமே வரலாற்றில் நிலைக்கும், அறிக்கைகள் அல்ல!

## வாராவாரம் வறுப்போம்

## இது கொஞ்சம் வில்லங்கமான பக்கம்



## கேள்வியும் பதிலும் நாமே

நிருபர்: வணக்கம்... உள்ளூராட்சி தேர்தல் முடிவுகளை எப்படி பார்க்கிறீர்கள்?

அங்கஜன்: நாட்டின் பெரும்பாலான சபைகளை நாங்கள் தான் கைப்பற்றியுள்ளோம். அப்பாவும் வென்றிருக்கிறார். மகிழ்ச்சியாக இருக்கிறது.

நிருபர்: பெரும்பாலான சபைகளை கைப்பற்றியதாக சொல்கிறீர்கள்... சுதந்திரக்கட்சிக்கு பெரிய சறுக்கல் அல்லவா?

அங்கஜன்: இல்லை. சுதந்திரக்கட்சிக்கு இரண்டு கண்கள். ஒரு கண் தலைவர் மைத்திரிபால சிறிசேன. மற்றொரு கண் முன்னாள் தலைவர் மஹிந்த ராஜபக்ச. நான் இருவருடனும் வேலை செய்தவன். இரண்டு கண் பார்வையில் சும்மா பொறி பறக்கவில்லையா?

நிருபர்: மைத்திரியும், மஹிந்தவும் இரண்டு கண்கள் என்கிறீர்கள். சரி. பிறகெதற்கு தேர்தல் பிரசாரத்தில் புலிகளை இழுக்கிறீர்கள்? புலிகளின் பாடல்களை ஒலிபரப்புகிறீர்கள்?

அங்கஜன்: நான் தமிழன். புலிகள் இல்லாதபடியால்தான் நான் அரசியலுக்கு வந்தேன்.

நிருபர்: புலிகள் இல்லாதபடியால்தான் நான் அரசியலுக்கு வந்தேன் என்றால்... அவர்கள் இல்லாதபடியால்தான் அரசியலுக்கு வர முடிந்தது என்று அர்த்தமா?

அங்கஜன்: வில்லங்கமாக கதைக்கிறீர்களே... அது இனநல்லிணக்க அரசு. இனநல்லிணக்க அரசுக்கு பாதிப்பை ஏற்படுத்துவதை போல கதைக்காதீர்கள்.

நிருபர்: இனநல்லிணக்கத்திற்கும் புலிகளை பற்றி கதைப்பதற்கும் என்ன சம்பந்தம்?

அங்கஜன்: இங்க பாருங்க... இது நல்லாட்சி அரசு. இனப்பிரச்சனை தீர்விற்கு முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறோம். தமிழ் தேசிய கூட்டமைப்பும் நமது பங்காளிதான். நானும் அரசாங்கத்தில்தான் இருக்கிறேன். தமிழ் தேசிய கூட்டமைப்பும் அரசாங்கத்தில்தான் இருக்கிறது.

நிருபர்: நான் கேட்டதற்கு இது பதிலல்லவே.

அங்கஜன்: தமிழ் தேசிய கூட்டமைப்பு அரசாங்கத்தில் இருந்தாலும் இந்த மக்களிற்கு என்ன செய்தார்கள்? வேலையற்ற பட்டாரிகள் ஆயிரக்கணக்கில் இருக்கிறார்கள். நான்தான் அவர்களிற்கு வேலை கொடுக்கிறேன்.

நிருபர்: நீங்கள் ஆளும்கட்சி. வேலையற்றவர்களிற்கு வேலை கொடுப்பது அரசாங்கத்தின் கடமை. ஆனால், வேலைக்கு விண்ணப்பிப்பவர்களை, நீங்கள் அரசியலுக்கு பயன்படுத்துவதாக குற்றச்சாட்டு உள்ளதே

அங்கஜன்: மீண்டும் மீண்டும் சொல்கிறேன். இனநல்லிணக்கத்திற்கு குந்தகம் விளைவிப்பதை போல பேசாதீர்கள்.

நிருபர்: சரி நான் வேறு விசயங்களை பற்றி கேட்கிறேன். கட்சிக்கு அண்மையில் ஏற்பட்ட சறுக்கல் எது?

அங்கஜன்: அப்பாவை தவிசாளராக்க முடியாமல் போனது.

நிருபர்: கட்சியின் எதிர்கால திட்டம் என்ன?

அங்கஜன்: அப்பாவை மாகாணசபை உறுப்பினர் ஆக்குவது.

நிருபர்: குடும்ப அரசியல் நடத்துவதாக விமர்சனம் வராதா?

அங்கஜன்: நிச்சயம் இல்லை. கிளிநொச்சி குழந்தைகள் இருவர், ஜனாதிபதி மாமா என்றுதானே கடிதம் எழுதினார்கள். ஜனாதிபதியும் சொல்கிறார், தமிழர்கள் எனது சகோதரர்கள் என. இலங்கை ஒரு குடும்பம்போல. இலங்கையே ஒரு குடும்பமாக இருக்கும்போது, குடும்ப அரசியல்தானே நடத்த முடியும்?

(இதற்கு பின்னரும் நிருபர் அங்கு நிற்பாரா?)

# பேரூந்து நுழையாத வவுனியா பேரூந்து நிலையம்

## தனியாரின் பிடியில் தொடரும் அவலங்கள்

பாதசாரி

இலங்கை போக்குவரத்து சபையின் பேரூந்து ஒன்று கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு இரவு புறப்பட்டது. யாழ்ப்பாணத்தை சேர்ந்த பல்கலைகழக மாணவியொருவரும் அதில் பயணம் செய்தார். அனுராதபுரத்திற்கு சமீபமாக வந்தபோது நடத்துனரிடம் சென்று, அடுத்த பேரூந்து தரிப்பிடத்தை விசாரித்தார்.

ஏற்கனவே இக்கிரிகொல்லாவவில் நிறுத்தப்பட்டு விட்டது, இனி பேரூந்து நிறுத்தப்படாது என்கிறார் நடத்துனர். கழிப்பறைக்கு செல்ல வேண்டியிருப்பதாக அந்த மாணவி தயங்கி தயங்கி கூறுகிறார்.

இனி அருகில் கழிப்பறை வசதியுடன் பேரூந்து தரிப்பிடங்கள் கிடையாது. வவுனியாவில் பேரூந்தை நிறுத்தலாமென நினைத்து, வவுனியா வரை பொறுத்துக் கொள்ளுமாறு கூறுகிறார்கள்.

வவுனியா புதிய பேரூந்து நிலையத்திற்குள் பேரூந்தை கொண்டு சென்று, மாணவியை கழிப்பறைக்கு சென்று வருமாறு நடத்துனர் கூறுகிறார். மாணவி பேரூந்தை விட்டு இறங்குவதற்குள், புதிய பேரூந்து நிலையத்திற்குள் நின்ற தனியார் பேரூந்துகளின் நடத்துனர்களும், சாரதிகளும் ஓடிவந்து, இ.போ.ச பேரூந்தை வளைத்துக் கொண்டார்கள். உடனடியாக பேரூந்து நிலையத்திற்கு வெளியில் செல்லுமாறு அடாவடியில் ஈடுபட தொடங்கினர். மாணவியின் அவசர தேவையை கூறி, அதற்காகவே பேரூந்து நிலையத்திற்குள் வந்ததாக இ.போ.ச நடத்துனரும், சாரதியும் கூறினார்கள். ஆனால் தனியார் துறையினர் இதை ஏற்கவில்லை. மாணவியின் அவசர தேவையென நாடகம் ஆடி பேரூந்து நிலையத்திற்குள் நுழைந்ததாக கூறி, பேரூந்தை வெளியேற்றினார்கள்.

பின்னர், யாழ்ப்பாண திசையில் சிறிது தூரம் பேரூந்து வந்து, குடியிருப்புக்கள் அற்ற பிரதேசமொன்றில் மாணவியை இறக்கி, பேரூந்திற்குள் இருந்த தண்ணீர் கானை நடத்துனர் கொடுத்தனுப்பினார்.

இது ஒரு கற்பனை கதையல்ல. இரண்டு வாரங்களின் முன்னர், கோண்டாவில் டிப்போவை சேர்ந்த பேரூந்து ஒன்றில் நடந்த உண்மைக் கதை.

பேரூந்து நிலையத்திற்குள் பேரூந்துகள் செல்ல முடியாத அவசர தேவைக்காக கூட பயணியொருவர் பேரூந்து நிலைய கழிப்பறையை பாவிக்க முடியாத விசித்திர நடைமுறையுள்ள, இலங்கையின் ஒரேயொரு பேரூந்து நிலையமான வவுனியா புதிய பேரூந்து நிலையத்தில் ஏன் இந்த நடைமுறை? அங்கு என்னதான் நடக்கிறது?

வவுனியா பேரூந்து நிலையம் அமைக்கப்பட்ட காலத்தில் இருந்தே சர்ச்சைக்கு குறைவில்லாதது. அது அமைக்கப்பட்டபோது, மஹிந்த ராஜபக்ச ஆட்சியில் இருந்தார். அப்பொழுது எந்த திட்டமும் உள்ளூராட்சி நிர்வாகத்துடன் கலந்தாலோசிக்கப்படுவதில்லை. அப்பொழுது அமைச்சராக இருந்த ரிசாட் பதியுதீனின் நிதி ஒதுக்கீட்டில் தனியார் பேரூந்து நிலையமாகவே இது அமைக்கப்பட்டது.

வவுனியாவிற்கு பொருத்தமான பேரூந்து நிலையம் எங்கே அமைக்கப்பட வேண்டும் என்பதை, புதிய வவுனியா நகர அமைப்பு திட்டத்தில் குறிக்கப்பட்டுள்ளது. ஆனால் அதையெல்லாம் கருத்தில் எடுக்காமல், இந்த பேரூந்து நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த பேபேரூந்து நிலைய திறக்கப்பட்ட போது, ஏதோ சம்பிரதாயத்திற்கு அழைக்கப்படுவதை போல வடமாகாணசபை போக்குவரத்து அமைச்சர் அழைக்கப்பட்டார்.

வடமாகாணசபையுடன் கலந்தாலோசிக்காமல் வவுனியா பேரூந்து நிலையம் அமைக்கப்பட்டது உண்மை தான். ஆனால், இன்று ஏற்பட்டுள்ள சிக்கலிற்கு அது மட்டுமா காரணம்?

நிச்சயமாக இல்லை. அதையும் விட வேறு முக்கியமான காரணங்கள் உள்ளன. அதில் முதன்மையானது போக்குவரத்துதுறையில் ஏகபோகம் செலுத்த முனையும் தனியார் துறை!

வடக்கில் தனியார் போக்குவரத்துறை முறையாக ஒழுங்கமைக்கப்படவில்லை. திடீர் திடீரென கோரிக்கைகளை முன்வைத்து போராட்டத்தில் ஈடுபடுவது, அரச பேரூந்து சாரதிகளை தாக்குவது, போக்குவரத்து சேவையை ஏதோ தமது வீட்டு விசயம் போல நடக்க முனைவதென ஏகப்பட்ட சிக்கல்கள் உள்ளன. அதை ஒழுங்கமைக்க வேண்டியது, வடக்கு போக்குவரத்து அமைச்சர்.

முன்னைய போக்குவரத்து அமைச்சர் டெனிஸ்வரன் அதை செய்யவில்லை. அவர் அதிகமும் தனியார் போக்குவரத்துதுறையுடன் நெருக்கத்தை பேணினார். தனியார் போக்குவரத்துறையினரின் பின்னால் பெரிய வாக்கு வங்கியிருப்பதால், அவர்களை பகைக்க யாரும் விரும்புவதில்லை.

வடக்கு தனியார் போக்குவரத்து துறை இன்னும் அதிகமாக மேம்பட வேண்டுமென்பதைதீபத்தில்ஏற்கனவே பலமுறை குறிப்பிட்டுள்ளோம். மக்களிற்கான சேவையொன்றை செய்ய, அரசாங்கத்தால் அங்கீகாரம் வழங்கப்பட்டவர்களே அவர்கள். போக்குவரத்து சேவையை ஆரம்பிப்பதற்கு முன்னர்வரைதான் அந்த பேரூந்து ஒரு தனியாருக்கு சொந்தமானது. வழித்தடத்தில் சேவையை ஆரம்பித்து முடிக்கும்வரை அது மக்களிற்காக சேவையின் ஒரு அங்கம். தனியார் பேரூந்துகளில், “நெருங்கி நில்லுங்கோ, இல்லாட்டில் அடுத்த ஹோல்ட்டில் இறக்கிவிட்டிடுவம்“ என அடிக்கடி சொல்வதை கேட்டிருப்பீர்கள். அரச போக்குவரத்து சேவையில் மக்களிற்கு எவ்வளவு உரிமையுள்ளதோ, அதேயளவு உரிமை தனியார் பேரூந்துகளிலும் உள்ளது.

இந்த விழிப்புணர்வு மக்களிடமும் இல்லை. அந்த பொறுப்புணர்வு தனியார் துறையிடமும் இருப்பதில்லை.

வடக்கு போக்குவரத்து துறையில் அண்மைக்காலமாக ஏற்பட்டுள்ள சீரழிவிற்கு பிரதான காரணம் இதுதான். போக்குவரத்தை ஒழுங்கமைப்பது அரசு, நாட்டின் வளர்ச்சிக்கு





புதிய பேரூந்து நிலையத்தில் இருந்து தனியார், இ.போ.ச சேவைகள் நடக்க வேண்டுமென்ற முடிவெடுக்கப்பட்ட பின்னர் கடந்த இரண்டு மாதத்தில் வடக்கில் இ.போ.ச வினர் மீது தனியார்துறையினர் நான்குமுறை தாக்குதல் நடத்தியுள்ளனர். ஒரு தாக்குதல் தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துவிட்டு வெளியேறிய நடத்துனர் ஒருவர் தடக்கி விழுந்து, வைத்தியசாலையில கோமா நிலையில் இருந்து மரணமாகியுள்ளார்.



தொடர்ச்சி அடுத்த பக்கம்...

ஏற்ப போக்குவரத்துதுறையையும் வளர்க்க வேண்டும் என்பதில் தனியார்துறையினர் ஒத்துழைக்காமலிருப்பதே சிக்கல். எவ்வளவு மோசமான சேவையை வழங்கினாலும், யாரும் தம்மை கேள்வி கேட்ககூடாதென அவர்கள் நினைக்கிறார்கள்.

வவுனியா புதிய பேரூந்து நிலையம் அமைக்கப்பட்டது தனியாருக்காக. ஆனால், தனியாரும், இ.போ.சவும் வேறுவேறு இடங்களிலிருந்து சேவையை நடத்தியபோது, தனியார் துறை இலாபமீட்ட முடியவில்லை. இ.போ.சவை புதிய பேரூந்து நிலையத்திற்கு கொண்டு வந்தாலே, இலாபமீட்டலாம். அதை கச்சிதமாக செய்து முடித்தும் விட்டனர். இந்த விசயத்தில், பணமும் விளையாடியிருக்கிறது!

புதிய பேரூந்து நிலையத்தில் இரண்டு தரப்பும் ஒன்றாக சேவையில் ஈடுபட வேண்டுமென, அரச நிர்வாகத்தில் முடிவெடுக்கப்பட்டு, நடைமுறைப்படுத்துவதற்கு தனியார் துறையினர் பெருமளவு பணத்தை வாரியிறைத்ததாக, இ.போ.ச தரப்பில் குற்றம்சுமத்தப்படுகிறது.

தனியார் துறையும், இ.போ.சவும் மட்டுமே. டிப்போக்கள் ஈட்டும் இலாபத்திலிருந்தே எஞ்சிய சம்பளத்தை வழங்குகிறார்கள். இந்த நடைமுறை நீடிக்கும்வரை, இ.போ.ச போக்குவரத்து சேவையில் தேவைக்கேற்ப தன்னை மெருகேற்றிக் கொண்டிருக்கும். இன்று இலங்கையின் போக்குவரத்துதுறை ஓரளவாவது நல்ல நிலைமைக்கு சென்றிருப்பதற்கு, போக்குவரத்து சூழலை வெற்றிகொள்ள வேண்டுமென்ற சவாலை இ.போ.சவின் முன்பாக வைத்ததே. இந்த நிலையில், தனியார்துறையினர் பணமீட்டிய பின்னரே, இ.போ.ச வருமானத்தை பார்த்துக்கொள்ளலாமென்ற எண் வெற்றியும் கண்டுவிட்டனர். ஆனால் இ,போ.ச பேரூந்துகளிற்குத்தான் இது கறாரான நடைமுறையாக உள்ளது. முல்லைத்தீவில் இருந்து வரும் தனியார் பேரூந்து புதிய பேரூந்து நிலையத்திற்குள் நுழைந்து பயணிகளை ஏற்றுகிறது. புதிய பேரூந்து நிலையம் தனியார் போக்குவரத்துதுறையினரின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது.

இது பயணிகளின் அடிப்படை உரிமைகளின் மீது நடத்தப்பட்ட தாக்குதல் என்பதில் சந்தேகம் இல்லை. தனியார்துறையின் வருமான மீட்டலுக்காக மக்களின் உரிமை மீறப்பட்டுள்ளது. மக்களிற்காக

**நீரிழிவு நோயாளிகள் மற்றும் அவசர தேவையுடையவர்கள் மலசல கூடங்களை பாவிக்க வேண்டும். தனியார் ஹொட்டல்களில் பேரூந்துகள் நிறுத்தப்படும்போது பெண்கள் அங்கு கழிப்பறைக்கு செல்வது குறைவு. சுத்தமின்மை, பாதுகாப்பின்மை போன்ற காரணங்களால் தவிர்த்து விடுகிறார்கள்.**

மலசலகூடத்தை பாவிப்பதென்றால் என்ன செய்வது? பிறகெதற்கு பேரூந்து நிலையங்கள்?

நீரிழிவு நோயாளிகள் மற்றும் அவசர தேவையுடையவர்கள் மலசல கூடங்களை பாவிக்க வேண்டும். எல்லா பேரூந்துகளும் எல்லா பேரூந்து நிலையங்களிற்கும் சென்றுவர வேண்டும். தனியார் ஹொட்டல்களில் பேரூந்துகள் நிறுத்தப்படும்போது பெண்கள் அங்கு கழிப்பறைக்கு செல்வது குறைவு. சுத்தமின்மை, பாதுகாப்பின்மை போன்ற காரணங்களால் தவிர்த்து விடுகிறார்கள். இந்த கட்டுரையின் தொடக்கத்தில் கூறிய மாணவியின் கதையும் இப்படியானது தான். பாதுகாப்போ, சுகாதாரமோ ஏதோவொன்றால் அவர் ஹொட்டல் கழிவறையை தவிர்த்து, நடுவழியில் அந்தரிக்க நேர்ந்தது.

வடக்கு முதலமைச்சர்தான் இப்போது போக்குவரத்து அமைச்சரும். வவுனியா புதிய பேரூந்து நிலையத்திற்குள் வெளியிட பேரூந்துகள் வரக்கூடாதென்ற விசித்திர முடிவை எடுத்ததில் முதலமைச்சரிற்கும் பங்குள்ளது. "முதலமைச்சரை சுற்றியுள்ள அதிகாரிகள், தனியார்துறையின் பிடியில் உள்ளனர். பணம் கொடுத்தே






ஒன்றாக சேவையில் ஈடுபடுவதா இல்லையாஎன்பதைபற்றிநாம்எதையும் குறிப்பிடப் போவதில்லை. அதை அரச நிர்வாகமே முடிவெடுக்கட்டும். ஆனால், தனியார்துறையினரால் அடிக்கடி தாக்கப்படும் இ.போ.சவினர் பாதுகாக்கப்படும் பொறிமுறை உருவாக்கப்படாமல், இரண்டு தரப்பும் எப்படி ஒரேயிடத்தில் சேவையில் ஈடுபடலாம்?

ஒருங்கிணைந்த நேர அட்டவணை தான் இந்த பிரச்சனைக்கு தீர்வு. ஆனால், ஒருங்கிணைந்த நேர அட்டவணை தயாரிக்கப்படும்போது, தனியே தூரசேவைகளிற்கு மட்டுமாக தயாரிக்கப்படுவதையே தனியார் துறையினர் விரும்புகிறார்கள். உள்ளூர் சேவைக்கு ஒருங்கிணைந்த நேர அட்டவணை தயாரிக்கப்பட்டால் தனியார் துறையினரே அதிகம் சிக்கல்படுவார்கள்.

இ.போ.ச என்பது அரசால் இயக்கப்படுவது, தனியாருடன் ஏன் அவர்கள் போட்டியிடுகிறார்கள் என்றும் ஒரு அப்பிராயம் உள்ளது. ஆனால் இ.போ.ச பணியார்களிற்கு அரசாங்கம் வழங்குவது 16,200 என்ற அடிப்படை சம்பளத்தை

புதிய பேரூந்து நிலையம் நகரின் ஒதுக்குபுறமாக உள்ளதால், நகரிலிருந்து புதிய பேரூந்து நிலையத்திற்கு வரும் பயணிகளிற்காக இலவச சேவையை தனியார்துறையினர் நடத்துகிறார்கள். ஆனால், அவர்களை தனியார்துறை பேரூந்துகளில் ஏற்றும் உத்தியாகவே இந்த சேவை நடக்கிறது. இலவசமாக ஏற்றிவரப்படுபவர்கள் தனியார் பேரூந்துகளில் ஏற நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். தனியார் பேரூந்துகளில் இலவசமாக புதிய பேரூந்து நிலையத்திற்கு வருபவர்கள், அங்கிருந்து இ.போ.ச பேரூந்துகளிற்கு செல்வதென்றால், தனியார் பேரூந்துக்காரர்களின் சிலபல வசைகளை கடந்துதான் செல்ல வேண்டியுள்ளது.

ணத்தில் அதிகாரிகள் செயற்பட முடியாது. அப்படி செயற்பட்டால், இ.போ.ச இற்கு தேவையான மொத்த செலவையும் அரசாங்கமே வழங்க வேண்டும்.

வவுனியா புதிய பேரூந்து நிலையத்தின் விசித்திர நடைமுறைகள் முற்றிலும், தனியார்துறைக்கு சாதகமானது. இலங்கையின் போக்குவரத்துதுறையை தனியாரிடம் அடகு வைப்பதை போன்றது.

தூர இடங்களிற்கான பேரூந்துகள் வவுனியா புதிய பேரூந்து நிலையத்தில் இருந்துதான் புறப்படுகின்றன. பேரூந்து நிலையத்திற்கு வரும் பயணிகளை மொத்தமாக ஏற்றுவதற்காக, வெளிமாவட்டங்களில் இருந்து வரும் பேரூந்துகள் புதிய பேரூந்து நிலையத்திற்குள் வரக்கூடாதென தனியார் துறையினர் வலியுறுத்தி, அதில் போக்குவரத்து சேவை என்பது போய், தனியார் பேரூந்துகளிற்காக மக்கள் என்ற ரீதியில் எடுக்கப்பட்ட முடிவு.

பேரூந்து நிலையத்தில் இருந்து புறப்படும் பேரூந்தொன்று அண்ணளவாக மூன்று மணித்தியாலத்தில் யாழ்ப்பாணத்தை அடைகிறது. ஆனால் கொழும்பிலிருந்து வரும் பேரூந்து, வவுனியாவிலிருந்து யாழ்ப்பாணத்தை அடைய இரண்டரை மணித்தியாலத்தைமட்டுமேஎடுக்கிறது. எந்த பேரூந்தில் செல்வதென்பதை தீர்மானிக்கும் உரிமை பயணிக்கு மட்டுமேஉண்டு.ஆனால்தனியார்துறை அதை மறுக்கிறது.

வெளிமாவட்டங்களில்இருந்துவரும் பேரூந்துகள் வவுனியா புதிய பேரூந்து நிலையத்திற்குள் நுழைய கூடாதென கூறப்படுவது மோசமான நிர்வாக முடிவு. தொலைவிலிருந்து வருபவர்கள் அதிகாரிகளை விலைக்கு வாங்கி விடுகிறார்கள். சுலபமாக கையாளப்பட்டிருக்க வேண்டிய இந்த விசயத்தை, பிரச்சனையாக்கி, தமக்கு சாதகமாக வளைக்க தனியார்துறை பணத்தை இறைத்துள்ளது" என இ.போ.ச தொழிற்சங்கத்தை சேர்ந்தவர்கள் குற்றம்சுமத்துகிறார்கள். போக்குவரத்து நடைமுறைகளை உருவாக்குவதில் தனியார் அல்லது இ.போ.சவின் விருப்பு வெறுப்பை கவனிக்ககூடாது. தனியே போக்குவரத்து வசதியை மேம்படுத்தும் ஒரேயொரு நோக்கம் மட்டுமே இருக்க வேண்டும். அதற்காக இரண்டு தரப்பையும் தயார்படுத்தி, செயற்பாட்டு ஒழுங்கை ஏற்படுத்த வேண்டும்.


அதேபோல, இந்த பிரச்சனையை இ.போ.சவின் தொழிற்சங்கங்கள் கையாண்ட விதமும் மக்களிடம் அதிருப்தியை ஏற்படுத்தியிருந்தது. கட்சி அரசியலுக்குள்ளால் பிரச்சனையை தீர்க்க முயன்றதே, இழுபறியாக நீடிப்பதற்கு காரணம் என்ற விமர்சனமும் உள்ளது.

எது எப்படியோ முதலமைச்சர் அவசரமாக தலையிட்டு இந்த பிரச்சனைக்குதீர்வு காண வேண்டியது அவசியம்.











# புலிகளிற்கு வாய்ப்பாகிய ராஜிவின் தாமதம்!



## ராஜிவ் காந்தி கொலை 26
### புலிகள் சிக்கிய கதை

கே.ராகோத்தமன்

கூட்டத்துக்கு ராஜிவ் காந்தி வந்ததும் நேரே மேடைக்குப் போய்விடுவார். வழியில் மாலை போடுகிற திட்டம் முதலில் கிடையாது. மேடையில்தான் மாலைகள். எனவே மாலை போட அனுமதிக்கப்பட்டிருந்தவர்களை முதலில் மேடைக்கு அருகே பின்புறம்தான் நிற்க வைத்திருந்தார்கள்.

ஆனால் ராஜிவ் வருவது மிகவும் தாமதமாகிப் போனதால் (எட்டு மணிக்கு வருவதாக இருந்தவர், வந்து சேர்ந்தபோது மணி பத்து) மேடையில் வரிசையாக மாலை போட்டுக்கொண்டிருக்க முடியாத சூழல்.

ஒப்புக்கு ஒரு மூன்று பேரை மட்டும் மேடையில் மரியாதை செய்ய ஏற்பாடு செய்துவிட்டு, மற்றவர்களை, அவர் வரும்போதே மாலை போட்டுவிடச் சொல்லி ஏ.ஜே.தாஸ் என்னும் நிர்வாகி சொல்லியிருந்தார். மைக்கிலேயே இதனை அறிவித்தார் அவர். இந்த திடீர் மாற்று ஏற்பாட்டில் கூட்டம் சற்று கலகலத்துப் போனது.

மாலை போடும் ஆர்வத்தில் மேடைக்குப் பின்னால் காத்திருந்த முழுக் கூட்டமும் முண்டியடித்துக்கொண்டு முன்புறம் ஓடிவரத் தொடங்கிவிட்டார்கள். இந்தக் கூட்டத்தில், லஷ்மி ஆல்பர்ட், ரமாதேவி மற்றும் பலர் பட்டியலில் இல்லாதவர்கள் ஆவார்கள்.

இந்த மாலை விவகாரத்தை ஒழுங்குபடுத்துவதற்கெனவே ராஜேந்திரன் என்னும் சப் இன்ஸ்பெக்டரை நியமித்திருந்தார்கள்.

துண்டுக் காகிதம்.

ராஜிவ் வரும்போது யார் யார் அவருக்கு மாலை போடவேண்டும் என்று முன்கூட்டியே நிகழ்ச்சி நிர்வாகிகளைக் கேட்டு, பட்டியல் தயாரித்து, அவர்களை மட்டும் அனுமதிக்க வேண்டியது அவரது பணி.

அதே மாதிரி அனுசுயா என்கிற பெண் சப் இன்ஸ்பெக்டர் ஒருவரிடம், அப்படி ராஜிவை நெருங்கி மாலையிட வருகிற அனைவரையும் முன்கூட்டியே பரிசோதித்து வைக்க வேண்டுமென்றும் உத்தரவு இருந்தது.

ஆனால் இரண்டும் நடக்கவில்லை. சப் இன்ஸ்பெக்டர் ராஜேந்திரன் மாலை போடுகிறவர்களின் பட்டியலை எழுதி வைத்திருந்த லட்சணத்தைப் பின்னால் நாங்கள் பார்க்க நேர்ந்தபோது அதிர்ச்சியின் உச்சத்துக்கே சென்றோம்.

ஒரு கசங்கிப் போன துண்டுக் காகிதத்தில், ஒரு வரிசையில்லாமல், சீரியல் நம்பர் இல்லாமல், மாலை போடுகிறவர் யார் என்ன என்கிற விவரம் இல்லாமல் ஏதோ சொல்லிவிட்டார்களே என்பதனால் கீழே கிடந்த குப்பைக் காகிதத்தில் நாலு பெயர்களைக் கிறுக்கி வைத்திருந்தார்!

இம்மாதிரி விவிஐபிக்கள் பொதுக் கூட்டத்துக்குப் பாதுகாப்புக்குச் செல்லும் காவலர்களுக்கென்று இதற்கெல்லாம் தனியான விதிமுறைகளே உண்டு.

மாலை போடுகிறவர்களின் பெயர்களை எழுதி வை என்று சொன்னால், பெயர், முகவரி, அவர் யார், என்ன வேலை பார்க்கிறவர், அவரை சிபாரிசு செய்தவர் யார் என்று அனைத்து விவரங்களையும் ஒழுங்காக ஒரு நோட்டுப்புத்தகத்தில் எழுதியாக வேண்டும்.

பொலிஸ் டைரி என்றே சொல்வார்கள். ஒவ்வொருவரும் தமக்கு ஒதுக்கப்படும் பணிகளைத் துல்லியமாக நோட்டுப்புத்தகத்தில் குறிப்பிட்டாக வேண்டியது அவசியம். சப் இன்ஸ்பெக்டர்கள் ஒழுங்காகக் கடமையைச் செய்கிறார்களா என்று உள்ளூர் எஸ்.பி கவனிக்க வேண்டும்.

ஆனால் அத்தனை ஹைஅலர்ட் தரப்பட்டு செக்யூரிடிக்கு நாநூறு பேரைப் போட்டு நடத்தப்படும் பொதுக்கூட்டத்துக்கு அனுப்பப்பட்ட ஒரு சப் இன்ஸ்பெக்டர், சற்றும் பொறுப்பில்லாமல் ஒரு துண்டுச் சீட்டில் மாலை போடுகிறவர்கள் பெயர்களை மட்டும் கிறுக்கி வைத்திருந்தார்!

ஆயிரக்கணக்கான பேர் கலந்து கொள்ளும் ஒரு நிகழ்ச்சியில் முப்பது நாற்பது பேர் மாலையிடுகிறார்கள் என்று வைத்துக்கொள்ளுங்கள். சும்மா குப்புசாமி, கோவிந்தசாமி என்று பெயர்களைக் கிறுக்கி வைப்பதால் என்ன பயன்? பின்னால் பிரச்னை என்று வரும்போது யாரைத் தேடிப்போய் எப்படி விசாரிப்பது?

அப்புறம் பாதுகாப்பு ஏற்பாடுகள் எப்படி இருக்கவேண்டும் என்று பக்கம் பக்கமாக ஐ.பி. ரிப்போர்ட் அனுப்பி என்ன பிரயோஜனம்?

மாநில பொலிஸ் என்றில்லை. பொதுவாக அரசு இயந்திரம் செயல்படும் லட்சணம், பெரும்பாலும் இதுதான்!

இங்கு மட்டுமல்ல. அநேகமாக தேசம் முழுவதுமே. 1984ம் வருடம் ஜூன் மாதம் 19ம் திகதி அன்று டெல்லியில் இண்டெலிஜென்ஸ் ப்யூரோ அதிகாரிகளின் உயர் மட்டக் கூட்டம் ஒன்றில் ஒரு விஷயம் பேசப்பட்டது.


சீக்கியர்களால் இந்திரா காந்திக்கு ஏதாவது அபாயம் நேரலாம் என்று அந்தக் கூட்டத்தில் எச்சரிக்கை செய்தார்கள். இதைக் கேட்டதுமே கோபமுற்று மான்சிங் என்றொரு ஐ.பி.எஸ். ஆபீசர் வேலையை ராஜினாமா செய்துவிட்டுப் போனார்.

பல சீக்கியக் காவல் துறை அதிகாரிகளும் ஊழியர்களும் தங்கள் கண்டனத்தைப் பதிவு செய்யும் விதமாக டிபார்ட்மெண்டுக்குள் கிளர்ச்சி செய்யத் தொடங்கினார்கள்.

ஒருவாறு அதையெல்லாம், வெளியே தெரியாதவாறு அடக்கிவிட்டார்கள் என்றாலும் அந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட மிக முக்கியமானதொரு முடிவு இந்திரா காந்தி பாதுகாப்புக்கு இதுநாள் வரை நியமிக்கப்பட்டிருக்கும் அத்தனை சீக்கியர்களையும் உடனடியாகப் பணிமாற்றம் செய்ய வேண்டும் என்பது.

அவரது வீடு, அலுவலகம் இரண்டு இடங்களிலும். அதன்படி இந்திரா காந்தி வீட்டில் இருந்த சீக்கியக் காவலர்களை இடம் மாற்றி உத்தரவுகள் அனுப்பப்பட்டுவிட்டன.

(தொடரும்)


THE JUDICIAL MAGISTRATE
RAMANATHAPURAM
1 OCT 1991
4492
7/9/91
D-602



டேவிட் கிம்சிகாரில் துப்பாக்கி சன்னங்கள் துளைத்துள்ளதை கவனிக்கவும்.

# ஒரு புலனாய்வு அதிகாரியின் இராஜதந்திர விளையாட்டு - 03

இஸ்ரேல் ஊடாக ஈரானிற்கு ஆயுதம் வழங்கும் திட்டத்தை அமெரிக்க அரசு இரகசியமாக பரிமாறியது. இஸ்ரேலும் இதை ஏற்றுக்கொண்டு, 1983 ஜூன் 28ம் திகதி, இது பற்றி பேச அமெரிக்காவிற்கு சென்றார் கிம்சி என கடந்த வாரம் முடித்திருந்தோம்.

ஆயுத சப்ளை பற்றி கிம்சிக்கு அமெரிக்க அதிகாரிகள் விளக்கமளித்தனர். அனைத்தையும் கேட்டுக் கொண்டிருந்த கிம்சி, “இந்த ஆயுத சப்ளையை ரகசியமாக நாமே (இஸ்ரேலால்) முடிக்கலாம். ஆனால் சில கண்டிஷன்கள் உண்டு” என்றார்.

“சொல்லுங்கள்”

“இதைமுழுக்கமுழுக்கஇஸ்ரேல்தான் கையாள வேண்டும். சி.ஐ.ஏ இன் தலையீடுகள் இருக்கவே கூடாது. நாமே செய்வதை போல செய்து முடிப்போம். டீலா, நோ டீலா?”

“டீல்.. அப்படியென்றால் மொசாட்டே இதை செய்து கொள்ளட்டும். நமது சி.ஐ.ஏ இதில் தலையே போடாது”
“ஆனால் இன்னொரு கண்டிஷனும் உண்டு”

“இன்னுமொன்றா... சொல்லுங்கள்”
“கொஞ்சம் அதிர்ச்சியாகத்தான் இருக்கும். ஆனால் நான் சொல்லியே ஆகணும். மொசாட் இதில் தலை போடாது”

“அப்படியென்றால்?”

“நான் அமெரிக்காவிற்கு புறப்படுவதற்கு முன்னர் நமது பாதுகாப்பு அமைச்சர் யிட்சக் ரொபின் சில விசயங்களை எனக்கு சொல்லியுள்ளார். அதில் முக்கியமானது, இதில் மொசாட்டை ஈடுபடுத்த அவர் விரும்பவில்லை. இந்த டீலை முழுமையாக என்னையே கவனிக்க சொல்லியிருக்கிறார்”

மொசாட் இந்த ஒப்ரேஷனில் ஈடுபடாததற்கு இன்னொரு காரணமும் உள்ளது. அந்த காரணம், வாசகர்களிற்கும் தலைசுற்ற வைக்கும். புலனாய்வு அமைப்புக்கள் எப்படியெல்லாம் வேலை செய்கிறார்கள் என்பதை புரிந்துகொள்ள முடியும்.

ஒலிவர் நோர்த்தான் இந்த ஆயுத சப்ளையில் ஈடுபட போகிறார் என்பதை சி.ஐ.ஏ தலைவராக இருந்த வில்லியம்



இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சர் ஏரியல் ஷரோனோடு, கஸ்பர் வீன்பெர்க்கர்.

கேசி தெரிந்து கொண்டார். ரீகனின் உதவியாளர்கள் வட்டத்திலிருந்து அந்த தகவலை பெற்றார். இப்படியான ஆயுத சப்ளை விசயங்களை சி.ஐ.ஏ தான் செய்ய வேண்டும். ஆனால் அமெரிக்க ஜனாதிபதி ஒலிவர் நோர்த் என்ற கடற்படை அதிகாரியிடம் பொறுப்பை கொடுத்திருக்கிறார், அப்படியானால் சி.ஐ.ஏ ஐ காய் வெட்டுகிறார்களா? சி.ஐ.ஏ இற்கு தெரியாமல் டீல் பண்ண போகிறார்களா? சி.ஐ.ஏ இல்லாவிட்டால் வேறு ஒரு நாட்டின் உளவுத்துறையின் உதவி இந்த டீலுக்கு அவசியம் தேவையல்லவா?

இதையெல்லாம் கூட்டிக்கழித்து பார்த்த வில்லியம் கேசி, அமெரிக்காவின் அடுத்த ஒப்ஷன் மொசாட்டாகத்தான் இருக்குமென்பதை ஊகித்தார்.

இதை ஊகித்ததும் வில்லியம் கேசி செய்தது, அப்போதைய மொசட் தலைவர் நாகும் அட்மோனிக்கு தொலைபேசி அழைப்பை எடுத்து பேசினார்.

“அமெரிக்கா ஒரு ரிஸ்க்கான விசயத்தை செய்கிறது. ஏற்கனவே சி.ஐ.ஏ இன் பெயர் டமேஜாக இருப்பதால் எங்களை தவிர்த்து விட்டு செயற்படுகிறார்கள். அவர்கள் எங்களிடம் வந்திருந்தாலும், இது ரிஸ்க்கானது என்பதை புரிய வைத்திருப்போம். ஆனால் அவர்கள் ஈரானுக்கு ஆயுதம் சப்ளை செய்வதில் விடாப்பிடியாக நிற்கிறார்கள். நாங்கள் இல்லையென்றால், அடுத்த ஒப்ஷனாக நீங்கள் (மொசாட்) தான் இருப்பீர்கள். ரிஸ்க்கான விசயம் யோசித்து செய்யுங்கள்”

“நேரடியாக சொல்லுங்கள். நாங்கள் இதில் சம்பந்தப்பட வேண்டாமா?”

“சம்பந்தப்படுவதை நாங்கள் விரும்பவில்லை. உங்களிற்கும் இதில் சிக்கல் உள்ளது. எப்படியோ விசயம் லீக் ஆனால், மொசாட்டிற்கும் கெட்ட பெயர் வரும்”

“சரி.. நான் வேறுவிதமாக இதை டீல் பண்ணுகிறேன்”

இதற்குபின், இஸ்ரேல் பாதுகாப்பு அமைச்சரை சந்தித்த அட்மோனி, “அமெரிக்கா ஒரு வில்லங்கமான உதவி கேட்டு நம்மிடம் வருமென தெரிகிறது. நாம் இதிலிருந்து ஒதுங்கியிருப்பது தான் நல்லது” என கூறிவிட்டார். அட்மோனி அப்படி சொன்னதன் பின்னர் மொசாட்டை இதில் ஈடுபடுத்துவது முடியாத விசயம் என்பது, யிட்சக் ரொபினிற்கு தெரியும். இதனால்தான் டேவிட் கிம்சியிடம் இந்த பொறுப்பை ஒப்படைத்தார்.

அமெரிக்க அதிகாரிகளுடன் முதல் சுற்று பேச்சை முடித்துவிட்டு, புளோரிடாவிற்கு சென்ற கிம்சி, மூன்று நாட்கள் பண்ணை வீடொன்றில் தங்கியிருந்தார். ஒரு யூத பணக்காரரிற்கு சொந்தமான பண்ணை வீடது. அங்கிருந்தபடியே ஈரானிற்கு ஆயுதம் சப்ளை செய்யும் திட்டத்தை தயாரித்தார்.

பின்னர் திட்டத்துடன் மீண்டும் வோஷிங்டன் சென்று, அமெரிக்க பாதுகாப்பு செயலாளர் கஸ்பர் வீன்பெர்க்கரை சந்தித்தார். அந்த உரையாடல் பற்றி டேவிட் கிம்சி பின்னாளில், ஊடகங்களிற்கு பேட்டியளிக்கும்போது குறிப்பிட்டிருந்தார். ரைம், நியூஸ் ஹெரால்ட் இதழ்களில் கிம்சியின் விரிவாக பேட்டியளித்திருந்தார்.

“ஈரானுக்கு இரகசியமாக ஆயுதம் சப்ளை செய்யும் திட்டம் ரெடியாகிவிட்டது. அமெரிக்காவோ, இஸ்ரேலோ இதில் சம்பந்தப்பட்டதென்ற விசயம் வெளியில் வராது. சில தேர்ட் பார்ட்டி ஆட்கள் மூலம் விசயத்தை முடித்து விடலாம். ஆனால்...”

“என்ன, ஆனால்... ஏதாவது சிக்கலா?”

“ம்... கொஞ்சம் சிக்கல்தான். எனது தொடர்புகள் மூலம் ஒரு விசயத்தை அறிந்தேன். அமெரிக்கர்களை பணயக்கைதியாக பிடித்து வைத்துள்ள தீவிரவாத இயக்கம், ஈரானின் கட்டுப்பாட்டில் இல்லை. நேரடியாக ஈரான் அவர்களுடன் தொடர்பில் இருப்பதாகவும் தெரியவில்லை”

கிம்சீ 'இதை சொல்ல, கஸ்பர் வீன்பெர்க்கர் பெரிதாக சிரித்தார்.

“இந்த விசயத்தில் நாங்களும் போதிய அப்டேற்றில் இருக்கிறோம். அந்த இயக்கத்துடன் ஈரான் நேரடியாக தொடர்பில் இல்லையென்பதை நாங்கள் நன்றாக அறிந்து வைத்திருக்கிறோம். அதைவிட நன்றாக இன்னொரு தகவலையும் அறிந்து வைத்திருக்கிறோம்”

“என்ன?”

“அந்த இயக்கத்திற்கான எல்லா உதவிகளையும் ஈரானிய உளவுத்துறை



மொசாட் தலைவர் நகும் அட்மோனி.

ஆட்கள்தான் • இரகசியமாக செய்கிறார்கள். உளவுத்துறை உதவி இல்லாவிட்டால் அந்த இயக்கத்திற்கு ஆயுதம், பயிற்சி, நிதி, இருப்பிடம் எதுவும் கிடையாது. சி.ஐ.ஏ ஆட்கள் அதுபற்றிய நிறைய ரிப்போர்ட் தந்துள்ளார்கள்”

“மேலே சொல்லுங்கள்”

“அந்த இயக்கம் ஈரானின் பின்னணியில் இயங்குகிறதென்றால், ஈரானிற்கு அழுத்தம் கொடுத்தால் பயணக்கைதிகளை விடுவிக்கலாம். இல்லையா?”

“எனக்கு அப்படி தோன்றவில்லை. ஈரானிலுள்ள என்னுடைய

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

மினித்தொடர் 8



# அமெரிக்க பாணி போருத்தியை பாவித்த புலிகள்!

## இறுதியுத்தத்தில் இராணுவம் பாவித்ததும் அதுதான்!

### யுத்தத்தின் இறுதி நிமிடங்கள்... கட்டுக்கதைகளும் உண்மைக்கதைகளும்

விடுதலைப்புலிகள் அமைப்பிற்குள் சக்தி வாய்ந்த தளபதியாக இருந்த கடாபி பற்றிய நிலவிய கட்டுக்கதைகளை பற்றியும் அவற்றின் உண்மைத்தன்மை பற்றியும் கடந்த சிலவாரங்களாக குறிப்பிட்டிருந்தோம். விடுதலைப்புலிகள் அமைப்பிற்குள் சக்தி வாய்ந்த தளபதியாக இருந்த கடாபியின் எழுச்சி, சடுதியாக நிகழ்ந்த அவரது வீழ்ச்சி, பின்னர் அதிலருந்து எப்படி எழுந்தார் என்பதையெல்லாம் குறிப்பிட்டிருந்தோம்.

கடாபி விடுதலைப்புலிகள் அமைப்பில் சேர்ந்தது தொடக்கம், இறுதி யுத்த காலம் வரையான காலப்பகுதியை ஒன்லைனாக குறிப்பிட்டிருந்தோம்.

**புலிகளின் ஆரம்ப இராணுவ பயிற்சி முகாம்களின் வொறுப்பாளராக கடாபி இருந்தார். அதனால் இறுதி யுத்தத்தின் ஆரம்பத்தில் அவர் நேரடியாக யுத்தகளத்தில் இருக்கவில்லை. மாறாக, யுத்தகளத்திற்கு புதிய போராளிகளை தயார்படுத்தி அனுப்பிக் கொண்டிருந்தார்.**

இந்த ஒன்லைனில், கடாபியின் இறுதிக்கணம் குறிப்பிடப்படவில்லை. பல வாசகர்கள் எம்மை தொடர்பு கொண்டு, கடாபிக்கு என்ன நடந்த தென்பதையும் எழுத வேண்டுமென கேட்டுக் கொண்டார்கள்.

அதற்கு முன்னர், கடாபிக்கு என்ன நடந்ததென்பது குறித்து எப்படியான கதைகள் உலாவுகிறது என்பதை பார்ப்போம்.

முதலாவது, கடாபி இறுதியுத்தத்தில் மரணமாகி விட்டார்.

இரண்டாவது, இரகசிய இடமொன்றில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

மூன்றாவது, கொஞ்சம் வில்லங்கமானது. ஆனால் அதை நம்பவும் ஆட்கள் இருக்கிறார்கள். உலகின் இரகசியமான தீவொன்றில் முகாமமைத்து தங்கியுள்ள விடுதலைப்புலிகள் அணியுடன் தங்கியிருக்கிறார்.

இதில் எது உண்மை, எது உல்டா என்பதை இறுதியில் குறிப்பிடுகிறோம்.

இறுதியுத்தம் ஆரம்பித்த போது புலிகளின் ஆரம்ப இராணுவ பயிற்சி முகாம்களின் பொறுப்பாளராக கடாபி இருந்தார். அதனால் இறுதி யுத்தத்தின் ஆரம்பத்தில் அவர் நேரடியாக யுத்தகளத்தில் இருக்கவில்லை. மாறாக, யுத்தகளத்திற்கு புதிய போராளிகளை தயார்படுத்தி அனுப்பிக் கொண்டிருந்தார்.

புலிகளின் இராஜதந்திர தலைநகரான கிளிநொச்சியை இழந்தபின்,

தொடர்ச்சி 21-ம் பக்கம்...

---

தொடர்பின் மூலம் அறிந்த தகவல்படி, அந்த இயக்கத்தை யாரும் கட்டுப்படுத்த முடியுமா என்பது சந்தேகமே"

"யாருமென்றால்?... ஈரானிய உளவுத் துறையுமா?"

"ஆமாம்"

"சரி... ஈரானிலுள்ள உங்கள் சோஸ் எப்படியானவர்கள்? செல்வாக்கானவர்களா?"

"அதில் சந்தேகப்பட வேண்டியதில்லை. ஈரானிய அரச முடிவுகளில் செல்வாக்கு செலுத்துபவர்கள். ஈரானிய அரசின் அயல்நாட்டு கொள்கைகளை தீர்மானிக்கும் இடத்தில் இருப்பவர்கள்"

இதை கேட்டதும் கஸ்பர் வீன்பொர்க்கர் கொஞ்சம் அப்செற் ஆகிவிட்டார். தீவிரமாக யோசிக்க தொடங்கினார். கிம்சி தொடர்ந்தார்

"அதற்காக நாம் ஒரேயடியாத நம்பிக்கையிழக்க தேவையில்லை. அதிகபட்ச நம்பிக்கையுடன் இருக்காமல் இன்னும் சில மாற்று வழிகளையும் தயாரித்து வைக்கலாம் என்பதற்காக சொன்னேன். முதலில் ஆயுதம் சப்ளை செய்து பார்ப்போம். ஈரானிற்கு தற்போது ஆயுதங்கள் தேவையென்பதால், அதிகபட்ச நெருக்கடி கொடுக்குமாறு தூண்டில் போடலாம்"

"ஈரானிற்கு ஆயுதம் கொடுப்பதால் அந்த இயக்கத்தை கட்டுப்படுத்தலாமென உறுதியாக கூற முடியாதென்கிறீர்களா?" என கஸ்பர் வீன்பொர்க்கர் மீண்டும் கேட்டார்.

"நிச்சயமாக கூற முடியாது"

இந்த உரையாடலை பற்றி டேவிட் கிம்சி பின்னாளில் குறிப்பிட்டபோது, இந்த இடத்தில் கஸ்பர் வீன்பொர்க்கர் கொஞ்சம் அப்செற் ஆகிவிட்டார் என குறிப்பிட்டுள்ளார். அவரது முகத்தை வைத்து உணர்வுகளை எடைபோட முடியவில்லை, ஆனால் அவர் இதை எதிர்பார்த்திருக்கவில்லையென்பதை உணர முடிந்தது என்று கூறியிருந்தார்.

டேவிட் கிம்சி பேசி முடித்ததும், கஸ்பர் வீன்பொர்க்கர் கொஞ்ச நேரம் தீவிரமாக யோசித்தார். பின்னர் "இது கொஞ்சம் சீரியசான சிற்றிவேசன்தான். நமக்கு இன்னும் கொஞ்சம் அவகாசம் தேவை. ஜனாதிபதியுடன் விவாதித்து விட்டு மேற்கொண்டு என்ன செய்வதென முடிவுசெய்யலாம். நாம் நாளை சந்திப்போமா?" என்றார்.

கிம்சியும் அதற்கு சம்மதித்தார்.

(தொடரும்)

**தீபம்**

989/1, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு, நல்லூர்

**தொடர்புகளிற்கு**

ஆசிரியர்பீடம் : 0214927562 விநியோகம், விளம்பரம் : 0214927542, 0768255563

அலுவலகம் : 0214927561 கருத்துக்கள், முறைப்பாடுகள் : 0768255562

செய்திகள் அனுப்ப : deepamdesk@gmail.com

பத்திரிகை அச்சிடலுக்கான மூலப்பொருட்களின் விலை அதிகரிப்பு காரணமாக, தீபம் வாரஇதழின் விலையில் மாற்றம் செய்ய வேண்டிய நெருக்கடியேற்பட்டுள்ளது. அடுத்த வாரம் முதல் தீபம் வாரஇதழின் விலை 40/= ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளது. சூழ்நிலையை புரிந்துகொண்டு ஒத்துழைப்பு வழங்குமாறு வாசகர்கள், பத்திரிகை முகவர்களிடம் அன்பாக கேட்டுக் கொள்கிறோம்.



### சுன்னாகம் தவிசாளர் சர்ச்சை

# கூட்டமைப்பை உடைக்க இரகசியமாக நடந்த சதி ஒப்ரேஷன்!

நம்மாழ்வார்

வலிகாமம் தெற்குசுன்னாகம் பிரதேசசபை தவிசாளர் தெரிவில் திடீரென ஏற்பட்ட குழப்பம் தமிழரசுக் கட்சி தலைமைக்கு புதிய தலையிடியை கொடுத்துள்ளது. தமிழ் தேசிய கூட்டமைப்பு நியமித்த வேட்பாளருக்கு எதிராக, தமிழரசுக்கட்சியின் குழப்ப அணியொன்று சதி முயற்சியில் இறங்க, பெரும் குழப்பத்தில் முடிந்துள்ளது.

இந்த சம்பவம் பதவி ஆசைகொண்ட குழுவொன்றினால் நடத்தப்பட்ட சிறிய குழப்பம் என்றளவில் அடங்கிப் போய்விட்டது. ஆனால், உண்மை அதுவல்ல. இதற்கு பின்னால் பெரும் அரசியல் சூறாவளியை ஏற்படுத்தும் "மாஸ்டர் பிளானே" இருந்தது. இதை கேட்க பலரிற்கு அதிர்ச்சியாகவும், ஆச்சரியமாகவும் இருக்கும். அப்படியொரு அரசில் சூறாவளியை ஏற்படுத்தும் நோக்கத்துடன் இந்த விசயம் கையாளப்பட்டுள்ளது.

சுன்னாகம் குழப்பத்தின் பின்னால் பல காரணங்கள் உள்ளன. பல முனை காரணங்களை, ஒரே திசையில் செலுத்தியுள்ளது, ஒரு பலமான சக்தி. தமிழ் தேசியத்தின் சாபக்கேடே இதுதான். உள்முரண்பாடுகளை வெளியாட்கள் தமக்கு சாதகமாக பாவித்துவிட்டு செல்வார்கள். சுன்னாகத்திலும் அதுதான் நடந்தது.

இனி, அந்த பலமுனை காரணங் களை குறிப்பிடுகிறோம். ஜி.பிரகாஷ் வலி தெற்கின் தவிசாளராக இருந்தவர். வலி தெற்கின் கடந்தகால நிர்வாகம் அவ்வளவு நல்ல பெயரை எடுக்கவில்லை. சிலபல குற்றச்சாட்டுக் களும் உள்ளன. ஆனால், அவையெல் லாம் குற்றச்சாட்டு என்ற அளவில்தான் உள்ளன. முறையாக ஆதாரத்துடன் எதுவும் நிரூபிக்கப்படவில்லை.

அவை நிரூபிக்கப்படாதது இருக் கட்டும், அதுபற்றி எந்த விசாரணையும் இதுவரை நடக்கவில்லை. இனியும் நடக்ககூடாதென ஒரு குழு விரும்பியது. கடந்தமுறை தவிசாளராக இருந்து அதிகாரத்தை ருசித்துவிட்டு, இம்முறை சாதாரண உறுப்பினராக இருக்கும் பக்குவமும் இல்லாமல் போக, கட்சியின் கட்டுப்பாட்டை மீறி பிரகாஷ் போட்டிக்களத்தில் குதித்தார்.

இதேவேளையில், வலிகாமம் வடக்குபிரதேசசபையிலும் ஒரு குழப்பமிருந்தது. தமிழரசுக்கட்சியின் உறுப்பினர் ஒருவர் அங்கு உப தவிசாளர் பதவிக்கு குறிவைத்தார். இதற்காக கட்சி தலைவர்களை காக்கா பிடித்தும் திரிந்தார். ஆனால் அவரை கட்சி பரிசீலிக்கவில்லை. இதனால் அதிருப்தியடைந்த அவர் தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கு எதிரான பலமுனை பிரசாரங்களில் இறங்கினாா். பிரகாஷின் குழப்ப முயற்சிக்கு பின்னணியில் இவரும் இருந்தார். பிரகாஷ் மூலம் கட்சிக்கு குடைச்சல் கொடுக்கலாமென அவர் நினைத்தார்.

இவை பதவிக்காக ஏற்படுத்தப்பட்ட குழப்பங்கள். அது நம்மவர்களிற்கு இரத்தத்தில் ஊறியது. பதவிக்காக அடிபடுவார்கள், காரணம் கேட்டால் நிறைய தத்துவார்த்த விளக்கங்கள் சொல்வார்கள். நம்மவர்களின் இந்த பலவீனத்தை கச்சிதமாக பிடித்து, கூட்டமைப்பை உடைக்கும் இரகசிய புரஜெக்ட் ஒன்றை கையிலெடுத்தது ஒரு அணி!

தமிழ் தேசிய கூட்டமைப்பிற்குள் அதிருப்தியை ஏற்படுத்த வேண்டும், அதன்மூலம் எப்படியாவது ஒரு உடைவையாவது ஏற்படுத்தி விட வேண்டுமென்பதே அவர்களின் திட்டம். ஏற்கனவே ஆசனப்பங்கீட்டில் பங்காளிக்கட்சிகள் அதிருப்தியில் உள்ளன, குரங்கு அப்பம் பிரித்த கதையாக புளொட்டிற்கு கிள்ளிக் கொடுத்த சுன்னாகத்திலும் தமிழரசுக்கட்சி அணி தவிசாளர் பதவியை கைப்பற்றினால் புளொட் அதிருப்தியின் உச்சத்திற்கு போகும். இதன்மூலம் அவர்களை வெளியில் எடுக்கலாமென்பதே திட்டம்.

வெளியில் எடுத்து, அடுத்ததாக என்ன செய்ய உத்தேசித்திருந்தார்கள்?

அனேகமாக இதற்கு தெளிவான பதில் இல்லை. தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கு மாற்றான கூட்டமைப்புஒன்றிற்காகபுளொட்டை காத்திருக்க வைக்கலாமென திட்டமிட்டிருக்கலாம். அல்லது எனக்கு மூக்கு போனாலும் சரி, எதிரிக்கு சகுனம் பிழைக்க வேண்டுமென, கூட்டமைப்பை உடைத்து விடுவது மட்டுமே நோக்கமாக இருக்கலாம். எது எப்படியோ கூட்டமைப்பிற்குள் உடைவை ஏற்படுத்துவதொன்றே நோக்கமாக இருந்தது, இந்த நடவடிக் கையை பின்னணியிலிருந்து இயக்கிய வர்களிற்கு.

சரி, இவ்வளவும் சொல்லிவிட்டு, பின்னணியில் செயற்பட்ட அந்த ஆட்களை பற்றி ஒன்றுமே சொல்ல வில்லையென யோசிக்கிறீர்களா? இதோ சொல்லிவிடுகிறோம் அது யாழ்ப்பாணத்தில் உள்ள புதிய நாளிதழ் ஒன்றின் ஆசிரியர்!


த.தே.கூ இற்குள் உடைவை ஏற்படுத்த பக்காவாக திட்டமிட்டு காய்களை நகர்த்தினார்கள். தமிழரசுக்கட்சியின் சார்பில் அங்கு வெற்றிபெற்ற சுமார் நான்கு உறுப்பினர்கள் பிரகாஷின் அணியில் இருந்தனர். இது தவிர ஐ.தே.க, சு.க, த.வி.கூ, த.தே.ம.மு, த.தே.கூ இன் ஏனைய உறுப்பினர்கள் என அனைவருக்கும் வலைவீசினார்கள் பிரகாஷ் அணி. அந்த பகுதியில் பிரகாஷ் அறிமுகமானவராக இருந்த படியால், இலகுவாக அவரால் மற்றக் கட்சிக்காரர்களை வளைத்துப்போட முடிந்தது.

ஆனால் ஒரு விசயத்தில்தான் சறுக்கல் நடந்தது. உள்ளூராட்சி தேர்தல் முடிவு வெளியான அன்று, சிங்கள விபசார யுவதியொருவருடன் விடுதியில்இருந்தார் என்ற குற்றச்சாட்டு இணையத்தளங்களில் வெளியானது. சுன்னாகம் பிரதேசசபையில் சுதந்திரக்கட்சி சார்பில் உறுப்பினரான ஒருவரின் விடுதியில் நடந்த இந்த களேபரம்,இறுதியில்பொலிஸ்நிலையம் வரை போய்த்தான் தீர்க்கப்பட்டது. இந்த சம்பவம் பிரகாஷ் மீது பலத்த அதிருப்தியை ஏற்படுத்தியிருந்தது.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் சுன்னாகம் பிரதேசசபை உறுப்பி னர்களுடன் பல சுற்று பேரம்பேசல்கள் நடத்தப்பட்டு, பிரகாஷ் அணியை ஆதரிப்பதற்கு அவர்கள் சம்மதம் தெரிவித்திருந்தனர். சுதந்திரக்கட்சியின் உள்ளூர் தலைமை, சுன்னாகத்தில் தமிழ் தேசிய கூட்டமைப்பை ஆதரிக்குமாறு அறிவித்திருந்தது. எனினும், அங்கஜன் இராமநாதனின் கட்சி அலுவலகத்தில் இருந்து சுன்னாகம் பிரதேசசபை சு.க உறுப்பினர்களை தொடர்புகொண்டு, பிரகாஷ் அணியை ஆதரிக்குமாறு உத்தரவு வந்திருந்தது. பிரகாஷை தவிசாளராக்கினால், தனது செல் வாக்கின் மூலம் அங்கஜன் அணியை சேர்ந்த ஒருவரை உபதவிசாளராக்கு கிறோம் என பிரகாஷ் அணியிலிருந்து சு.கவுடன் பேரம்பேசப்பட்டிருந்தது.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் உள்ளூர் உறுப்பினர்களுடன் பேச்சு நடத்திவிட்டு, அவர்களையே மலை போல நம்பியிருந்தது பிரகாஷ் அணி. கூட்டமைப்பை உடைக்க விரும்பிய தரப்புக்களும் இந்த பேச்சிற்கு ஒத்தாசையாக இருந்தன.

எனினும், இணையத்தளங்களில் இந்த செய்தி கசிந்ததையடுத்து, சுன்னாகம் தவிசாளர் தேர்விற்கு முதல்நாள் 28ம் திகதி தமிழரசுக்கட்சி



எச்சரிக்கையடைந்து, சதி முயற்சியில் ஈடுபட்ட உறுப்பினர்களை மார்ட்டின் வீதியிலுள்ள கட்சி அலுவலகத்திற்கு அழைத்து எச்சரித்தது. மாவை.சேனாதி ராசா, எம்.ஏ.சுமந்திரன், சீ.வீ.கே. சிவஞானம் ஆகியோர் அவர்களுடன் தனித்தனியாக பேசியிருந்தனர். 29ம் திகதி கட்சியின் தீர்மானங்களை குறுஞ் செய்தியாக சீ.வீ.கே.சிவஞானம் தனது கையடக்க தொலைபேசியிலிருந்து பிரகாஷிற்கு அனுப்பியிருந்தார்.

கட்சியின் தீர்மானத்தை மீறி தவிசாளர் பதவியில் போட்டியிட்டால், கட்சியிலிருந்து நீக்கப்படும் அபாய மிருப்பதால், பிளான் பி யையும் தயார் செய்திருந்தார்கள். பிரகாஷ் பதவியிலிருந்து நீக்கப்பட்டால், ஐ.தே.கவின் உறுப்பினர் ஒருவரை தவிசாளராக்கி, வலி.தெற்கை தமது கட்டுப்பாட்டிலேயே வைத்திருக்க திட்டமிட்டிருந்தனர். இது நடந்தால், பிரகாஷ் அணிக்கு பிரதேசசபை

தொடர்ச்சி அடுத்தபக்கம்...




# சொல்லித் தெரிவதே மன்மதக் கலை!

டி.நாராயண ரெட்டி,
செக்ஸாலஜிஸ்ட்

'பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை
தன்நோய்க்குத் தானே மருந்து'

இப்படிச் சொல்கிறார் திருவள்ளுவர். 'புணர்ச்சி மகிழ்தல்' அதிகாரத்தில் வரும் இந்தத் திருக்குறளின் பொருள்... 'ஒரு நோய் வந்துவிட்டால், அதற்கு மருந்து என வேறு பொருள்கள் இருக்கின்றன. அணிகலன் அணிந்த இந்தப் பெண்ணால் ஏற்பட்ட நோய்க்கு இவள்தான் மருந்து.' பாலியல் வேட்கையால் உந்தப்பட்ட ஓர் ஆண், தன்னுடைய பிரியத்துக்குரியவள் எங்கிருந்தாலும், தன் வேட்கையைத் தீர்க்கும் மருந்தைத் தேடிச் செல்வது தானே இயல்பு? ஆசை வெட்கமறியாது. வரவேற்பறையோ, சமையலறையோ, குளியலறையோ... அந்தக் கணத்தில் பெண்ணை வளைத்து இழுக்க, ஆணின் கரம் நீளும் இடம் அது.

சமையலறை சமைக்க மட்டும் தானா என்ன? பலருக்கும், பல நேரங்களில் காதல் களியாட்டங்கள் அரங்கேறிய இடமாகவும் அது இருக்கும். அங்கே நாயகன், நாயகியைச் சீண்டும், முத்தமிடும், அணைக்கும் காதல் காட்சிகளை எத்தனையோ திரைப்படங்களில் நாம் பார்த்திருப்போம். இங்கே சமையலறையை உறவோடு நான் ஒப்பிடுவதற்குக் காரணம் உண்டு. உப்பு, புளி, காரம், இனிப்பு, துவர்ப்பு... எனச் சமையலில் இருப்பதைப்போலவே அனைத்துச் சுவைகளும் கொண்டது காமம். இவற்றைத் தேவைக்கேற்ப, தேவைப்படும் நேரங்களில், தேர்ந்தெடுத்து ருசிக்கத் தெரிந்தால் வாழ்க்கையில் இறுதிவரை இன்பமே.

எனக்குமிகநெருக்கமானவரின் மகன் அவன். அவன் மனைவி சமைத்துக் கொண்டிருந்திருக்கிறாள். அவன் மெதுவாகச் சென்று பின்பக்கமாக அவளைப் பாய்ந்து பிடித்திருக்கிறான். பயந்து கீழே விழப் போனவளைத் தாங்கிப் பிடித்திருக்கிறான். சட்டென்று இடுப்புப் பிடித்துக் கொண்டுவிட்டது அவனுக்கு. என்னைத் தேடி வந்தான். 'இது சாதாரண விஷயம்' என்று அவனுக்கு அறிவுரை சொல்லி, மருந்துகளும் கொடுத்தனுப்பினேன். இப்படி அசந்தர்ப்பமான நேரங்களில், இடுப்புப் பிடித்துக்கொள்ளும் சம்பவம் பலருக்கும் ஏற்பட்டிருக்கும். இந்தப் பிரச்னையை எப்படி அணுகுவது என்று பார்ப்போம்.

'இடுப்புவலியோ, இடுப்புப்பிடிப்போ ஏற்பட்டுவிட்டால் முதுகுத்தண்டு பாதிக்கப்படும்; செக்ஸில் சரியாக ஈடுபட முடியாது' என்ற ஒரு மூடநம்பிக்கை இருக்கிறது. உண்மை என்னவென்றால், அசைவதில்தான் பிரச்னை ஏற்படுமே தவிர, செக்ஸில் பாதிப்பு இருக்காது. எனவே, பயப்படத் தேவையில்லை. 'பிரிட்டிஷ் மெடிக்கல் ஜேர்னல்' (British medical journal) தெரிவித்திருக்கும் ஒரு புள்ளி விவரம், 'உலக அளவில் 58 சதவிகிதம் பேருக்கு வாழ்க்கையில் ஒருமுறையாவது செக்ஸின்போது இடுப்புவலியோ, பிடிப்போ ஏற்பட்டிருக்கும்' என்கிறது.

இவர்களில், 70 சதவிகிதம் பேருக்கு இடுப்புவலி ஏற்பட, சதைப்பிடிப்பே காரணம். இந்தப் பிரச்னையைத் தீர்க்க, வராமல் தடுக்க ஸ்ட்ரெச்சிங் உடற்பயிற்சி (Stretching Exercise) சிறந்தது. ஸ்ட்ரெச்சிங் தசைகளைத் தளர்வாக்கும்; தசைகள் எளிதாக இயங்க உதவும். எந்தக் கடினமான வேலையைச் செய்வதாக இருந்தாலும், அதற்கு முன்னதாக இந்தப் பயிற்சியைச் செய்யலாம்.

முதுகுப்பகுதிக்கு சரியான சப்போர்ட் கிடைக்க படுக்கை சற்றுக் கடினமானதாக இருக்க வேண்டும். நிற்கும்போதோ, நடக்கும்போதோ, உட்கார்ந்திருக்கும்போதோ முதுகுப் பகுதி நேராக இருக்கவேண்டும். உடலை எவ்வளவு நேராகப் பயன் படுத்துகிறோமோ அவ்வளவுக்கு நல்லது. முதுகுப்பகுதித் தசைகளை வலுப்பட, அதிகப்படியான உடல் எடையைக் குறைக்க வேண்டும்.

இடுப்புவலி, முதுகுப்பிடிப்பு இருக்கும்போதும் செக்ஸில் ஈடுபடலாம். வலி இருப்பவர் கீழே படுத்துக் கொண்டு உறவுகொண்டால் வலி தெரியாது. அதிக வலி இருந்தால், வலி நிவாரண மாத்திரைகளைப் பயன்படுத்தலாம். ஆனால், மாத்திரைகளைத் தவிர்ப்பதே நல்லது. வெந்நீர் ஒத்தடம் கொடுத்தால் வலி குறையும். உடற்பயிற்சிகள் மூலம் உடலை வலுவாக்கி, சிரமமில்லாமல் செக்ஸில் ஈடுபடுங்கள்.

**(இன்னும் கற்றுத் தருகிறேன்...)**

---

கிடைத்ததாகி விடும். புளொட்டை, அதிருப்தியடைய வைத்து, தமது நோக்கத்தை அடைய, கூட்டமைப்பை உடைக்க விரும்பிய சக்திக்கும் வாய்ப்பாக அமைந்திருக்கும்.

ஆனால், எங்கே பிசகியதென்றால் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைமைக்கு இந்த இரகசிய திட்டம் கசிந்து விட்டது. கூட்டமைப்பின் சதிகுழுவிற்கு ஆதரவளிப்பதும் பிழையான கொள்ளை முடிவென அவர்கள் நினைத்தார்கள். சுன்னாகம் பிரதேசசபை த.தே.ம.மு உறுப்பினர்களிற்கும் இது பற்றிய கண்டிப்பான உத்தரவை இட்டார்கள்.

29ம் திகதி பிற்கல் தவிசாளர் தெரிவு நடந்தபோது, அதை கண்காணிக்க தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செ.கஜேந்திரன், தேசிய அமைப்பாளர் வி.மணிவண்ணன் ஆகியோர் நேரில் சென்றனர். தமது உறுப்பினர்களை கட்டுப்படுத்துவதற்காகவே அவர்கள் நேரில் சென்றனர். கட்சியின் முடிவை மீறி யாராவது வாக்களித்தால், உடனடியாக கட்சியை விட்டு விலக்கும் கடிதம் தரப்படும் என்ற எச்சரிக்கையும் உறுப்பினர்களிற்கு விடப்படும். த.தே.ம.முன்னணி தலைவர்கள் தமது உறுப்பினர்களிற்கு போட்ட இந்த கடிவாளமே, தமிழரசுக் கட்சியின் சதிக்குழு உறுப்பினர்களின் காலைவாரியது!

வாக்களிப்பில் த.தே.கூ இன் வேட்பாளர் தர்சனிற்கும், குழப்ப அணி ஜி.பிரகாஷிற்கும் சம வாக்கு கிடைத்து, திருவுளசீட்டு முறையில் 'தர்சன் வெற்றிபெற்றதாக அறிவிக்கப்பட்டது.

ஈ.பி.டி.பி இந்த சபையில் த.தே.கூவை ஆதரித்ததாக கூறினாலும், அந்த கட்சியின் இரண்டு உறுப்பினர்கள் ஜி.பிரகாஷை ஆதரித்ததாக கூறப்படுகிறது. தவிசாளர் தெரிவின்போது பிரசன்னமாகியிருந்த சிவாஜிலிங்கம், பின்னர் ஊடகங்களிடம் பேசும்போது பிரகாஷின் நடவடிக்கையை கருணாவின் (விநாயகமூர்த்தி முரளிதரன்) நடவடிக்கையுடன் ஒப்பிட்டு பேசினார்.

த.தே.ம.முன்னணியின் திடீர் நடவடிக்கையால், தமிழ் தேசிய கூட்டமைப்பிற்குள் ஏற்படவிருந்த ஒரு குழப்பம் தடுக்கப்பட்டதென்பதே உண்மை. இதனால் கடுமையான அதிருப்தியடைந்த கூட்டமைப்பை உடைக்க விரும்பிய சக்திகள், ஊடகங்கள் வாயிலான முன்னணியை கரிந்து கொட்டியிருந்தன. 24 கரட் தமிழ் தேசியம் பேசுகிறார்கள் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியை ஒரு பத்திரிகை கரிந்து கொட்டியிருந்தது. அது ஏன் தெரியுமா?

தமிழ் தேசிய கூட்டமைப்பை உடைக்கும் முயற்சியில் ஒரு பத்திரிக ஆசிரியர்தான் ஈடுபட்டார் என ஆரம்பத்தில் சொன்னோம் அல்லவா, அதையும் இந்த கரிந்து கொட்டலையும் கூட்டிக்கழித்து பாருங்கள், உண்மை வெளிக்கும்!



# தென்னைப் பயிர்ச்செய்கையில் பசளைப் பிரயோகமும் அவற்றின் முக்கியத்துவமும்

ஈஸ்வரன் சற்குணன் BSc (Agri)MSc(Aqua)
பண்ணைத்திட்டமிடல் அதிகாரி
தென்னைப் பயிர்ச்செய்கை சபை
யாழ்ப்பாணம்

தென்னைக்கு பசளையிடல் தொடர்பாக தென்னைச்செய்கையாளர்கள் மத்தியில் ஏன், என்ன, எப்படி, எப்போது பசளையிடல் வேண்டும் என்ற பல்வேறான கேள்விகள் எழலாம். இவ்வாறான பல கேள்விகளிற்குரிய தீர்வாக இக்கட்டுரை அமையும் என எதிர்பார்க்கின்றேன்.

தென்னை ஓர் பல்லாண்டுத் தாவரமாகும். இது ஏறத்தாள 50 வருடங்கள் வரையில் சிறப்பான பலனினைத் தரவல்லது. இது நாரு வேர்த்தொகுதியினைக் கொண்டிருப்பதனால் அதன் அகத்துறிஞ்சும் அதாவது நீரை, போசணைப் பதார்த்தங்களை (பசளைகளை) உறிஞ்சும் வேர்த்தொகுதியானது குறிப்பிட்ட பிரதேசத்திற்குள் எல்லைப்படுத்தப்பட்டிருக்கும். இப் பகுதியானது பசளை வட்டம் எனப்படும்.

இப் பசளை வட்டமானது ஒவ்வொரு வருடமும் ஒரு அடி அல்லது 1.5 அடி அதிகரித்துச் செல்வதுடன் தென்னைக்கு பாளை வரும் போது அப் பசளை வட்டமானது 6 அடி சுற்று வட்டத்திற்குள் காணப்படும். பாளை வந்ததிலிருந்து அம்மரம் 60 வயதில் ஓயும் போது இவ் 6 அடி சுற்றுவட்டத்தினுள்ளேயே இப்பசளை வட்டம் காணப்படும். அத்துடன் தென்னையினது பல்வேறு பட்ட உடற்தொழிலியற் செயற்பாடுகள் நிகழ்வதானால் காலப்போக்கில் அச்சுற்று வட்டார போசணைப் பதார்த்தங்கள் நிறைவடைந்து விடும்.

தென்னையின் எல்லாப்பகுதிகளும் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்தவை. அதாவது தென்னை ஓலை, உரிமட்டை, தென்னை மட்டை, பாளை, தேங்காய் போன்றவை பொருளாதார பெறுமதி உடையதாகையால் அவை மீள்சுழற்சிக்குள்ளாகும் தன்மை மிகக்குறைவானதாகவே காணப்படுகின்றது. இவ் அட்டவணை 1 ஆனது வருடத்திற்கு 3000 தேங்காய்கள் காய்க்கும் 01 ஏக்கர் விஸ்தீரமாண தென்னங்காணியில் எவ்வாறு போசணைப்பதார்த்தங்கள் தென்னையின் வெவ்வேறு பகுதிகளினால் அகற்றப்படுகின்றது. ஏன்பதனைக் காண்பிக்கின்றது. அதாவது வருடத்திற்க 160 kg யூரியாவும் , 71 kg எப்பாவலை பாறை பொசுபேற்றும், 279 kg MOP உம் , 232 kg டொலமைற்றும் அகற்றப்படுகின்றன.

**அட்டவணை 1:** வருடத்திற்கு 3000 தேங்காய்கள் காய்க்கும் 01 ஏக்கர் விஸ்தீரமாண தென்னங்காணியில்

| பகுதி | அகற்றப்படும் அளவு (Kg/ac/year) | | | |
|---|---|---|---|---|
| | N | P | K | Mg |
| பூந்துணர் | 7.9 | 1.9 | 16.3 | 3.2 |
| தென்னைமட்டை | 33.4 | 3.3 | 43.6 | 20.3 |
| தேங்காய் | | | | |
| இளநீர் | 0.3 | 0.1 | 3.3 | 0.1 |
| சிரட்டை | 1.8 | 0.1 | 3.1 | 0.2 |
| தேங்காய்சொட்டு | 19.9 | 2.8 | 10.5 | 1.6 |
| உரிமட்டை | 10.6 | 1.2 | 63.2 | 2.5 |
| மொத்தம் | 73.9 | 9.3 | 139.9 | 27.9 |

| Equivalent (Kg) | Urea - 160 | ERP - 71 | MOP - 279 | Dolamite - 232 |
|---|---|---|---|---|

தென்னையின் வெவ்வேறு பகுதிகளினால் போசணைப்பதார்த்தங்கள் அகற்றப்படுதல்.

இதனை விட தென்னங்காணிகள் இலகுவில் மண்ணரிப்பிற்கு உள்ளாவதனாலும், தென்னையின் பசளை வட்டப்பகுதியினுள் பரந்திருக்கும் களைகளினாலும் கணிசமான போசணைப்பதார்த்தங்கள் அகற்றப்படுகின்றன. தென்னையினால் போசணைப்பதார்த்தங்கள் அகற்றப்படுதலானது தென்னைக்கான இடப்பொருத்தப்பாட்டு வரைபடத்திற்கு ஏற்ற மாதிரியும் , தென்னையின் வயதிற்கேற்பவும், காலநிலை வேறுபாடுகளிலும் தங்கியுள்ளது. இடப்பொருத்தப்பாட்டு வரைபடத்திற்கமைய எவ்வாறு போசணை அகற்றப்படுகின்றது என்பதனை அட்டவணை 2 தெளிவாக்குகின்றது.

அட்டவணை 2 இடப்பொருத்தப்பாட்டு வரைபடத்திற்கமைய போசணை அகற்றப்படுதல்

| போசணை அகற்றப்படுதல் (g/palm/year) | | போசணை அகற்றப்படுதல் (g/palm/year) | |
|---|---|---|---|
| N | 740 | N | 424 |
| P | 118 | P | 95 |
| K | 1553 | K | 1248 |
| Mg | 213 | Mg | 143 |
| Ca | 330 | Ca | 256 |
| Fe | 7.4 | Fe | 6.0 |
| Mn | 4.0 | Mn | 3.6 |
| Zn | 2.8 | Zn | 1.7 |
| Cu | 0.8 | Cu | 0.6 |
| B | 1.6 | B | 1.0 |

**தேங்காய் விளைச்சல்** -
75-110 or more(palm/year)
தேங்காய் விளைச்சல் 55-75 or more(palm/year)
land suitability classes S1-S3
Land suitability classes S4 – S5


தென்னையின் வயதிற்கேற்ப போசணைப் பதார்த்தத்தின் தேவையினைப்பார்க்கையில் இளம் மரத்திற்கு நைதரசன் (N) அதிகமாகவும் அதற்கடுத்ததாக பொசுபரசு (P) பின்னர் பொட்டாசியம் (K) உம் தேவைப்படுகின்றன. அதாவது N, P, K, Mg என்ற ஒழுங்கிலும் முதிர் மரத்திற்கு பொட்டாசியம் (K) அதிகமாகவும் , அடுத்ததாக மகனீசியம் (Mg) உம் பின்னர் N உம் தேவைப்படுகின்றன. அதாவது P, Mg, N, P என்ற ஒழுங்கமைப்பில் காணப்படுகின்றன.

தென்னைக்குரிய பசளைகளைப் பார்க்கையில் அசேதனப்பசளை, சேதனப்பசளை என இருபிரதான பிரிவுகள் காணப்படுகின்றன. இவ் இட்டவணை 3 ஆனது தென்னைக்குரிய அசேதனப்பசளை மூலகங்களைக் காண்பிக்கின்றது.

அட்டவணை 3 தென்னைக்குரிய அசேதனப் பசளை மூலகங்கள்

இளம் மரங்களிற்கு இரசாயனப்பசளை 6 மாதங்களிற்கு ஒரு தடவையும் முதிர் மரங்களிற்கு வருடாந்தமும் பிரயோகிக்கப்படல் வேண்டும்.

தென்னங்கன்று நடுகை செய்யும் போது அடிப்பசளையாக சேதன, அசேதனப்பசளைகளை கலந்து பிரயோகிப்பது தான் சிறந்தது. அதாவது மாட்டெரு 10 Kg அல்லது கோழிஎரு 10 Kg அல்லது ஆட்டெரு 5 Kg உடன் அசேதனப் பசளையினைச் சேர்த்து பாவிக்கலாம். இதில் அசேதனப்பசளையானது நேரடிப்பசளை அல்லது பசளைக்கலவை என உள்ளது. அடியுரமாக பாவிக்கும் இப்பசளைகள் அட்டவணை 4ல் காட்டப்படுகின்றன. (தொடரும்)




| போசணை | பசளை மூலகங்கள் | | போசணை % |
|---|---|---|---|
| Nitrogen - N | Urea | $CO(NH_2)_2$ | N -46% |
| Phosphorus - P | Rock phosphate | | |
| | Imported Rock phosphate | $3(Ca_3PO_4)_2F.Cl.OH$ | $P_2O_5$ 27.5% |
| | Eppawala Rock phosphate | | $P_2O_5$ 30% |
| | Tipple super phosphate | $Ca(H_2PO_4)_2$ | $P_2O_5$ 46% |
| Potassium - K | Muriate of Potash | KCl | $K_2O$ 60% |
| | Sulphate of Potash | $K_2SO_4$ | $K_2O$ 50% |
| Magnesium - Mg | Dolomite | $CaCO_3.MgCO_3$ | MgO 20% |
| | Kiserite | $MgSO_4.H_2O$ | MgO 24% |

தீபம் லென்ஸ்

# சமுர்த்தி வங்கியா? பகல்கொள்ளை அலுவலகமா?...

## சந்திவெளி சமுர்த்தி வங்கி ஊழல்கள்

### தலை சுற்ற வைக்கும் ஊழல் தொடர் 03



கிழக்கு மாகாணத்தில் வறுமையில் முதலிடத்தில் உள்ளதென சொல்லப்படும் மட்டக்களப்பு மாவட்டத்தில் நடந்த சமுர்த்தி முறைகேடுகள், தலைசுற்ற வைப்பவை. வறுமைக்கோட்டிற்குட்பட்டவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த உருவாக்கப்பட்ட சமுர்த்தியில் நடந்த மோசடிகள் அளவு கணக்கற்றவை. இந்த மோசடி பணம் உரியமுறையில் மக்களை சென்றடைந்திருந்தால், எத்தனையோ குடும்பங்களின் வாழ்வாதாரம் உயர்ந்திருக்கும். அரசாங்கத்தின் திட்டமும் பலனை கொடுத்திருக்கும். ஆனால், ஒட்டுண்ணிகளாக இடையில் அரச உதவிப்பணத்தை உறிஞ்சியெடுக்கும் அதிகாரிகள் இருக்கும் வரை எப்படி மக்களின் வாழ்க்கை தரம் மாற்றமடைவது?

இதனால்தான், மட்டக்களப்பு சமுர்த்தி மோசடிகளை வெளிச்சமிட முடிவு செய்துள்ளோம். இது எந்த தனிநபர்களிற்கும் எதிரான நடவடிக்கையல்ல. மக்களிற்கான அரச இயந்திர செயற்பாட்டில் ஒட்டுண்ணிகளாக செயற்படுபவர்களை அம்பலப்படுத்தும் ஒரு முயற்சி மட்டுமே.

சமுர்த்தி முறைகேடுகளை அம்பலப்படுத்தும் இந்த தொடரில், கடந்த வாரம் ஏறாவூர் பற்று செங்கலடி பிரதேசசெயலர் பிரிவில் இடம்பெற்ற மோசடிகளை அம்பலப்படுத்தியிருந்தோம். இந்தவாரம் கோறளைப்பற்று தெற்கு (கிரான்) பிரதேச செயலர் பிரிவில் இடம்பெற்ற மோசடிகளை அம்பலப்படுத்துகிறோம்.

ஏறாவூர் பற்று செங்கலடி பிரதேச செயலர் பிரிவில் உள்ள ஒரேயொரு சமுர்த்தி வங்கியான சந்திவெளி சமுர்த்தி வங்கியில் மிக மோசமான மோசடி நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளன. சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் பிரதான உள்ளக கணக்காய்வாளரின் அனுமதியுடன் மட்டக்களப்பு மாவட்ட உள்ளக கணக்காய்வாளர்கள் கடந்த பெப்ரவரி மாதம் கணக்காய்வில் ஈடுபட்டு மோசடி நடவடிக்கைகளை அடையாளம் கண்டு உறுதிசெய்ததும், மோசடி நடவடிக்கையில் ஈடுபட்ட உத்தியோகத்தர்களையும் அடையாளம் காட்டியுள்ளது.

மொத்தமாக 53 மோசடி சம்பவங்கள் அடையாளம் காணப்பட்டு, இந்த கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளன. ஒவ்வொன்றும் தலை சுற்றவைக்கும் சம்பவங்கள்.

இந்த 53 மோசடி சம்பவங்களையும் பட்டியலிட்டு, கண்காணிப்பு அறிக்கை ஆறு விடயங்களை பட்டியல்படுத்தியுள்ளது.

1. 2013 ஏப்ரல் மாதத்தில் அதிகளவான நிதி மோசடி நடைபெற்றுள்ளது.
2. வங்கி முகாமையாளர், உத்தியோகத்தர்கள், வெளிக்கள உத்தியோகதர்தர்கள் மற்றும் சமுர்த்தி சங்க தலைவர்கள் நேரடியாக நிதி மோசடி நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.
3. சந்திவெளி சமுர்த்தி வங்கியில் இடம்பெற்ற இந்த மோசமான நிதி மோசடி, மக்களிற்கு சமுர்த்தி வங்கி மீது மக்களிற்கு நம்பிக்கையை இல்லாமல் செய்துள்ளது.
4. வங்கியை வழிநடத்த வெளியிடப்பட்ட சுற்றுநிருபங்கள் மீறப்பட்டு பணியாற்றப்பட்டுள்ளது.
5. வறிய மக்களின் கோடிக்கணக்கான பணத்துடன் செயற்படும் வங்கியை முறையாக வழிநடத்த வேண்டிய முகாமையாளர், ஊழியர்களை தவறாக வழிநடத்தி பொறுப்பற்ற விதத்தில் செயற்பட்டுள்ளார்.
6. வங்கியில் மோசடி நடவடிக்கையில் ஈடுபட்டதாக கண்டறியப்பட்ட உத்தியோகத்தர்கள் அதிலிருந்து நழுவிச்செல்லும் நிலையில் உள்ளார்கள். இதனால் விசேட கணக்காய்விற்கு இந்த வங்கியை விரைவில் உட்படுத்த வேண்டும்.

என்ற பரிந்துரைகளுடன், இந்த மோசடி நடவடிக்கையில் ஈடுபட்ட அனைத்து உத்தியோகத்தர்கள் மீதும் கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென வலியுறுத்தியுள்ளது. வெ.லகுறாஜ் என்ற உத்தியோகத்தர் மோசடி நடவடிக்கையில் ஈடுபட்டது கண்டறியப்பட்டும், அவர் வாக்குமூலம் அளிக்க மறுப்பதையும் சுட்டிக்காட்டியுள்ளது.

வங்கி முகாமையாளர் வசந்தாதேவி உதயகுமார், காசாளர் ஜெ.சுரேஸ் வெளிக்கள உத்தியோகத்தர்கள் கயல்வழி நாகராசா, பத்மசிறி, தம்பியப்பா, வங்கி ஊழியர்கள் வெ.லகுறாஜ், பரஞ்சோதி விமலநாதன், புஸ்பராணி மதியழகன், சமுர்த்தி சங்க தலைவர்கள் தெ.சோமலதா, ஏ.லெட்சுமி உள்ளிட்டவர்கள் மோசடி நடவடிக்கையில் ஈடுபட்டது அம்பலமாகியுள்ளது. இவர்கள் தொடர்பாக 53 குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டுள்ளது. சிலர் சிறிய, ஒரு சில மோசடிகளிலும், சிலர் பெரிய, தொடர்ச்சியான மோசடிகளிலும் ஈடுபட்டுள்ளனர்.

எப்படி எமகாதக திட்டமிட்டு மோசடி செய்யப்பட்டுள்ளது என்பதற்கு சில உதாரணங்களை தருகிறோம். (53 குற்றச்சாட்டுக்களிலும் எழுந்தமானமாக சிலவற்றை தேர்ந்தெடுத்து கீழே குறிப்பிட்டுள்ளோம். நாம் குறிப்பிடும் உதாரணம், மேலேயுள்ள உத்தியோகத்தர்களின் மோசடியின் அளவில் பட்டியல் படுத்தப்படவில்லை)

சின்னத்தம்பி கங்கேஸ்வரி க/கு இலக்கம் 17/745 இவரது பெயரில் 06.06.2013 ம் திகதி 100,00/= கடன் விடுவிக்கப்பட்டுள்ளது. ஆனால் பயனாளி கடனை பெற வங்கிக்கு வரவில்லை. பயனாளியின் கையெழுத்து சாதுரியமாக பெற்று கடன் பெறப்பட்டுள்ளது. இக்கடனுடன் வங்கி முகாமையாளர் வசந்தாதேவி உதயகுமார், கடன் இலிகிதர் வெ.லகுறாஜ் என்பவர்கள் தொடர்புபட்டுள்ளனர்.

40/1707 என்ற கணக்கிற்கு உரித்தான பயனாளிக்கு நவரத்தினம் வசந்தா தெரியாமல், அவரது பெயரை நீக்கி, பதிலாக அதே இலக்கத்தில் கண்ணப்பர் தம்பிப்பிள்ளை என்ற பெயரை சேர்த்து (எதுவித அனுமதியும் இல்லாமல்) இவரது பெயரில் (பங்கு மீதி ரூ 500 மட்டும்) 04.04.2013ம் திகதி சுய்தொழில் கடனாக 100,000/= வையும், 26.09.2013ம் திகதி மீண்டும் வாழ்வாதார கடனாக 50,000/= வையும் விடுவித்ததாக பதிவுகள் உள்ளன. இரண்டு கடனையும் பயனாளி பெறவில்லை. உத்தியோகஸ்தர் கயல்விழி நாகராசா பெற்றதாக பிரிவு வெளிக்கள உத்தியோகத்தர், குறிப்பிட்ட சிறுகுழு உறுப்பினர்கள் மூலம் அறிய கிடைக்கிறது. இவ்விரு கடனிலும் 90% மேல் செலுத்தப்படவில்லை.

தயாளன் இந்துமதி க/கு இல 99/4364 எனும் பயனாளி கடன் பெறவேண்டிய தேவையின்றி இருந்த நிலையில் வெளிக்கள உத்தியோகத்தர் வே.பத்மசிறி, பயனாளியை கடன்பெற கட்டாயப்படுத்தி, அந்த கடனை சமுர்த்தி சங்க தலைவர் தே.சோமலதா, வே.பத்மசிறி இருவரும் தமது தேவைக்கு பயன்படுத்தியுள்ளனர்.

சின்னத்தம்பி பாக்கியம் க/கு இல 30/3060 கோராவெளி. இவர் கடன்கோரி விண்ணப்பிக்கவில்லை. இவரின் பெயரில் வங்கி முகாமையாளர் (29.05.2013) வசந்தாதேவி உதயகுமார் 100,000/= கடன்பெற்றுள்ளார். இதற்கு கோராவெளி பிரிவ வெளிக்கள உத்தியோகத்தர் சா.தம்பியப்பா மற்றும் வங்கி பணியாளர்கள் உடந்தையாக செயற்பட்டுள்ளனர்.

28.02.2014 அன்று பயனாளியொருவர் வைப்பு செய்த 100000 ரூபா அன்றைய தினமே ஆள்சார் வைப்பேட்டில் பதியப்பட்டது. ஆனால் அன்றைய தினம் நாளாந்த காசாளர் பதிவு புத்தகத்தில் பதியப்படாது, காசாளரால் மோசடி செய்யப்பட்டு (ஜெ.சுரேஸ்) சுமார் ஒரு வருடம் கழித்து 24.03.2015 இல் காசாளரால் பணம் வைப்பு செய்யப்பட்டுள்ளது.

சேதுபாலன் சத்தியபாமா சந்திவெளி

தொடர்ச்சி 24-ம் பக்கம்...




சல்மான்கானின் பழைய பாகி படத்தின் தலைப்பில், ஜாக்கி ஷெராப் மகன் டைகர் ஷெராப் நடித்தார். அந்த பாகிக்கும், புது பாகிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. தெலுங்கு வர்ஷம் படத்தின் ரீமேக்தான் புது பாகி. இப்போது பாகி 2 வெளியாகி இருக்கிறது. இது ஷணம் தெலுங்குப் பட ரீமேக். இதன் தமிழ்ப் பதிப்பு, சிபிராஜ் நடிப்பில் சத்யா பெயரில் வெளியானது. ராணுவ வீரர் டைகர் ஷெராபுக்கு, திஷா பதானி பிரச்னையில் இருப்பது தெரிகிறது. திஷா வேறு யாருமல்ல, டைகரின் முன்னாள் காதலி. அந்தக் காதல் பிளாஷ்பேக்கில் வருகிறது.

இப்போது திஷா கோவாவில் இருக்கிறார். அவரது மகள் காணவில்லை. கடத்தப்பட்டதாகச் சொல்கிறார். மாஜி காதலியின் மகளைக் கண்டுபிடிக்க, தனது மிஷனை ஆரம்பிக்கிறார் டைகர். அவர் சந்திக்கும் பிரச்னைகளே படம். தெலுங்கு ஷணம் பட கதைதான் என்றாலும், திரைக்கதையில் நிறைய மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன. அதில் முக்கியமானது, ஆக்ஷன். ஒரிஜினல் படம், திரில் ஜானரில் உருவானது. இது டைகர் ஷெராப் இமேஜுக்காக முழுநீள ஆக்ஷன் படமாக மாற்றப்பட்டுள்ளது. அதற்காக, ராணுவ வீரர் என்ற பின்னணி சேர்க்கப்பட்டுள்ளது. இதனாலேயே படத்துடன் ரசிகர்களால் ஒன்றமுடியாமல் போகிறது. ஷணம் படம் திரில் 'மூட்' உடன் ஆரம்பித்து, அந்த ஹீட்டை பரப்பிக் கொண்டே செல்லும். எந்த இடத்திலும் சலிப்பு வராது. இதில் ஆக்ஷனும் தர வேண்டும், திரில் உணர்வும் ரசிகர்களுக்கு வர வேண்டும். அதோடு காதல் மற்றும் பாடல்களையும் கலந்து மசாலா படமாகக் கொடுக்க வேண்டும் என்று டைரக்டர் அஹமத்கான் முயற்சி செய்திருக்கிறார். இதில் அவர் பாதி கிணறுதான் தாண்டியிருக்கிறார். திஷா குழந்தை மற்றும் படத்தைக்காப்பாற்றப் போராடியிருக்கிறார் டைகர் ஷெராப்.

அவரது சிக்ஸ்பேக் உடற்கட்டும், ஹாலிவுட் பாணியிலான ஸ்டண்ட்டும்தான் ஹைலட். இரண்டாம் பாதியில் அவரது ஆக்ஷன் காட்சிகள், அடிதடி பட ரசிகர்களைக் குதூகலிக்க வைக்கிறது. டோனியில் அறிமுகமான திஷா பதானிக்கு இதில் நடிக்கவும், ரொமான்சுக்கும் நிறைய வாய்ப்பு. கொடுத்த கேரக்டரில் இளசுகளை எப்படி வளைத்துப்போட முடியும் என்று தெரிந்து நடித்திருக்கிறார். படத்தில் ட்விஸ்ட் ஏற்படுத்தும் கேரக்டர்களில் ரன்தீப் ஹூடா, பிரதீக் பப்பர் நடித்து இருக்கிறார்கள். மனோஜ் பாஜ்பாயின் கேரக்டரும் முக்கியமானது. ஒரிஜினல் படம் பார்த்தவர்களுக்கு இந்தப் படம் பிடிக்காது. அதேநேரம் ஆக்ஷன் பிரியர்களுக்கு கண்டிப்பாக ஏமாற்றம் கொடுக்காது.

# சின்னத்திரை


கீர்த்தி

## மானாட மயிலாட கீர்த்தி வானிலாடினார்

மானாட மயிலாட நிகழ்ச்சி தொகுப்பாளினி வீஜே கீர்த்தி என்றால் எல்லோருக்கும் தெரியும். பின்னர் ஜூனியர் சூப்பர் ஸ்டார் நிகழ்ச்சியையும் தொகுத்து வழங்கினார். திருமணத்தின் பின்னர் எந்த நிகழ்ச்சியையும் ஒப்புக்கொள்ளாமல் இருக்கிறார். காரணம் கேட்டால், நல்ல நிகழ்ச்சிக்காக காத்திருக்கிறேன் என்கிறார். கணவர் சாந்தனுவுக்கு நல்ல சினிமா வாய்ப்புக்கள் கிடைக்காமல் இருந்த நிலையில், இப்பொழுது மிஸ்கினின் புதிய படத்தில் ஒப்பந்தமாகியுள்ளார். காதலர் தினத்திலன்று டுபாய்க்கு சென்று, 4000 அடி உயரத்தில் எயார் பலூனில் சுற்றினார்களாம்.

## சின்னத்திரையில் ஷனம் ஷெட்டி

அம்புலி 3டி படத்தின் மூலம் அறிமுகமானவர் பெண் ஷனம் ஷெட்டி. அதன்பிறகு கதம்கதம், கவலை வேண்டாம், வெள்ளையா இருக்கிறவன் பொய் சொல்ல மாட்டான், சவாரி, சதுரம் உள்ளிட்ட படங்களில் நடித்துள் ளார். தற்போது 23, டிக்கெட் ஆகிய படங்களில் நடித்து வருகிறார். தமிழில் குறைவான படங்களில் நடித்தாலும் மலையாளம், தெலுங்கு, கன்னட படங்களில் நடித்து வருகிறார். ஷனம் இப்பொழுது சின்னத்திரைக்கு சென்றுள்ளார். விஜய் டிவியில் ஒளிபரப்பாகிவரும் வில்லா ரூ விலேஜ் நிகழ்ச்சியில், 12 பெண்களில் ஒருவராக நடித்து வருகிறார்.


ரேமா

## அம்மா பெண்

விஜய் டிவியில் ஒளிப்பரப்பாகும் சின்னத்தம்பி சீரியலில் கதாநாயகனின் தங்கையாகவும், குறும்புக்கார பெண்ணாகவும் கலக்கி வருபவர் ரேமா. கலைஞர் டிவியின் ஓடி விளையாடு பாப்பா நிகழ்ச்சி மூலம் டிவியில் அறிமுகமானார். இப்பொழுது 18 வயதில் சின்னத்தம்பி சீரியலில் கலக்கி வருகிறார். சூட்டிங் ஸ்பொட்டிலும் பயங்கர குறும்பாக இருப்பாராம். இந்த வயதிலும், கல்யாணம் முதல் காதல் வரை சீரியலில் திருமணமான பெண்ணாக கலக்கியிருந்தார். இது குறித்து கேட்டால் நடிகைகள் எந்த பாத்திரத்திலும் நடிக்க தயாராக இருக்க வேண்டுமென்கிறார். இவரது காஸ்டியூம்களும் ரசிகர்களால் கவனிக்கப்படுவதுண்டு. காஷ்டியூம் பொறுப்பு முழுவதும் அம்மாவினுடையதென கைகாட்டி விடுகிறார்.


ஷப்னம்

## சமைக்க பழகும் ஷப்னம்

ராஜா ராணி சீரியலில் நெகடிவ் பாத்திரத்தில் கலக்குபவர் ஷப்னம். பொஸிட்டிவோ, நெகட்டிவோ எந்த பாத்திரத்திலும் கலக்குபவர். கல்யாணமாம் கல்யாணமாம் சீரியலில் பொஸிட்டிவ் பாத்திரத்தில் கலக்க ஆரம்பித்துள்ளார். ஷப்னத்திற்கு நிஜத்திலும் கல்யாணமாம் கல்யாணம்தான். ஐடி நிறுவனத்தில் பணிபுரியும் ஆர்யனுடன் அம்மணிக்கு நிச்சயதார்த்தம் முடிந்துள்ளது. நிச்சயதார்த்தத்தின் பின்னர் காதலிக்கிறேன் என்கிறார். ஷப்னம் மேக்அப் பைத்தியமாம். தான் கோபமாக இருப்பது தெரிந்தால், ஆர்யன் மேக்அப் பொருட்கள் வாங்கித் தந்து சமாளித்து விடுகிறார் என்கிறார். கணவருக்காக இப்பொழுது யூடியூப் பார்த்து சமையல் கற்கிறாராம்.

## பிரியாவின் தேன்நிலவு தாய்லாந்தில்

சின்னத்திரையில் நிறைய பிரியாக்கள் இருக்கிறார்கள். அதிலும் ஜோடி பிரியா கொஞ்சம் அதிகம் பிரபலம். ஜோடி நிகழ்ச்சியில் கலக்கியதால் இந்த அடைமொழி ஒட்டிக்கொண்டது. அதன்பின் சரவணன் மீனாட்சி உள்ள பல தொடரிர்களில் நடித்தார். இப்பொழுது சின்னத்திரை பக்கம் ஆளையே காணவில்லை. விசாரித்தால் அம்மணிக்கு திருமணம் ஆகி விட்டதாம். திருமணத்தை முடித்து விட்டு, பகிரங்கமாக அறிவிப்பதுதான் இப்போது சின்னத்திரை ட்ரெண்டிங். பிரியாவும் அப்படித்தான் செய்துள்ளார். மாப்பிள்ளை சென்னையில் பிரபல கார் கொம்பனியில் அதிகாரியாக இருக்கிறாராம். பெற்றோர் நிச்சயித்த திருமணம் இது. தாய்லாந்தில் தேன்நிலவை முடித்துக் கொண்டு, அடுத்த சின்னத்திரையில் அடுத்த ரவுண்டை ஆரம்பித்துள்ளார் பிரியா.



## சூட்டிங் ஸ்பொட்




காளை




பியார் பிரேமா காதல்

# வண்ணத் திரை



## புருவ அழகிக்கு தெலுங்கிலும் கிராக்கி

மலையாளத்தில் "ஒரு அதார்வ் லவ்" படத்தில் இடம்பெற்ற ஒரே பாடலின் மூலம் உலகப்புகழ் பெற்றார் புருவ அழகி பிரியா பிரகாஷ் வாரியார். இந்தப்படத்தில் இவர் நாயகி அல்ல. ஆனால் படம் வெளியாவதற்கு முன்னரே, அவரின் வீட்டு வாசலில் தயாரிப்பாளர்கள் வரிசையில் நிற்கிறார்கள். மலையாளத்தில் மட்டுமல்ல, தெலுங்கிலும் அவருக்கு வாய்ப்புக்கள் வருகின்றனவாம். தெலுங்கில் வெற்றிபெற்ற "ஈகோ" என்ற படத்தின் தயாரிப்பாளர், தனது புதிய படத்தில் பிரியாவை ஒப்பந்தம் செய்துள்ளார். இதற்காக பிரியாவிற்கு மிகப்பெரிய தொகை சம்பளமாக பேசப்பட்டுள்ளதாம். ஈகோவில் நாயகனாக நடித்த ஆஷிஸ் ராஜ்தான் இந்த படத்திலும் ஹீரோ.

## ரஷ்யாவில் செட்டிலாகும் ஸ்ரேயா

சிவாஜி படத்தில் ரஜினிக்கு ஜோடியாக நடித்து புகழடைந்தவர் ஸ்ரேயா. விஜய், தனுஷ், ஜெயம் ரவி, சிம்பு என முன்னணி நடிகர்களுடன் ஜோடி போட்டுள்ளார். அண்மையில் சினிமாவில் வாய்ப்பில்லாமல் இருந்தார். சில வாரங்களின் முன் தனது ரஷ்ய காதலர் அன்ட்ரேவ் கோஷ்சேவ் என்பவரை திருமணம் முடித்திருந்தார். ஆனாலும், திருமணத்தின் பின்னர் தெலுங்கு நடிகர் வெங்கடேஷிற்கு ஜோடியாக நடிக்க கையெழுத்திட்டிருந்தார். எனினும், இப்பொழுது திட்டத்தை மாற்றிவிட்டார். இனி ரஷ்யாவிலேயே குடியேறவுள்ளார் ஸ்ரேயா. இதனால் ஸ்ரேயாவிற்கு பதிலாக வேறொரு நடிகையை படக்குழுவினர் தேடி வருகின்றனர்.

## இனி ஸ்ரீ லீக்ஸ்!

விக்கிலீக்ஸ் தெரியுமோ இல்லையோ, நம்மவர்களிற்கு சுசி லீக்ஸ் தெரியும். பாடகி சுசித்ராவின் பெயரிர் தொடங்கப் பட்ட ருவிற்றர் பக்கம். தமிழ் சினிமா நடிகைகள் யார் யாருடன் உறவு வைத்துள்ளனர், அவர்களின் ஆபாச படங்கள் என்பவற்றை அந்த பக்கம் வெளியிட்டு பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. சுசி லீக்ஸின் பதிவுகளால் பல நடிகர்கள் தூக்கத்தை இழந்திருந்தனர். சுசி லீக்ஸ் பாணியில் தெலுங்கு நடிகை ஸ்ரீரெட்டியும் களத்தில் குதிக்கிறார். பாலியல் தொல்லை கொடுக்கும் நடிகர்கள், படவாய்ப்பிற்காக பாலியல் லஞ்சம் கேட்பவர்கள் பற்றிய விபரங்களை வெளிப்படுத்த போவதாக அறிவித்துள்ளார். இவர் யூரியூப்பில் பிரபல மானவர். தொலைக்காட்சி ஒன்றின் மூலம் இந்த விபரங்களை அம்பலப்படுத்தவுள்ளதாக அறிவித்துள்ளார்.

## பிரபல ஒளிப்பாதிவாளரின் பரிதாபம்

சிவாஜி கணேசனின் ஆஸ்தான போட்டோ கிராபர் திருச்சி ஆனா ரூனா. இவரது மகன்கள் சுரேஷ்குமார், ரமேஷ்குமார். சுரேஷ்குமார் கடமை கண்ணியம் கட்டுப்பாடு, என் தமிழ் என் மக்கள் உள்ளிட்ட பல படங்களுக்கு ஒளிப்பதிவு செய்தவர். விபத்தில் சிக்கி உடல் பாதிப்படைந்த சுரேஷ்குமாரிற்கு சினிமா வாய்ப்புக்கள் கிடைக்கவில்லை. திருமணம் செய்யாமல் தனிமையில் வசித்து வந்தார். கடந்தவாரம் பேருந்திலிருந்து இறங்கி வரும்போது திடீரென மாரடைப்பு ஏற்பட்டு வீதியோரமாகவே விழுந்து மரணமடைந்தார். அவரது சட்டையிலிருந்த ஏ.டி.எம் அட்டை, பணம் என்பவற்றை திருடர்கள் திருடிக்கொண்டு சென்றுவிட்டனர். இதனால் அவரை அடையாளம் காண முடியவில்லை. அங்குள்ள வைத்தியசாலை பிரேத அறையில் 4 நாட்கள் அடையாளம் தெரியாமல் வைத்திருந்துள்ளனர். பின்னர் சுரேஷ்குமார் குடியிருந்த வீட்டின் உரிமையாளர் அடையாளம் காட்டி, அவரது இறுதிக்கிரியை நடந்துள்ளது.

## விஜய்யின் த்ரில்லர் படம்!

சாய் பல்லவி நடித்த கரு, பிரபுதேவா நடித்த லட்சுமி படங்களை இயக்கியுள்ள ஏ.எல்.விஜய், அவற்றின் போஸ்ட் புரடெக்ஷன் வேலைகளை முடித்துள்ளார். அடுத்து சஸ்பென்ஸ் திரில்லர் கதையொன்றை உருவாக்கியுள்ளாராம். குறுகிய காலத்தில் அதை இயக்கவுள்ளார். ஜி.வி.பிரகாஷ் நடிக்கிறார். கரு, லட்சுமி ஆகிய படங்கள் வெளியான பின்னரே, ஜி.வி இன் பட சூட்டிங் ஆரம்பிக்கிறது.

## ரகுல் வாய்ப்புக்காக அப்படி பேசினாரா?

திரையுலகில் நடிகைகள் சந்திக்கும் பிரச்சனைகள் குறித்து, பலர் பகிரங்கமாக பேசி வருகின்றனர். சமீபத்தில் கபாலி நாயகி ராதிகா ஆப்தேயும் தான் சந்தித்த பிரச்சனைகளை வெளிப்படையாக கூறியிருந்தார். இந்தநிலையில் நடிகை ரகுல் பிரீத்சிங் நடிகைகளிற்கு அப்படியொரு பிரச்சனையும் இல்லையென கூறியிருக்கிறார். சினிமா உலகில் நடிகைகளை படுக்கை அறைக்கு அழைக்கும் பழக்கம் இருப்பதாக எனக்கு தெரியவில்லையென கூறியிருக்கிறார். விஷாலுடன் ஆம்பள படத்தில் நடித்த மாதவி லதா அதற்கு எதிர்க்கருத்து ஒன்றை கூறியிருக்கிறார். அதில், திரையுலக நடைமுறையில் நடிகைகளை படுக்கைக்கு அழைக்கும் வழக்கம் இருக்கிறது. ரகுல் பரீத்சிங் வேண்டுமென்றே மறைத்து பேசி வருகிறார். தனக்கான படவாய்ப்புக்கள் பறிபோய்விடும் என்பதற்காக இப்படி உண்மைகளை மறைத்து பேசுகிறார் என கூறினார். வரும் நாட்களில் இருதரப்பும் ஏட்டிக்கு போட்டியாக பேசிக் கொண்டிருப்பார்கள் என எதிர்பார்க்கலாம்.

## எப்படியெல்லாம் யோசிக்கிறார்கள்?

சமீபத்தில் ஷில்பா செட்டியின் யோகா வீடியோக்கள் இணையத்தில் திடீர் வைரலானது. பல வருடங்களாக இணையத்தில் உள்ள இந்த வீடியோக்கள் திடிரென ஏன் வைரலானதென பார்த்தால், ஷில்பா சமீபத்தில் பேசிய பேச்சொன்றுதான் காரணம். சமீபத்தில் தனியார் தொலைக்காட்சியொன்றின் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, யோகாசனங்கள் செய்து காட்டினார். யோகா ஆசிரியையாக இருக்கும் ஷில்பா இந்த வயதிலும் இப்படி அசத்துகிறாரே என எல்லோரும் வாயை பிளந்தனர். அந்த நிகழ்ச்சிக்கு போனபோது யோகாவிற்கு பொருத்தமான ஆடைகளுடன் அவர் சென்றிருக்கவில்லை. "யோகாவிற்கு பொருத்தமான ஆடைகளை நான் அணியவில்லை. ஆனால் ஆடை அணியாமல் இந்த பயிற்சிகளை இன்னும் சிறப்பாக செய்வேன்" என கூறினார். இதை பார்த்த லொள்ளர்கள், ஷில்பாவின் வீடியோவில் ஆடையணியாமல் யோகா செய்த வீடியோ இருக்குமா என இணையத்தில் விழுந்து விழுந்து தேடியுள்ளனர்.

## சிவகார்த்திகேயன் இனி குடிக்கமாட்டார்!

சிவகார்த்திகேயன் நடிக்கும் படங்களில் கட்டாயம் மது அருந்தும் காட்சிகள் இருக்கும். பெண்களை கிண்டல் செய்வார். இந்த போக்கை பெண்கள் அமைப்பினர் தொடர்ந்து எதிர்த்து வந்தனர். இதையடுத்து, இப்படியான காட்சிகளில் நடிப்பதில்லையென சிவகார்த்திகேயன் முடிவெடுத்துள்ளார். இதுபற்றி அவர் கூறியிருப்பது "நடிக்க வந்த புதிதில் நான் சாதாரண சின்ன நடிகன். அப்படி நடிக்கமாட்டேன் என என்னால் கூற முடியாது. அதனால் இயக்குனர்கள், நான் எது செய்தால் நன்றாக இருக்குமோ அதை செய்ய வைத்தார்கள். நானும் செய்தேன். அதனால் அதையே திரும்ப திரும்ப பேச வேண்டாம். வேலைக்காரன் படத்தின் பின் எனக்கு சமூகப்பொறுப்பு கூடியிருக்கிறது. அந்த படத்தில் மது குடிக்கும் காட்சியோ, பெண்களை கிண்டல் செய்யும் காட்சியோ, பாடலோ இல்லை. அதை யாரும் பாராட்டவில்லை. இருந்தாலும் பரவாயில்லை, இனிவரும் எனது படங்களில் அப்படியான காட்சிகள் இருக்காது. என்னை இயக்கும் இயக்குனர்களும் பொறுப்பணர்ந்து அப்படியான காட்சிகளை வைக்க மாட்டார்கள்" என்றார்.

## இந்திய அழகியுடன் டேட்டிங் போன நடிகர்!

விஜய் நடித்த ஜில்லா, அஜித் நடித்த மங்காத்தா உள்ளிட்ட படங்களில் நடித்தவர் மகத். மிஸ் இந்தியா எர்த் அழகியுடன் இவர் டேட்டிங் சென்ற புகைப்படங்கள் இணையத்தில் வைரலாக பரவி வருகிறது. 2012 இன் மிஸ் இந்தியா எர்த் அழகி பிரச்சி மிஸ்ராவும், மகத்தும் காதலித்து வருகிறார்கள். டுபாயில் நிகழ்ச்சியொன்றில் இருவரும் முதலில் சந்தித்துள்ளனர். பின்னர் அடிக்கடி சந்தித்து காதலை வளர்த்துள்ளனர். டுபாயில் தங்கியிருந்த பிரச்சியை பார்க்க, படப்பிடிப்பு இல்லாத சமயங்களில் மகத் டுபாய் பறந்து விடுவாராம். சமீபத்தில் இருவரும் அவுஸ்திரேலியா சென்று டேட்டிங் செய்துள்ளனர். இந்த புகைப்படங்கள் இணையத்தில் வைரலாகி வருகின்றன. தற்போது தமிழ், தெலுங்கில் தயாராகி வரும் இரண்டு படங்களில் மகத் நடித்து வருகிறார்.

# அவர் புகழுக்கு முடிவேது?

ஸ்ரீதர் சுவாமிநாதன்




**எம்.ஜி.ஆர்** மீது ஏதோ ஒரே நாளில் மதிமுக பொதுச்செயலாளர் வைகோவுக்கு திடீரென பற்று வந்துவிடவில்லை. "அரசியல் களத்தில் எதிரெதிர் அணியில் இருந்தாலும் எம்.ஜி.ஆரின் செயல்பாடுகளையும் மனிதாபிமான நடவடிக்கைகளையும் அறிந்து படிப்படியாக அவர் மீதான மதிப்பு உயர்ந்தது. அவரது மனிதாபிமான நடவடிக்கைகள் காரணமாக இங்குள்ள தமிழர்கள் மட்டுமல்ல; ஈழத் தமிழர்களும் அவரை தெய்வமாக வணங்குகிறார்கள்" என்று கூறும் வைகோ, தனது அனுபவங்களைத் தொடர்கிறார்!

பெரும்பாலோருக்குத் தெரியாத, அறிந்து கொள்ள முடியாத வாய்ப்பு வைகோ வுக்கு கிடைத்துள்ளது. 2004 ம் ஆண்டு எம்.ஜி.ஆரின் ராமாவரம் தோட்ட இல்லத்துக்கு வைகோ சென்றார். அப்போது, எம்.ஜி.ஆர் பயன்படுத்திய பொருட்களை பார்வையிட்டார். அவர் பயன்படுத்திய ஒருநாட்குறிப்பில் இசை சம்பந்தப்பட்ட இலக்கணங்களையும், குறிப்புகளையும் அவர் எழுதி வைத்திருப்பதையும் அவரது இசை ஞானத்தையும் அறிந்து வைகோ அசந்துவிட்டார். இங்கே ஒரு வருத்தமான விஷயம் என்னவென்றால், கடந்த டிசம்பர் மாதம் ஏற்பட்ட பெருவெள்ளத்தில் அந்த நாட்குறிப்பு மட்டுமின்றி, எம்.ஜி.ஆர் பயன்படுத்திய பல பொருட்களும் அடித்துச் செல்லப்பட்டுவிட்டன.

ஈழத் தமிழர் பிரச்சினை தொடர்பாக 1987ம் ஆண்டு ஜூலை மாதம் 29ம் திகதி, இந்திய இலங்கை ஒப்பந்தம் ஏற்பட்டது. இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியும் இலங்கை அதிபர் ஜெயவர்த்தனவும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். "இந்த ஒப்பந்தத்தில் விடுதலைப் புலிகளுக்கு விருப்பம் இல்லை. எம்.ஜி.ஆருக்கும் இந்த ஒப்பந்தத்தில் உடன்பாடு இல்லை. சென்னை கடற்கரையில் ராஜீவ் காந்தியுடன் கலந்துகொண்ட பொதுக்கூட்டத்தில்கூட எம்.ஜி.ஆர் பட்டும் படாமலும்தான் பேசினார்" என்று வைகோ கூறுகிறார்.

பின்னர், அமெரிக்காவில் மருத்துவப் பரிசோதனைக்காக எம்.ஜி.ஆர் சென்றார். அவர் அங்கிருக்கும் சமயத்தில், இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் இந்திய அமைதிப் படை விடுதலைப் புலிகள் மீது தாக்குதல் நடத்தியது. "அந்தச் சமயத்தில் பிரதமர் ராஜீவ் காந்தியும் அமெரிக்காவுக்கு அரசு முறை பயணம் சென்றார். டென்னிஸ் விளையாட்டில் இந்தியாவுக்கு புகழ் தேடித்தந்த விஜய் அமிர்தராஜ், அமெரிக்க அரசு வட்டாரத்தில் செல்வாக்கு மிக்கவர்.

இந்திய அமைதிப்படை யின் தாக்குதலை நிறுத்தச் சொல்லி விஜய் அமிர்தராஜ் மூலம் ராஜீவ் காந்திக்கு எம்.ஜி.ஆர் கடிதம் அனுப்பியிருக்கிறார். உடல் நலம் பாதிக்கப்பட்டு மருத்துவப் பரிசோதனைக் காக வந்திருக்கும் நிலையிலும் எம்.ஜி.ஆரின் இந்தச் செயல், அவர் மீது எனக்கு மிகுந்த மரியாதையையும் மதிப்பையும் ஏற்படுத்தியது" என்கிறார் வைகோ.



அமெரிக்காவில் எம்.ஜி.ஆர் இருந்த போது நடந்த இன்னொரு நிகழ்ச்சியையும் வைகோ நினைவு கூர்கிறார். அந்த நேரத்தில் சென்னையில் இருந்த விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த கிட்டு வீட்டுக் காவலில் வைக்கப்பட்டார். இதை அறிந்து அவரது வீட்டுக்குச் சென்ற வைகோவை போலீஸார் கைது செய்து இரவு 1 மணிக்கு விடுவித்தனர். மீண்டும் நேராக கிட்டு வீட்டுக்கு சென்ற வைகோவை போலீஸார் மறுபடியும் கைது செய்து காலையில் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தி 15 நாள் ரிமாண்ட் செய்து மத்திய சிறையில் அடைத்தனர்.

மாலையில் அவரை போலீஸார் திடீரென விடுவித்தனர். காரணம் கேட்ட வைகோவுக்கு இன்ப அதிர்ச்சி! "நீங்கள் கைதாகி சிறையில் அடைக்கப்பட்டிருக்கிறீர்கள் என்பதை அறிந்த முதல்வர் எம்.ஜி.ஆர், உங்களை விடுவிக்கச் சொல்லி அமெரிக்காவில் இருந்து உத்தரவிட்டுள்ளார். கிட்டுவை பார்வையாளர்கள் சந்திப்பதை போலீஸார் தடுக்க வேண்டாம் என்றும் முதல்வர் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்" என்று போலீஸ் அதிகாரிகள் கூறியபோது வைகோ வின் மதிப்பில் எம்.ஜி.ஆர் மேலும் உயர்ந்தார்.

எம்.ஜி.ஆர் பற்றி கிட்டு கூறியதைக் கேட்டு வைகோ கண்கலங்கிய சம்பவமும் உண்டு. அப்போது, வைகோ திமுகவில் இருந்தார். சென்னை அடையாறில் உள்ள கிட்டுவை அவர் ஒருநாள் சந்தித்தார். "முதல்வர் எம்.ஜி.ஆரிடம் விடுதலைப் புலிகள் நெருக்கமாக உள்ளனர். திமுக தலைமை யோடும் நீங்கள் நெருக்கமாக இருக்கலாமே?" என்று கிட்டுவிடம் உரிமையோடு கேட்டார்.

அப்போது கிட்டு சொன்ன பதில் வைகோவை கலங்கடித்துவிட்டது. கிட்டு அமைதியாக தன் வயிற்றைத் தடவிக் காட்டி, "இங்கே இருக்கிற பொடியன்களுக்கு (புலிகள் இயக்க இளைஞர்கள்) வயிறு இருக்கிறதே, சாப்பிட ணுமே அண்ணே? இரண்டு நாட்கள் முன்பு முதல்வர் எம்.ஜி.ஆரைப் பார்க்க அவரது வீட்டுக்குச் சென்று எங்கள் கஷ்டத்தைச் சொன்னேன். உடனே அவர் பெரிய தொகை கொடுத்தார்.

முகத்தைப் பார்த்து பசி அறியும் தாயைப் போல எம்.ஜி.ஆர் எங்களுக்கு உதவுகிறார். அதனால்தான் அவரோடு நெருக்கமாக இருக்கிறோம். மற்றபடி, திமுக மீது எங்களுக்கு எந்த வருத்தமும் இல்லை" என்று கிட்டு சொன்னதைக் கேட்டு கண்கலங்கிய வைகோ, உணர்ச்சிப் பெருக்குடன் கிட்டுவைப் பார்த்து கைகுவித்து, "தவறாகக் கேட்டுவிட்டேன்" என்றார். அப்போது வைகோ வின் மனதில் எவரெஸ்ட் சிகரமாய் உயர்ந்தார் எம்.ஜி.ஆர்!

மாறிவிட்ட அரசியல் சூழலில் 1989ம் ஆண்டு திமுக ஆட்சி அமைந்ததற்குப் பிறகு, இலங்கையில் விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனை சந்திக்க வன்னிக் காட்டுக்குச் செல்ல வைகோ முடிவு செய்தார். "பட்டுக்கோட்டை வழியாகக் கோடியக்கரை சென்று, விடுதலைப் புலிகள் உதவியுடன் படகில் புறப்பட்டு கடற்படை கப்பல்களிடம் இருந்து தப்புவதற்காக 180 கிலோ மீட்டர் சுற்றி, நாயாறு பகுதி கடற்கரையில் இறங்கினோம். அங்கிருந்து அடர்ந்த காடுகள் வழியாக இரண்டு நாட்கள் நடந்து சென்று வன்னிக் காட்டில் பிரபாகரனை சந்தித்தேன். அப்போதுதான் எம்.ஜி.ஆர் பற்றி அவர் என்னிடம் கூறினார்" என்று மனதில் அழியாத நினைவுகளை வெளியிடுகிறார் வைகோ!

விடுதலைப் புலிகள் இயக்கத்தை தோற்று வித்த ஆரம்ப காலத்தில், எம்.ஜி.ஆர் மீது பிரபாகரனுக்கு பெரிய பற்று கிடையாது. திரைப்படங்களில் அவரது சண்டைக் காட்சிகளை பார்த்து ரசித்திருக்கிறார். "தமிழகம் வந்த சில காலத்துக்குப் பிறகுதான் எம்.ஜி.ஆர் என்ற பிரம்மாண்டத்தை நேரில் கண்டு நான் உணர்ந்தேன்" என்று வைகோவிடம் கூறிய பிரபாகரன், அதற்கான காரணங்களையும் அடுக்கியிருக்கிறார்!

"ஆரம்ப காலத்தில் விடுதலைப் புலிகளுக்கு மத்திய அரசும் உதவி செய்திருக்கிறது. அப்போது புலிகள் இயக்கம் தடை செய்யப்படவில்லை" என்று கூறும் வைகோ, சில விநாடிகள் கண்களை மூடி பிரபாகரன் தன்னிடம் கூறியதை நினைவுகூர்கிறார்.

எம்.ஜி.ஆரை ஒருமுறை அவரது வீட்டில் பிரபாகரனும் அன்ரன் பாலசிங்கமும் சந்திக்கச் சென்றனர். இருவருக்கும் விருந்தளித்து உபசரித்து விட்டு, "நான் உங்களுக்கு ஏதாவது உதவி செய்ய வேண்டுமா?" என்று எம்.ஜி.ஆர் கேட்டிருக்கிறார். புலிகள் இயக்கத்துக்கு அப் போது நிதி தேவைப்பட்டது. 'என்ன பெரிதாக கொடுத்துவிடப் போகிறார்' என்று நினைத்த பிரபாகரன், ஒரு குறிப் பிட்ட தொகையை எம்.ஜி.ஆரிடம் கோரியுள்ளார்: "நாங்கள் எதிர்பார்க் காத ஒரு பெரும் தொகையை எம்.ஜி.ஆர் தங்களுக்குக் கொடுத்ததாக

தொடர்ச்சி 18-ம் பக்கம்...

சமூக வலைத்தளங்களில் f YouTube /deepamlive



# 'ரிவர்ஸ் ஸ்விங்' கலை... ஏமாற்று அல்ல!



பந்தைச் சேதப்படுத்திய விவகாரத்தில் ஒட்டுமொத்த அவுஸ்திரேலியாவுமே பயங்கர அப்செட்டில் இருக்கிறார்கள். கிரிக்கெட் அவுஸ்திரேலியா கிட்டத் தட்ட அடுத்து என்ன செய்வதென தெரியாத தடுமாற்றத்தில் இருக் கிறது. இதுதான் சமயம் என, அவுஸ்தி ரேலியர்கள் மீது வன்மம் கொண்ட ஊடகங்கள் இதை ஊதிப்பெருப்பித்த படியிருக்கின்றன. அவுஸ்திரேலியாவை விட இந்தியர்களிற்குத்தான் இதில் பெரும் அக்கறை!

இது ஒருபுறம் என்றால், ஸ்மித், வோர்னர், பேங்க்ஃரொப்ட் ஆகிய மூவரும் கண்ணீர்விட்டு கதறியழுத வீடியோக்கள் காட்சியை கணிசமாக மாற்றிவிட்டன. அவர்கள் தவறுக்காக வருந்துகிறார்கள் அதிகபட்ச தண்டனை அளிக்கப்பட்டுவிட்டது, அதை குறைக்க வேண்டும் என்ற குரல்கள் வலுக்க ஆரம்பித்துள்ளன.

இவ்வளவு சர்ச்சையையும் தோற்று வித்த, அந்த 'ரிவர்ஸ் ஸ்விங்' என்றால் என்ன?

கூக்ளி, தூஸ்ரா, லெக் பிரேக், ஓஃப் பிரேக் என ஸ்பின்னர்களுக்கு எக்கச்சக்க ஆயுதங்கள் உண்டு. அதைப் போல் வேகப்பந்து வீச்சா ளர்களுக்கு பௌன்ஸ், யோர்க்கர், ஸ்விங் போன்றவற்றைச் சொல்லலாம். ஆனால், ஓவரின் ஆறு பந்துகளையும் பௌன்ஸராக வீச முடியாது. ஒன்று அல்லது இரண்டுதான். அதேபோல் யோர்க்கரை ஒவ்வொருமுறையும் துல்லியமாக வீசிவிட முடியாது. ஃபுல் டோஸாக மாறி வினையாகவும் வாய்ப்புண்டு. ஆக, வேகப்பந்து வீச்சாளர்கள் நம்பக்கூடிய ஒரே ஆயுதம் ஸ்விங் மட்டுமே. அதுவும் பந்து புதிதாக இருக்கும்வரை மட்டுமே இன்ஸ்விங் அல்லது அவுட்ஸ்விங் செய்ய முடியும். பந்து பழசாகிவிட்டால் ஸ்விங் செய்வது இயலாத காரியம். பழைய பந்திலும் எப்படியாவது துடுப்பாட்டக்காரரை திக்குமுக்காடச் செய்யவேண்டும் என்ற பந்துவீச்சாளர்களின் எண்ணம்தான் ரிவர்ஸ் ஸ்விங் என்ற ஆயுதத்தை அறிமுகப்படுத்தியது.

'conventional swing' எனப்படும் சாதாரண ஸ்விங்குக்கு பந்து புதிதாக இருக்கவேண்டும். அப்படி இருக்கு ம்போது, (வலது கை துடுப்பாட்டக் காரர்களுக்கு) ஷைனிங்காக இருக்கும் பக்கம் கையின் வலதுபுறம் இருந்தால் அவுட் ஸ்விங்கும், இடது புறம் இருந்தால் இன்ஸ்விங்கும் ஆகும். இதற்கு நேர் எதிரானதுதான் ரிவர்ஸ் ஸ்விங். ஷைனிங் பகுதி வலது புறமிருந்தால் இன்ஸ்விங்கும், இடது புறமிருந்தால் அவுட்ஸ்விங்கும் ஆகும். 'conventional swing' ரிவர்ஸாக நடப்பதால் அதற்கு ரிவர்ஸ் ஸ்விங் என்று பெயர்.

ரிவர்ஸ் ஸ்விங் மன்னன் எனப் புகழப்பட்ட பாகிஸ்தான் ஜாம்பவான் வாசிம் அக்ரம் "ஸ்விங் என்பது ஒரு அறிவியல்" என்று கூறுவார். ஆம், உண்மையில் அதன் பின்னால் அறிவியல்தான் ஒளிந்திருக்கிறது. பந்தை ரிவர்ஸ் ஸ்விங் செய்ய வேண்டுமென்றால், அதற்கு ஒரு விதி இருக்கிறது. பந்தின் இரு பகுதிகளின் எடையிலும் எடையில் வித்யாசம் இருக்கவேண்டும். இது பெர்னோலி தியரத்தை ஒட்டியதுதான். இதற்காக தான் பந்தின் ஒரு பகுதியை மட்டும் வீரர்கள் அதிகம் தேய்ப்பார்கள். எடை அதிகமாக இருக்கும் பகுதியை (ஷைனிங் பகுதி) வலதுபுறம் வைத்து வீசினால் அவுட்ஸ்விங் ஆவதற்குப் பதிலாக இன்ஸ்விங் ஆகும். காரணம், எடை அதிகமாக இருக்கும் பகுதியை விட, குறைவாக இருக்கும் பகுதியில் காற்றோட்டம் அதிகமாக இருக்கும். அது பந்தை உள்நோக்கித் தள்ளுவதால், இன்ஸ்விங் ஆகும். பந்து காற்றில் இருக்கும்போதே உள்நோக்கி நகரத் தொடங்குவதால், (உதாரணமாக) ஓஃப் ஸ்டம்புக்கு வெளியே ரிலீஸ் ஆகும் பந்து, பிட்ச் ஆகும்போதே மிடில் ஸ்டம்ப் லைனுக்கு நேராக பிட்ச் ஆகும். ஷைனிங் பகுதியைக் கவனித்து, அவுட் ஸ்விங் ஆகும் என நினைக்கும் துடுப்பாட்டக்காரர், பிட்ச் ஆகும் இடத்தினாலும், அதன்பின் ஆகும் இன்ஸ்விங்கினாலும் ஏமாந்து போவார். இதனால்தான், ரிவர்ஸ் ஸ்விங் பந்துவீச்சாளர்களின் மிகப்பெரிய ஆயுதமாகக் கருதப்படுகிறது.

சரி, அதெப்படி பந்தின் ஒரு பகுதி எடை அதிகமாகவும், மற்றொரு பகுதி குறைவாகவும் இருக்கும்?

பொதுவாக, ஆட்டத்தின் நடுவில் பழையதாகும்போது, பந்து அதன் ஷைனிங் தன்மையை இழக்கும். எடை குறையும். ஒரு பகுதியின் எடையைக் கூட்டுவதற்காகத்தான் ஃபீல்டிங் அணியினரும், பந்து வீச்சாளரும் தொடர்ச்சியாக பந்தில் எச்சிலைத் துப்புவதும் தடவுவது மாக இருப்பார்கள். அதனால், இரண்டு பகுதிகளுக்கான எடை யிலும் வித்தியாசம் ஏற்படும். இதுவும் ஒரு கட்டத்தில் பந்து வீச்சாளர்களுக்குப் பிரச்னையாகப் பட்டது. இப்படிச் செய்வதற்குப் பந்து மிகவும் பழையதாக வேண்டும். 60 ஓவர் வரையிலாவது பயன்பட்டிருக்க வேண்டும். ஆனால், அதற்கு முன்பு?

2025 ஓவர்களுக்கு மேல் சாதாரண ஸ்விங் முறைகளும் எடுபடாது. அதனால், ரிவர்ஸ் ஸ்விங் செய்ய அதுவரை கடைபிடித்துவந்த முறை களையும் ரிவர்ஸாகச் செய்யத் தொடங்கினர்.

எதற்காக, பழையதாகும் வரை காத்திருந்தது, ஒரு பகுதியின் எடையைக்கூட்ட வேண்டும்? பேசாமல் கொஞ்சம் புதிதாக இருக்கும்போதே இன்னொரு பகுதியின் எடையைக் குறைத்துவிட்டால்? இந்தச் சிந்தனை எழுந்த பிறகுதான் Ball tampering என்ற வார்த்தை புழக்கத்துக்கு வந்தது. வீரர்கள், பந்தின் ஒருபக்கத்தை ஏதேனும் பொருள் கொண்டு தேய்ப்பதன் மூலம், அதன் ஷைனிங் தன்மையை இழக்கச் செய்து, எடையைக் குறைப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். ஷூவில் இருக்கும் ஆணி, ஜிப், போத்தல் மூடிகள், விரல் நகம் என எத்தனையோ பொருள்களைக் கொண்டு இதை நடைமுறைப்படுத்தத் தொடங்கினார்கள். ஆட்டத்தின் எந்த தருணத்திலும் ரிவர்ஸ் ஸ்விங் பந்துகள் துடுப்பாட்டக்காரர்களை தாக்கின. கொஞ்சமும் எதிர்பாராத துடுப்பாட்டக்காரர்கள் இதனால் திக்குமுக்காடிப் போனார்கள். 90 களில் பாகிஸ்தான் கிரிக்கெட்டில் கோலோச்சியதற்கு மிகப்பெரிய காரணம் இதுதான். ஏனெனில், இது 'மேட் இன் பாகிஸ்தான்'. இதை அறிமுகம் செய்து வைத்தவர், பாகிஸ் தான் பந்துவீச்சாளரான சர்ஃபராஸ் நவாஸ்.

அந்தக் காலகட்டத்தில் பாகிஸ்தான் அணி மீது தொடர்ச்சியாக ball tampering புகார் வைக்கப்பட்டது. இம்ரான் கான் காலத்தில் தொடங்கி, பின்னர் வாசிம் அக்ரம், வக்கார் யூனுஸ் என்று ரிவர்ஸ் ஸ்விங்கில் இவர்கள் மிரட்ட, இவர்களை சர்ச்சைகள் தொடர்ந்துகொண்டே இருந்தன. வாசிம் அக்ரமும், வாக்கர் யூனுஸும் 'சுல்தான்ஸ் ஆப் தி ஸ்விங்' என புகழப்பட்டனர். 'Looking after the cricket ball' என்று அக்ரம் தான் விளையாடிய காலத்தில் சொன்ன ஒரு வாசகம் மிகவும் பிரசித்தி பெற்றது. அதாவது பந்தின் தன்மையை ரிவர்ஸ் ஸ்விங்குக்கு ஏற்றதுபோல் பராமரிப்பது. அதில் மொத்த அணிக்கும் பங்கு இருந்ததாகக் கூறினார் அக்ரம். ஆனால், அவர்கள் பந்தை எப்படிக் கையாண்டார்கள் என்பது பற்றியும், அவர்களின் ரிவர்ஸ் ஸ்விங் மந்திரத் தைப் பற்றியும் வெளியே சொல்ல மறுத்துவிட்டார்.

அவருக்கு அடுத்த தலைமுறை வீரரான ஷோயப் அக்தர், தான் அடிக்கடி பந்தை சேதப்படுத்தியதாக 'Controversially yours' என்ற தன் சுயசரிதையில் குறிப்பிட்டார். "எல்லா ஆடுகளுங்களும் துடுப்பாட்டத்திற்கு சாதகமாக இருக்கும்போது, பந்துவீச் சாளர்களான நாங்களும் இங்கு பிழைக்கவேண்டுமே!" என்று அதற்கான காரணத்தைக் குறிப்பிட்டிருந்த அக்தர், கிட்டத்தட்ட அனைத்து பாகிஸ்தான் பந்துவீச்சாளர்களுமே பந்தை சேதிப் படுத்தியதாக எழுதியிருந்தார். அக்தர் பந்தை சேதப்படுத்திய குற்றத்துக்காக இரண்டு முறை தண்டிக்கப்பட்டவர். இவ்வளவு ஏன், 1990ல் பாகிஸ்தான் அணியுடன் நடந்த டெஸ்ட் போட்டியில் பந்தை சேதப்படுத்தியதாக நியூசிலாந்து வீரர்கள் கிறிஸ் பிரிங்கிள், மார்டின் குரோவ் ஆகியோரும் ஒப்புக்கொண்டனர்.


ball tampering செய்துதான் பாகிஸ்

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

தான் வீரர்கள் ரிவர்ஸ் ஸ்விங் செய்தார்கள் என்ற ரீதியில் இந்திய ஊடகங்கள் இப்பொழுது எழுதுகின்றன அது தவறு. எந்த ஆதாரமும் இல்லாமல் அப்படி பேசக்கூடாது. சச்சின் தெண்டுல்கர் கூட பந்தை சேதப்படுத்திய விவகாரத்தில் சிக்கியவர்தான்.

ஆனால் சில அணிகளில் அனைத்து வீரர்களுக்குமே பந்தை பழுதாக்குவது வேலையாகக் கொடுக்கப் பட்டிருக்கிறது என்பதும் புரிகிறது. பந்துவீச்சாளர் மட்டுமே செய்தால், அதன் தன்மையை மாற்ற தாமதமாகும். அனைவரும் அதில் ஈடுபட்டால், பந்து சீக்கிரம் பழசாகும். அதனால், அந்தப் பொறுப்பு ஃபீல்டர்களின் தலையிலும் விழுகிறது. மார்கஸ் டிரஸ்கோதிக், ஃபாஃப் டுப்ளெஸ்ஸி முதல் இப்போது பேங்க்ராஃப்ட் வரை அதன் பலிகடாதான். இப்போது பேங்க்ராஃப்ட் பந்தைச் சேதப்படுத்தியதன் நோக்கம் புரிகிறதா..?

ஆனால், அவுஸ்திரேலியர்கள் இந்த முடிவைக் கையில் எடுத்ததற்கு இன்னொரு காரணமும் இருக்கிறது. பந்துவீச்சாளர்களின் ஸ்விங் மூவ்மென்ட்களை தொடர்ந்து கண்காணித்த ஒரு புள்ளிவிவரம், கடந்த 2 ஆண்டுகளில், (25வது ஓவர் முதல் 80வது ஓவர் வரை) அவுஸ்திரேலிய வேகப்பந்துவீச்சாளர்கள் சராசரியாக 0.82 டிகிரி அளவுக்குத்தான் ஸ்விங் மூவ்மென்ட் பெற்றிருக்கிறார்கள் என்று சொல்கிறது. மற்ற அணிகளை ஒப்பிட்டுப் பார்க்கும்போது இது மிகவும் குறைவு. சொல்லப்போனால், சிம்பாப்வேவைத் தவிர அனைத்து அணியின் பந்துவீச்சாளர்களுமே அவுஸ்திரேலியாவைவிட நல்ல ஸ்விங் மூவ்மென்ட் ஏற்படுத்தியுள்ளனர்.




இத்தனைக்கும் இன்றைய திகதிக்கு ரிவர்ஸ் ஸ்விங் மன்னனாகக் கருதப்படும் மிட்சல் ஸ்ரோர்க் இருந்தும் இந்த நிலைமை!

சரி, எத்தனையோ அணிகள், எத்தனையோ முன்னணி வீரர்கள் அதைத் தொடர்ந்து செய்திருக்கின்றன. ஆனால், இப்போது அவுஸ்திரேலிய அணி மீது மட்டும் ஏன் இவ்வளவு உக்கிரம் காட்டவேண்டும்..?

பாகிஸ்தானியர்கள் அதைப் பயன்படுத்தியதிலும், அவுஸ்திரேலியர்கள் அதைப் பயன்படுத்தியதிலும் ஒரு வித்யாசம் இருக்கிறது... நோக்கம்!

அக்தர் தன் சுயசரிதையில் சொல்லியிருப்பது - "Every pitch is favouring the batsmen and this is the only way to SURVIVE". அக்தர் செய்ததற்கோ, அக்ரம் செய்ததற்கோ, இம்ரான் கான் செய்ததற்கோ காரணம் அதுதான். கொஞ்சம் கூட பந்துவீச்சுக்கு ஒத்துழைக்காத ஆடுகளங்களில் 'சர்வைவ்' ஆகவேண்டும். அவர்கள் எந்த ஒரு குறிப்பிட்ட போட்டியையும் டார்கெட் செய்து, அந்த ஆயுதத்தைக் கையில் எடுக்கவில்லை.


'தென்னாப்பிரிக்காவை வீழ்த்த வேண்டும். இந்தத் தொடரை வெல்ல வேண்டும்' என்ற நோக்கத்துடன் அவுஸ்திரேலியர்கள் இதை செய்தனர்.

ரிவர்ஸ் ஸ்விங் என்பது ஒரு கலை. அக்ரம் சொன்னதுபோல் அது அறிவியல். அறிவியலில் திருட்டுத்தனங்களை புகுத்தாமல் இருப்பது கிரிக்கெட்டிற்கு நல்லது. நடந்து முடிந்த சம்பவம் ஒரு பாடமாக அமைந்துள்ளது. சம்பந்தப்பட்ட மூன்று வீரர்களும் அதை உணர்ந்துவிட்டார்கள் போல தெரிகிறது. அதனால் இதை மறப்போம், மன்னிப்போம்!

## எப்படி மாட்டினார்கள் அவுஸ்திரேலியர்கள்?

**அ**வுஸ்திரேலியர்களால் 26வது ஓவரில் பந்தை ரிவர்ஸ் ஸ்விங் செய்ய முடிந்துள்ளது. இதில்தான் அவர்கள் சிக்கியுள்ளனர். தென்னாபிரிக்க டெஸ்ட் தொடருக்காக ஒளிபரப்பு நிறுவனத்துடன் பணியாற்ற ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்த அந்நாட்டு முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் ஃபானி டிவில்லியர்ஸ் தான், அவுஸ்திரேலிய அணியின் உத்தியை கண்டுபிடித்தார். "26, 27, 28வது ஓவரில் பந்து ரிவர்ஸ் ஸ்விங் செய்ய முடிகிறது என்றால் அவர்கள் ஏதோ தகிடுதத்தம் செய்கிறார்கள் என்று சந்தேகித்தேன். அதனால் நாங்கள் எங்கள் கமரா நபர்களுக்கு இதன் மீது கவனம் செலுத்துங்கள், அவர்கள் பந்தை ஏதோ செய்கின்றனர் என்று அறிவுறுத்தினோம்.

ஒன்றரை மணி நேரம் அவர்கள் ஆட்டத்தை அலசினார்கள். அதன் பின்னரே பேங்ஃராப்ட்டை குறிவைத்து கமரா பின் தொடர்ந்தது. கடைசியில் கையும் களவுமாக அவர், பிடிபட்டார். ஆடுகளத்தில் புற்கள் இருக்கும் போது ரிவர்ஸ் ஸ்விங் ஆவது சாத்தியமில்லை. ஒவ்வொரு சென்டிமீட்டரிலும் பிளவுகள் இருக்கும் பாகிஸ்தான் ஆடுகளம் அல்ல இது. எனவே இவ்வளவு குறைவான ஓவரில் அதுவும் இந்தப் ஆடுகளத்தில் ரிவர்ஸ் ஸ்விங் அவுஸ்திரேலிய பந்து வீச்சாளர்களுக்கு சாத்தியமேயில்லை. சாதாரண பந்து தேய்ப்பு முறை பயன்படாது, ஸ்டீலைக் கொண்டு பந்தைத் தேய்க்க வேண்டும். அப்போதுதான் ரிவர்ஸ் ஸ்விங் உடனடியாகக் கிடைக்கும்" என்றார்.




16-ம் பக்க தொடர்ச்சி...

வன்னிக் காட்டில் பிரபாகரன் என்னிடம் தெரிவித்தார். தன்னை எப்போது வேண்டுமானாலும் பிரபாகரன் சந்திக்க வசதியாக ஒரு தொலைபேசி எண்ணையும் ஒரு அடையாள அட்டையையும் அவரிடம் எம்.ஜி.ஆர் கொடுத்திருக்கிறார்" என்கிறார் வைகோ!

பின்னர், பிரபாகரன் கூறிய கருத்து வைகோவை தூக்கிவாரிப் போடவைத்திருக் கிறது. "இந்திரா காந்தி மறைவுக்குப் பிறகு ராஜீவ் காந்தி பிரதமரானதும் அதுவரை எங்களுக்கு வழங்கிவந்த உதவிகள் தொடர்பாக பேசவேண்டும் என்று வெளியுறவு அமைச்சகம் அழைத்ததால் டெல்லி சென்று சந்தித்தோம். ஆனால், 'இனி எந்த உதவியும் செய்ய முடியாது' என்று அரசு கைவிரித்துவிட்டது" என்று வைகோவிடம் பிரபாகரன் கூறியிருக் கிறார்.

தொடர்ந்து அவர் கூறியதைக் கேட்ட வைகோவின் மனதில் எம்.ஜி.ஆர் விஸ்வரூபம் எடுத்து நின்றார். "அந்த நேரத்தில் டெல்லி வந்திருந்த முதல்வர் எம்.ஜி.ஆரை பிரபாகரன் சந்தித்தார். மத்திய அரசு நான்கு கோடி ரூபாய் தருவதாகச் சொல்லி பின்னர், மறுத்ததை பிரபாகரன் மூலம் அறிந்த எம்.ஜி.ஆர், 'அந்த தொகையை நான் தருகிறேன்' என்று கூறி, தமிழக அரசு மூலம் வெளிப்படையாகவே நான்கு கோடி ரூபாயை வழங்கியதாக பிரபாகரன் என்னிடம் கூறினார்" என்று உணர்ச்சிபூர்வமாக கூறுகிறார் வைகோ!







"ஈழத் தமிழர்களுக்காக அவர் செய்த உதவி களைப் பார்க்கும்போது, எம்.ஜி.ஆர் இருந்திருந்தால் தமிழ் ஈழம் மலர்ந்திருக்கும். சுமார் ஒன்றரை லட்சம் அப்பாவித் தமிழர்கள் அநியாயமாக கொல்லப்பட்டிருக்க மாட்டார்கள்" என்று சொல்லி ஏக்கப் பெருமூச்சு விடுகிறார் வைகோ. அந்தப் பெருமூச்சின் உஷ்ணம் இதயத்தைச் சுடுவது கலங்கிய அவரது கண்களில் தெரிகிறது.

தொடரின் ஆரம்பத்தில் குறிப்பிட்டதுபோல, ஒருவர் ஒருதுறையில் வெற்றிபெறுவதே கடினம். ஆனால், திரைப்படம், அரசியல் என இரு துறைகளிலும் ஈடு, இணையற்ற வெற்றியைப் பெற்று, அவற்றில் முதலிடம்பிடித்தவர் எம்.ஜி.ஆர்! வெற்றி பெறுவதைவிட அதைத் தக்கவைத்துக் கொள்வது இன்னும் கடினம். கடைசிவரை முதலிடத்திலேயே இருந்ததுதான் எம்.ஜி.ஆர் என்ற மூன்றெழுத்தின் அதிசயம்!

எம்.ஜி.ஆர் இன்னும் மறையவில்லை; தனது அழியாப் புகழால் மக்கள் மனங்களில் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார். அப்படி வாழ்வாங்கு வாழ்பவருக்கு வாழ்த்துப்பா பாடுவதுதானே முறை! அதற்கும் அவரது படப் பாடல்தான் கைகொடுக்கிறது. 'ஊருக்கு உழைப்பவன்' படத்தில் 'பிள்ளைத் தமிழ் பாடுகிறேன்...' என்ற அருமையான பாடல். குழந்தையை வாழ்த்திப் பாடும் அந்தப் பாடலில் வரும் வரிகள், குழந்தை உள்ளம் கொண்ட எம்.ஜி.ஆருக்கு கச்சிதமாய் பொருந்துகிறது...

**'நீலக்கடல் அலைபோல நீடூழி நீ வாழ்க!**
**நெஞ்சமெனும் கங்கையிலே நீராடி நீ வாழ்க!**
**காஞ்சி மன்னன் புகழ்போல காவியமாய் நீ வாழ்க!**
**கடவுளுக்கும் கடவுளென கண்மணியே நீ வாழ்க!**

நிறைந்தார்.




# ஏற்றுமதித் தொழிலைத் தொடங்குவது எப்படி?

**14** நீங்களும் பிஸ்னஸ் புள்ளி ஆகலாம்

நிறைய பிஸ்னஸ் வாய்ப்புகளும், பிஸ்னஸில் அதிக லாபமும் கிடைக்க வேண்டுமெனில், கடல் தாண்டி வணிகம் செய்ய வேண்டியது அவசியம் என்பதைக் கடந்த இதழில் கூறியிருந்தோம். கடல் கடந்து வணிகம் செய்வதை நாம் இன்று, நேற்றல்ல, பல நூறு ஆண்டுகளுக்கு முன்பிருந்தே செய்துவருகிறோம். விமானச் சேவைகள், நாடுகளுக்கிடையே ஆரம்பிப்பதற்குமுன், கப்பல்தான் பிற நாடுகளுடனான வர்த்தகத்துக்குப் பெரும் உதவியாக இருந்தது. இன்றும் விமானத்தைக் காட்டிலும், கடல் அல்லது கப்பல் மூலமான வர்த்தகம் தான் முன்னிலையில் இருக்கிறது.

இலங்கையின் நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்டிருப்பதுதான் ஏற்றுமதி பிஸ்னஸ் செய்பவர்களுக்கு கிடைத்த வரப்பிரசாதம். வடக்கில் ஏற்றுமதி செய்வதற்கான வசதிகளும், உள்கட்டமைப்பு அம்சங்களும் இல்லை. இது பாதகமான அம்சம்தான்.

இனி ஏற்றுமதித் தொழிலை எப்படித் தொடங்குவது என்று பார்ப்போம். ஏற்றுமதித் தொழில் செய்ய, உங்களிடம் அரசு தரும் உரிமமான 'ஐஇ கோட்' (IE Code) இருப்பது அவசியம் என்றும், அதனை ஒரு நிறுவனத்தின் பெயரில்தான் வாங்க முடியும் என்றும் கூறியிருந்தோம்.

### பெயர் முக்கியம்

ஏற்றுமதித் தொழில் மட்டும்தான் செய்யப் போகிறேன் என்று நினைப்பவர்களுக்கு இந்த உரிமம் கிடைக்கும். இந்த எண்ணை வாங்குவதற்கு முன், பிற நாட்டின் இறக்குமதியாளர்களுக்கு எளிதில் புரியும் வகையில் ஒரு பெயரைத் தேர்தெடுத்து, நிறுவனத்தைப் பதிவு செய்துகொள்ள வேண்டும்.

### நீங்களும் ஜெயிக்கலாம்

ஏற்றுமதியில் ஜெயிப்பதற்கான சில விஷயங்களை நீங்கள் கற்றுக்கொள்ள வேண்டும். என்னால் முடியுமா என்கிற சந்தேகம் உங்களுக்கு வேண்டும். வர்த்தகத்தில் தொடர்பில்லாதவர்கள் பலரே, வர்த்தகத்தில் குறிப்பாக ஏற்றுமதி வர்த்தகத்தில் ஜொலிக்கிறார்கள்.

இதற்குத் தேவை, முன் அனுபவமும் ஏற்றுமதி குறித்த அடிப்படை அறிவும்தான். இவற்றைப் பெறவேண்டுமென்றால் பின்வரும் நான்கு விஷயங்களைக் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டும். அவை, கற்றல் அவசியம், பயிற்சி வகுப்புகள், முதல் முயற்சி, உள்ளூரில் ஒரு வெற்றி. இந்த நான்கு விஷயங்களைப் பற்றி சுருக்கமாகச் சொல்கிறேன்.

### கற்றல் அவசியம்

ஏற்றுமதித் தொழில் குறித்த அடிப்படை விஷயங்களைப் படித்துத் தெரிந்துகொள்ள வேண்டும். ஏற்றுமதித் தொழில் என்றால் என்ன, அதில் உள்ள சாதக, பாதகங்கள் என்ன, என்ன செய்ய வேண்டும் என்ன செய்யக்கூடாது, பொருளை எப்படித் தேர்ந்தெடுப்பது, நாடுகளை எப்படித் தேர்ந்தெடுப்பது, இறக்குமதியாளரை எப்படி அணுகுவது, பொருளை எப்படிப் பாதுகாப்பாக அனுப்புவது, அனுப்பிய பொருளுக்கு எப்படிப் பணத்தை வாங்குவது என்று பல விஷயங்கள் குறித்தும் தெரிந்திருக்க வேண்டும்.

### பயிற்சி வகுப்புகள்

பயிற்சி வகுப்புகள் மூலமாகவும், மேலே சொன்ன அடிப்படை விஷயங்களைப் பற்றி ஏற்றுமதித் துறையில் அனுபவம் பெற்றவர்கள் மூலமாகவும் அறிந்து கொள்ளலாம். ஆனால், அனைத்து விஷயங்களையும் எல்லோரும் சொல்லித் தந்துவிட மாட்டார்கள். மேலும், ஏற்றுமதி செய்பவர்கள் எல்லோருமே அனைத்து விஷயங்களையும் தெரிந்து வைத்திருக்கவும் மாட்டார்கள். ஏற்றுமதி குறித்த நுணுக்கங்களைக் கற்றுக் கொடுக்க இலங்கையில் முறையான கட்டமைப்புக்கள் கிடையாது. அதனால் தனிநபர்களிடம் இருந்து தான் கற்றுக்கொள்ள வேண்டும்.

### முதல் முயற்சி

ஏற்றுமதித் தொழிலைப் பற்றி முழுமையாகத் தெரிந்துகொள்வதால் மட்டுமே ஒருவர் ஏற்றுமதியாளராகிவிட முடியாது. முயற்சி மிகவும் முக்கியம். தனியாக நாமே களத்தில் இறங்கி, நம்முடைய முதல் ஓர்டரைப் பிடிக்க வேண்டும். பிறருடைய உதவியை நாடுவதில் தவறில்லை. ஆனால், அதையே நம்பி இருக்கக் கூடாது. நம்முடைய பொருள் யாருக்குத் தேவைப்படுகிறது என்பதை பிறரின் மூலம் தெரிந்துகொள்ள முடியும். பிஸ்னஸ் ஓர்டரைப் பொருத்தவரை, பிறரையே நாம் சார்ந்திருந்தால் அது நமக்கு தோல்வியைத்தான் தரும். நம்முடைய சொந்த முயற்சிதான் நம்முடைய வெற்றியைத் தீர்மானிக்கும்.


### உள்ளூரில் ஒரு வெற்றி

ஏற்றுமதித் தொழிலில், தரம் என்பது தவிர்க்க முடியாத ஒரு விஷயம். அதற்காகத்தான் 'ஏற்றுமதித் தரம்' என்றே தனியாகப் பொருள்களின் தரம் பிரிக்கப்படுகின்றன.

அதேபோல், நம்முடைய தரமான பொருளை இறக்குமதியாளரிடம் விற்கத் தெரிய வேண்டும். அதற்காக முதலில் நம்முடைய பொருளை உள்ளூரில் விற்பனை செய்து பார்க்க வேண்டும். அப்போதுதான் அங்கு அது எந்தளவுக்கு வரவேற்பு பெறுகிறது, மக்களைச் சென்றடைய என்னவெல்லாம் செய்ய வேண்டியிருக்கிறது என்பதையும், நாம் விற்க நினைக்கும் பொருளின் ப்ளஸ், மைனஸ் என்ன என்பதையும் நீங்கள் தெரிந்துகொள்ள முடியும்.

உள்ளூரில் செய்யும் விற்பனை மூலம் நீங்கள் அடையும் வெற்றி, உங்களுக்கு ஏற்றுமதி பிஸ்னஸில் கைகொடுக்கும். ஏற்கெனவே உள்ளூரில் பிஸ்னஸ் செய்பவர்களுக்குப் பிரச்னை இல்லை. புதிதாக நேரடியாக ஏற்றுமதி பிஸ்னஸில் இறங்குபவர்கள் இதைக் கட்டாயம் செய்ய வேண்டும்.

தொடரும்...



# கால் விலங்குகள்போடும் கற்பனைக் குதிரைகள்

சாள்ஸ் ஜே போர்மன்

தனது மகனுடன் பெர்த்தா பென்ஸ் பயணம் செய்த வாகனத்தின் இயக்கசக்தி எங்கிருந்து வந்ததென்று வாதாடி சண்டை பிடித்த ஜெர்மனியக் குடியானவர்களுக்கான பதிலும் இன்னொரு ஜெர்மனியருடன் தொடர்புடையதே. அவர்தான் நிக்கொலஸ் ஒட்டோ.

நீராவியால் இயங்கும் இயந்திரங்களுக்கு மாற்றாக இன்னொரு சக்தியை பாவிப்பதில் வெற்றிபெற்ற நிக்கொலாஸ்,வசதியில்லாததால் எந்தப் பொறியியல் கல்வியும் கற்கமுடியாமல் ஊ஌ருகாக சுற்றி தேயிலை, சர்க்கரை மற்றும் சமையலுக்குத் தேவையான பொருட்களை கடைகளுக்கு விற்றுக் கொண்டிருந்தவர்.

ஆனாலும் தனக்குள் பொங்கிக் கொண்டிருந்த கண்டுபிடிப்பு ஆர்வம் அவரை விட்டுப் போகவில்லை. திரவப் பொருளிலான ஒரு எரிபொருளை பாவிப்பதன் மூலம் பல இயந்திரங்களை இயக்குவதில் வெற்றியடையலாம் என்பதில் விடாமுயற்சியுடன் போராடிய நிக்கொலஸ் ஒட்டோ ஒரு எரிபொருள் வளிகலப்பியை அதற்காக உண்டாக்கினார். அதை பாவிப்பதன் மூலம் பெற்றோலியத் திரவத்தை இயந்திரங்களில் பாவிப்பதற்கான வழியை உண்டாக்கினார். அதன் அடுத்தபடியாக 1876 இல் ஒட்டோ தனது புதிய அமைப்பு இயந்திரத்தை உருவாக்கி அமைத்து அதற்கு உரிமையும் பெற்றுக்கொண்டார்.

இயந்திர மயமாக்குதல், நகரங்களை நோக்கி குடிபெயர்தல் ஆகிய இரண்டு மாற்றங்களும் ஐரோப்பாவையும் வட அமெரிக்காவையும் சகல விதங்களிலும் மாற்றிக் கொண்டிருந்த காலம் அது. அமெரிக்காவில் ஏற்பட்ட தனிமனித பொருளாதார வளர்ச்சி தனிமனித சுதந்திரத்தையும் புதிய எல்லைகளை நோக்கித் தள்ளியது. ஒரு புள்ளியிலிருந்து இன்னொரு புள்ளிக்கு வேகமாக எக்கட்டுப்பாடும் இன்றி ஒருவர் தனியாகவே போக முடியும் என்ற சுதந்திரம் மனிதர்களுக்கு மிகவும் பிடித்துக் கொண்டது.

அப்படியான சந்தர்ப்பத்தில் இயந்திர மயமாக்குதலின் பக்க விளைவுகளில் மனிதகுலத்துக்கு பாதிப்பான விடயங்கள் இருக்கும் என்று சிந்தனை நிச்சயமாகயாருக்காவது எழுந்திருக்கலாம், ஆனால், அதை நிச்சயமாகப் பெரும்பான்மையினர் காது கொடுத்து கேட்டிருக்க மாட்டார்கள்.

அன்று அந்த சமூகங்களில் உருவாகியிருந்த நிலைமையை தற்போதைய தென்கிழக்காசிய நாடுகளின் நிலைமையுடன் ஒப்பிட்டு பார்த்து புரிந்து கொள்ளலாம் என்று நம்புகிறேன். 1850 களின் பின்பு மேற்கு ஐரோப்பா, வட அமெரிக்காவில் உண்டாகிய பொருளாதார முன்னேற்றத்துக்கு ஈடாக கடந்த சுமார் கால் நூற்றாண்டுகள்தான் இந்தியா உட்பட இந்த நாடுகளில் வளரும் பொருளாதாரம் என்ற சக்தி இயந்திர மயமாக்குதலும், நகர மயமாக்குதலும் வழி செய்திருக்கிறது.

அதன் விளைவாக ஏற்படும் சமூக மாறுதல்கள், மக்கள் அதிக பயணங்கள், வேகமான பயணங்கள் செய்தலை ஊக்குவித்திருக்கின்றன. விளைநிலங்கள் வேகமாகப் பொருளாதார மையங்களாக்கப்பட்டு கட்டடங்களால் நிறைகின்றன. வீதிகள் பல அமைக்கப்படுகின்றன. கொள்வனவு செய்தல் ஒரு சமூக கௌரவ அடையாளமாக கணிக்கப்படுகிறது.

அன்றைய நிலைமையில் இதே மாற்றங்கள் ஏற்படும்போது இவைகளால் ஏற்படும் பக்க விளைவுகள் நாமெல்லோரும் ஒன்றாக அனுபவிக்கும் சுற்றுப்புற சூழலை எப்படியெல்லாம் மாசுபடுத்தும், அதன் நீண்டகால விளைவுகள் என்னென்னவாக இருக்கும் என்று எவருக்கும் தெரியவில்லை.

இன்றைய உலக சமூகத்துக்கு மேற்கண்ட மாற்றங்களின் விளைவுகள், நீண்டகாலவிளைவுகள் பற்றியெல்லாம் தெரியும். ஆனாலும், அதை காது கொடுத்துக் கேட்டு அதற்கேற்ப தங்கள் வாழ்க்கை முறையில் மாறுதல்களை செய்துகொள்ள தென்கிழக்கு ஆசிய நாட்டு மக்கள் தயாராக இல்லை. பெரும்பாலானோரின் நோக்கு முழுவதும் "புதியதாக என்னென்ன சொகுசுகளை சேர்த்துக் கொள்ளலாம்" என்பதிலேயே இருக்கிறது

வளர்ந்துவரும் பிரதேச மக்களின் மனநிலை எப்படியானது என்று பொதுவாக சுட்டிக்காட்டவே மேற்கண்ட ஒப்பீட்டைக் குறிப்பிட்டேன். அன்றைய ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளின் வாகனங்களை வாங்கும் வேகத்துக்கு இணையாக ஆரம்பித்து வளர்ந்த சக்திதான் பெற்றோலியம்.

பல மில்லியன் வருடங்களாக உலகில் வாழ்ந்த சகலமும் நிலத்துக்குள் புதைந்து, உலகின் சில பிரதேசங்களின் ஆழமான பகுதிக்குள் பல இயற்கை மாற்றங்களை சந்தித்து, தற்போது வைப்புகளாக இருப்பதுதான் கச்சா எண்ணெய்.

நில, நீர் மட்டத்துக்கு பலநூறு மீற்றர்களின் கீழே குழம்பாகவோ, மண், கற்களுடன் சேர்ந்தோ மேலும் சில இடங்களில் மணலுடன் கலந்தோ இருக்கிறது கச்சா எண்ணெய். இவற்றில் ஒவ்வொன்றையும் வெவ்வேறு தொழில்நுட்ப முறையில் கையாண்டு கச்சா எண்ணெய் உறிஞ்சப்படுகிறது. உறிஞ்சப்படும் கச்சா எண்ணெயில் இருந்து பெற்றோல் தயாரிக்கப்படுகிறது. பெற்றோலை தவிர இயற்கை வாயுவும் இதே பிரதேசங்களில் இருந்து எடுக்கப்பட்டு எரிபொருளாகப் பாவிக்கப்படுகிறது.

சுமார் 100 நாடுகள் கச்சா எண்ணெயை உறிஞ்சியெடுத்து பெற்றோலியப் பொருட்களை அதிலிருந்து பிரித்தெடுக்கின்றன. சுமார் 48 விகித உலகப் பெற்றோலியத்தை உலகின் ஐந்து நாடுகள் தயாரிக்கின்றன. ரஷ்யாவும், சவூதி அரேபியாவும் தலைக்கு 13 விகிதத்தையும், அமெரிக்கா 11 விகிதத்தையும் தயாரிக்க ஈராக் 6 விகிதத்தையும் ஈரான் 5 விகிதத்தையும் தயாரிக்கின்றன.

இவைகளை தவிர குவெய்த், அல்ஜீரியா, நைஜீரியா, வெனிசுவேலா, எமிரேட்ஸ், லிபியா, நோர்வே, பிரிட்டன் ஆகியவையும் முக்கியமான கச்சா எண்ணெய் உறிஞ்சும் நாடுகள்.

உலகை ஒரு உயிரினம் என்று கற்பனை செய்து பார்த்தால் கச்சா எண்ணெய் அதனுள் ஓடும் இரத்தம் எனலாம். தினசரி சுமார் 95 மில்லியன் பீப்பாய் கச்சா எண்ணெயை இந்த உயிரினம் பாவிக்கிறது. ஒவ்வொரு பீப்பாய்க்குள்ளும் 159 லிட்டர் எண்ணெய் இருக்கிறது. அல்லது ஒரு செக்கனுக்கு சுமார் 160 கியூபிக் மீற்றர் பாவிக்கப்படும் ஒரு எரிபொருள் எனவும் குறிப்பிடலாம். உலகச் சமுத்திரங்களில் வேறெந்தப் பொருளும் இந்த அளவுக்கு குறுக்கும் நெடுக்குமாக எடுத்துச் செல்லப்படுவதில்லை.

இன்றைய தொழில்நுட்பங்கள், சந்தை விலை, பாவிப்பு போன்றவைகளை ஒன்றிணைத்து பார்த்து 2050 ம் ஆண்டு வரையளவில் நாங்கள்தொடர்ந்தும்உறிஞ்சுவதற்கு கச்சா எண்ணெயோ, இயற்கை எரிவாயுவோ இல்லாமல் முடிந்துவிடும் என்று கணிக்கப்படுகிறது.

அது ஒரு பக்கமிருக்க பெற்றோலியப் பொருட்களின் பாவிப்பு நாங்கள் வாழும் கிரகமான பூமியையும் அதன் சுற்றுச்சூழலையும் மிகக் குறுகிய காலத்தில் தாக்கி காயப்படுத்தியிருக்கின்றன. நான் குறிப்பிடும் காயங்கள் பெற்றோலியம் என்ற எரிபொருளை ப்பாவிப்பதால் மட்டுமன்றி, அப் பாவிப்பு ஆரம்பித்து முதல் மனிதர்களின் வாழ்க்கையில் ஏற்பட்ட சகல மாற்றங்களும் ஏற்படுத்திய

**பல மில்லியன் வருடங்களாக உலகில் வாழ்ந்த சகலமும் நிலத்துக்குள் புதைந்து, உலகின் சில பிரதேசங்களின் ஆழமான பகுதிக்குள் பல இயற்கை மாற்றங்களை சந்தித்து, தற்போது வைப்புகளாக இருப்பதுதான் கச்சா எண்ணெய்.**

சகலவற்றையும் உள்ளடக்கியவையே. இக் காயங்களை ஏற்படுத்த காரணமாக இருந்தது மனிதகுலமே என்பதால் அவைகளை மனிதனால் பூமிக்கும், அதன் சுற்றுப்புற சூழலுக்கும் ஏற்படுத்தப்பட்ட பாதிப்புக்கள் என்றே குறிப்பிட வேண்டும்.

மேற்கண்ட இயற்கையின் எரிபொருளைப் பாவித்து 1800 களின் நடுப் பகுதியில் ஆரம்பித்த இயந்திர மயப் படுத்துதலின் விளைவுகள் உடனடியாக எவருக்கும் புரியவில்லை. 19ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில், குறிப்பாக இரண்டாம் உலகப்போரின் பின்புதான் கவனித்துக்கு எடுக்கப்பட ஆரம்பித்தது.

இயந்திர மயமாக்கலும், நகர மயமாக்கலும் பெரும்பாலும் நடந்தேறிய ஐரோப்பிய, வட அமெரிக்க பிராந்தியங்களில் ஆங்காங்கே தென்பட்ட இயற்கை அழிவுகள் பல விஞ்ஞானிகளின் கவனத்தை ஈர்த்

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

9-ம் பக்க தொடர்ச்சி...

புலிகள் கடுமையான நெருக்கடியை சந்தித்தார்கள். களத்தில் இருந்த தளபதிகளால் இராணுவத்தின் நகர்வை தடுக்க முடியவில்லை. ஆளணி பற்றாக்குறை, ஆயுதப்பற்றாக்குறை என அவர்களும் நிறைய பிரச்சனைகளை சந்தித்துக் கொண்டிருந்தனர்.

இராணுவத்தை கட்டுப்படுத்த வேண்டுமென பிரபாகரன் நினைத்தார். கிளிநொச்சி வீழ்ச்சியடைந்த பின்னர், பிரபாகரன் முக்கிய சந்திப்பொன்றை நடத்தியதை பற்றி ஏற்கனவே குறிப்பிட்டிருந்தோம். அதை தவற விட்டவர்களிற்காக மீண்டுமொரு முறை குறிப்பிடுகிறோம்.



முரசுமோட்டை பகுதியில் இந்த சந்திப்பு நடந்தது. கிளிநொச்சியை இராணுவம் கைப்பற்றிவிட்டது. கிளிநொச்சியிலிருந்து பின்வாங்கிய புலிகளின் அணிகள் மற்றும் நிர்வாக அணிகளிலிருந்து திரட்டப்பட்டு தாக்குதலணிக்கு உள்வாங்கப்பட்டிருந்த வர்களையெல்லாம் ஒன்று திரட்டி நடந்த கூட்டம் அது. புலிகளின் முக்கிய தளபதிகள் தாக்குதல் அனைவருமே அதில் கலந்து கொண்டார்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.

இராணுவத்தின் முன்னேற்றத்தை எப்படியாவது தடுத்து நிறுத்த வேண்டும் என பிரபாகரன் கூட்டத்தில் சொன்னார். ஆயுத வரத்தும் இல்லை, இராணுவத்தை தடுக்கவும் முடியாத நிலையில் பிரபாகரன் கொஞ்சம் கடுமையான தொனியிலேயே தளபதிகளுடன் பேசினார். அனைத்து தளபதிகளும் முன்னரணில் போராளிகளுடன் நிற்க வேண்டுமென்றும் கூறினார்.

கிளிநொச்சியை இராணுவம் கைப்பற்றி, பரந்தன் புதுக்குடியிருப்பு வீதியால் நகர்ந்து தருமபுரத்தை அடைந்தது. இதன்பின் புலிகள் முன்னரங்க கட்டளைபீடத்தில் பல மாற்றங்களை செய்தனர். சுண்டிக்குளத்தின் பின்பக்கமாக தொடங்கும் கடற்கரையில் ஆரம்பித்து, விசுவமடு, அதற்கப்பாலிருந்த காட்டுப்பகுதி (அம்பகாமத்திற்கு அண்மையான பிரதேசம்) என நீண்ட புலிகளின் முன்னரண் புதுக்குடியிருப்பிற்கு வந்து, அப்படியே வட்டுவாகல் வரை சென்றது. ஒருகாலத்தில் மணலாற்றின் தொடங்கி வன்னியை குறுக்கு வெட்டாக ஊடறுத்து மன்னார் வரை நீண்டிருந்தது புலிகளின் முன்னரண். இப்பொழுது மிக குறுகியிருந்தது.

**விடுதலைப்புலிகளின் எல்லாவித உத்திகளையும் உடைத்துக் கொண்டு முன்னேறும் இராணுவத்தை சமாளிக்க கடாபி சில உத்திகளை பாவிக்க முயன்றார். அதில் முக்கியமானது, வழக்கமான நேர்கோட்டு முன்னரண் பாணியை தவிர்த்து, "தையல் பாணி" முன்னரண்களை அமைத்தார்.**

விசுவமடுவிற்கு அப்பாலிருந்த அம்பகாம முனைக்கு கடாபி, நடேசன் இருவரும் கூட்டு பொறுப்பாளர்களாக நியமிக்கப்பட்டிருந்தனர்.

விடுதலைப்புலிகளின் எல்லாவித உத்திகளையும் உடைத்துக் கொண்டு முன்னேறும் இராணுவத்தை சமாளிக்க கடாபி சில உத்திகளை பாவிக்க முயன்றார். அதில் முக்கியமானது, வழக்கமான நேர்கோட்டு முன்னரண் பாணியை தவிர்த்து, "தையல் பாணி" முன்னரண்களை அமைத்தார்.

அதாவது முன்னரண்கள் நேர்கோட்டில் இல்லாமல், இரண்டு நேர்கோட்டில் அமைக்கப்பட்டிருக்கும். முதல் கோட்டில் உள்ள இரண்டு காவலரண்களிற்கு இடையில் இரண்டாவது வரிசையில் ஒரு காவலரண் வரும். (பின்னாளில் புலிகளிற்கு இராணுவம் போட்ட கடைசி Log இல் இராணுவமும் இதே பாணியை பின்பற்றியதுதான் முரண்நகையான விசயம். இது அமெரிக்க இராணுவம் ஈராக்கில் கையாண்ட உத்தி.

கடாபிக்கு களமுனையில் குறுகிய கால அவகாசமே கிடைத்தது. இரண்டாவது, நாலாபுறமும் இராணுவம் சூழ்ந்த நிலையில் அம்பகாமத்தில் மட்டும் அதிசயங்களை நிகழ்த்த முடியவில்லை. பரந்தன் புதுக்குடியிருப்பு வீதிக்கு வடக்கு பக்கமாக, பிரமந்தனாறு மற்றும் தேவிபுரத்திற்கு அப்பாலிருந்த பகுதிகளை நோக்கி 58, 55ம் டிவிசன்கள் முன்னேறிக் கொண்டிருந்தன. இதனால் பரந்தன் புதுக்குடியிருப்பு வீதியை விட்டு பின்வாங்கிக் கொண்டிருக்க வேண்டிய நிலைமை புலிகளிற்கு ஏற்பட்டது.

அந்த வீதியை விட்டு பின்வாங்கினால், வீதிக்கு தெற்கு பக்கமிருந்த காட்டையும் விட்டு பின்வாங்கியே தீர வேண்டும். கடாபியின் அணியும் பின்வாங்கியது. பின்னர் புதுக்குடியிருப்பு களமுனையில் புலிகளின் முழு தளபதிகளும் அடங்கினார்கள். பரந்தன் புதுக்குடியிருப்பு சாலைக்கு வடக்கு பக்கமாக கடாபி தனது அணியுடன் களத்தில் நின்றார்.

புதுக்குடியிருப்பு இராணுவத்திடம் வீழ்ச்சியடைந்த பின்னர், இன்னும் களமுனை சுருங்கியது. அதனால் குறிப்பாக எந்த இடத்திலும் அவர் கட்டளை தளபதியாக இருக்கவில்லை. ஆனால் இம்ரான் பாண்டியன் படையணியினரை வழிநடத்தினார். கட்டளை பீடங்களிலேயே தங்கியிருந்தார்.

ஆனந்தபுரம் BOX வரை இதுதான் நிலைமை. ஆனந்தபுரம்தான் கடாபியின் இறுதி களம். அங்கு என்ன நடந்ததென்பதை அடுத்தவாரம் குறிப்பிடுகிறோம். (தொடரும்)



"ராத்திரி ரொம்ப நேரம் உங்க வீட்டு காலிங் பெல்லை அடிச்சுக்கிட்டிருந்தேன்... சத்தமே கேட்கலையா?"

"தூங்கறப்போ காலிங் பெல்லையும் சைலன்ட் மோடுல வெச்சிடுவோம்."



"அந்தப் பெரிய சிறைச்சாலை அதிகாரி, தலைவரை மரியாதை நிமித்தமா சந்திச்சதுக்கு ஏன் தலைவர் டென்ஷன் ஆயிட்டார்?"

"போறப்போ 'எங்கள் சிறைச்சாலைக் கதவு, உங்களுக்காக எப்பவும் திறந்திருக்கும்'னு சொல்லிட்டாராம்!"



"போருக்குச் செல்லும் மன்னர் என்ன சொல்கிறார்?"

"இது கோடைக்காலமானதால் மன்னர் புறமுதுகிட்டு ஓடி வரும் பாதையில் தண்ணீர்ப் பந்தல்கள் வைக்க வேண்டுமாம்!"

தாலும், உலகின் காலநிலையில் பொதுவாக ஏற்படத் தொடங்கிய மாறுதல்களே பெற்றோலியச் சக்திகளின் பாவிப்பின் தாக்குதல்களைப் பற்றிய கேள்விகளை சர்வதேச அளவில் எழுப்பக் காரணமாயின.

மனித நடவடிக்கைகளால் ஏற்படும் விளைவுகளினால் ஏற்பட்ட காலநிலை மாற்றங்களுக்கு காரணகர்த்தாவாக கரியமில வாயுவை சுட்டிக்காட்டலாம். இரண்டாவது இடத்தை மீத்தேன் வாயு பெறுகிறது. எங்கள் வளிமண்டலத்தில் இருக்கும் வாயுக்களின் கலவைகளின் விகிதம் இயற்கையானது. அவை இயற்கையின் செயற்பாட்டு சுழலில் இணைந்திருக்கின்றன.

ஆனால் மிகக் குறுகிய காலவரையறைக்குள் மேற்குறிப்பிட்ட நடவடிக்கைகளால் வளிமண்டலத்தில் பரவும் கரியமில வாயு, மீத்தேன் வாயு போன்றவை அச் சுழற்சியின் செயற்பாட்டில் கலந்துகொள்ள முடியாமல் மேலதிகமாக இருக்கின்றன. அதனால் ஏற்படுவதுதான் கிரீன் ஹவுஸ் விளைவுகள் என்றழைக்கப்படும் நிலைமை.

புவியின் வளிமண்டலத்தினுள் இருக்கும் ஒவ்வொரு வாயுவும் எங்கள் வாழ்வுக்கு உகந்தபடி, பூமியின் இயற்கை நிலைமையை பேணுவதில் தன் பங்கை அளிக்கின்றன. அவ் வாயுக்களின் விகிதாசார நிலைமை மாறும்போது வளிமண்டலத்தை அது வெவ்வேறு விதமாக பாதிக்கின்றது.

கரியமில வாயு, மீத்தேன் வாயு போன்றவை வளிமண்டலத்தில் தங்கள் பங்கை அதிகமாக்கிக் கொள்வதால் அவை பூமியை சுற்றி ஒரு எல்லை வளையத்தை உண்டாக்கி கொள்கின்றன. அந்த எல்லைக்கு உள்ளே சூரிய வெளிச்சம் வழக்கம்போல ஊடுருவ முடிவதில்லை.

அதேபோலவே பூமியின் தரை, நீர் மற்றும் காற்று மண்டலத்தில் உண்டாகும் வெம்மை அந்த எல்லைக்குள்ளேயே தங்கிவிடுகிறது. அதனால் பூமியின் காற்று எல்லைக்குள் சூடு அதிகமாகிறது, பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக தேங்கியிருக்கும் பனிமலை பிராந்தியங்களிலும் பனி கரையத் தொடங்குகிறது. அதாவது கதவடைக்கப்பட்டிருக்கும் ஒரு கண்ணாடி அறைக்குள் ஏற்படும் மூச்சு முட்டக்கூடிய சூடான காலநிலையை பூமியின் வெம்மையான பிரதேசங்கள் அனுபவிக்கின்றன. அதே சமயம் துருவங்களில் இருக்கும் பிராந்தியங்களிலும் குளிர்காலம் குறைவடைந்து, வெம்மைக் காலம் அதிகரிக்கிறது. (தொடரும்)




▶ யா /ஏழாலை மகாவித்தியாயலய வரலாற்றில் முதல் தடவையாக 9A சித்தி பெற்று பாடசாலைக்கு பெருமை சேர்த்து தந்த S.நிறோஜினியையும், அவருடன் சிறந்த பெறுபேற்றை பெற்ற ஏனைய மாணவர்களையும் வாழ்த்துகின்றோம். - பழைய மாணவர்கள்.

# பீஜிங்குக்கு வந்த பச்சை ரயில்

திங்களன்று, பங்குனி 26 ம் திகதியன்று பீஜிங் நகர மக்கள் தங்கள் நகரின் பல இடங்களில் ஏற்படுத்தப்பட்ட போக்குவரத்து தடைகளையும், பாதுகாப்பு ஏற்பாடுகளையும் கவனித்து ஆச்சரியப்பட்டார்கள். சீனாவின் கம்யூனிசக்கட்சியின் அரசியல்வாதிகளின் பயணங்கள் பெரும்பாலும் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படாமல் பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் நடந்தாலும் குறிப்பிட்ட நாளில் நகருக்குள் ஆங்காங்கே காணப்பட்ட நிலைமை வித்தியாசமாக இருந்தது.

அதை தொடர்ந்து சீனாவில் பாவிக்கப்படாத மஞ்சள் குழாயொன்றை வரியாகக் கொண்ட கடும் பச்சை நிற ரயிலொன்று பீஜிங் நகருக்குள் அதி பாதுகாப்புடன் நுழைந்தது பலரின் கவனத்தை கவர்ந்தது. சமூக வலைத்தளங்களின் காலத்தில் இதை விடுவார்களா மக்கள்?



## உலக யன்னல்

தொகுப்பு: தேசமித்திரன்

வேகமாக சீனாவின் சமூக வலைத்தளங்களில் பரவிய அந்த ரயிலின் படங்கள் ஜப்பானியர்களின் கவனத்தையும் ஈர்த்து, அங்கிருந்து சர்வ தேசத்திலும் பிரபலமானது. நிச்சயமாக அது அரசியல்வாதியொருவர் பாவிப்பதுதான், ஆனால், யாரவர்? என்று யோசித்தவர்கள் பெரும்பாலும் பதிலையும் கண்டுபிடித்து விட்டார்கள்.

அப் பதில் சரியே என்று அடுத்த நாள் பிற்பகல் அந்த ரயில் திரும்பிப் போனபின்பு சீன அரசின் ஊடகங்களால் வெளியிடப்பட்ட செய்திகள் நிரூபணம் செய்தன. தனது தந்தைக்குப் பின்பு 2011 இன் கடைசிப்பகுதியில் வடகொரியாவின் தலைமைப் பதவியை எடுத்துக் கொண்ட கிம்யொங்உன் தான் சீனாவுக்கு வந்த அந்தச்சீமான்.

தனது பதவியேற்பின் பின்பு முதல் தடவையாக வெளிநாட்டு விஜயம் செய்த கிம்யொங்உன் தனது நாட்டுக்குள் எப்படி பிரயாணம் செய்கிறார் என்ற விபரங்கள் வெளியிடப்படுவதில்லை. ஆனால் குறிப்பிட்ட ரயில், அல்லது அதேபோன்ற நிறமுள்ள ரயிலில்தான் அவரது தந்தை கிம்யொங் இல் பயணம் செய்வதுண்டு என்பது பிரபலமானது.

உல்லாசப் பிரியரான கிம்யொங் இல் விமானப் பயணத்துக்கு பயந்தவர். தனது உல்லாச வசதிகள் உள்ள ரயிலில் தனக்கு நெருக்கமானவர்களுடன் குடி, உல்லாசப் பெண்களுடன் சீனா, ரஷ்யா உட்பட கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கும் பயணம் செய்திருக்கிறார்.

ஜப்பானின் பிடியிலிருந்த வடகொரிய பகுதியில் ஒரு புனித மலையில் இரட்டை வானவில்களுக்கு நடுவே ரோஜாப் பூக்களின் வரவேற்புடன் கிம் யொங் இல் பிறந்ததாக கூறப்பட்டாலும் அவர் உண்மையிலேயே பிறந்த இடம் வியாட்ஸ் கோயெ என்ற ரஷ்யாவுக்குச் சேர்ந்த நகரம்தான் என்று குறிப்பிடப்படுகிறது. யூரிஇர்ஸனோவிட்ச் கிம் என்ற பெயருடன் கிம் உல் சுங் என்ற சிகப்பு இராணுவ உயரதிகாரி ஒருவருக்கு மகனாகப் பிறந்தார். ஸ்டாலினுக்கு நெருக்கமான இந்த அதிகாரியைத்தான்.பின்பு ஸ்டாலின் வடகொரியாவின் தலைவராக்கினார்.

பொருளாதார ரீதியில் முழுக்க முழுக்க சீனாவில் தங்கியிருக்கும் நாடான வடகொரியாவின் தலைவராக இருந்த கிம் யொங்இல் அரசியலிலும் சீனாவின் சொல்லைக் கேட்டு நடக்கும் நல்ல பிள்ளைதான். தனது 17 வருட ஆட்சிக்காலத்தில் சீனாவுக்கு அடிக்கடி பயணம் செய்து அவர்களுடன் நல்லுறவு கொண்டிருந்தது போல மகன் கிம் யொங்உன் செய்யவில்லை.

கிம் யொங்உன் பதவியேற்றது முதல் வடகொரியா தன்னை உலகின் சகல நாடுகளுக்கும் அன்னியப்படுத்தி கொண்டது என்றே கருதப்படுகிறது. அதன் விளைவால்தான் அமெரிக்கா உட்பட்ட சகல நாடுகளும் வடகொரியாவை தண்டிப்பதை சீனாவும் ஏற்றுக்கொண்டு கிம் யொங்உன் உடன் ஒரு காட்டமாக நிலைப்பாட்டை எடுத்துக் கொண்டது.

ரஷ்யாவுக்கு இன்னும் 11 பில்லியன் டொலர்கள் பெறுமதியான கடனை திருப்பிக் கொடுக்க முடியாத நாடாக இருக்கிறது வடகொரியா. நாட்டுக்கு தேவையான உணவுப்பொருட்கள், எரிபொருள் ஆகியவையை பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் இருக்கும் வடகொரியா சில வாரங்களுக்கு முதல்தான் அணு ஆயுதப் பரீட்சைகளை நிறுத்த தயார் என்றும் டொனால் ட்டிரம்பை சந்திக்க தயாரென்றும் அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

சீன அதிபர் ஷீசின் பிங்கை சந்தித்து பேச்சுவார்த்தைகள் நடாத்திய கிம் யொங் உன் அங்கேயும் “கொரியப் பிராந்தியத்தில் வளர்ந்துவரும் சமாதான நிலையை விரும்புகிறேன். அமெரிக்காவும், தென்கொரியாவும் ஒத்துழைத்தால் நாங்கள் எங்கள் அணு ஆயுத ஆராய்ச்சிகளை நிறுத்தத் தயார்,” என்று அறிக்கை விட்டிருக்கிறார்.

இந்த பச்சை ரயில் பயணத்தின் மூலமாக கிம் யொங்உன் தான்டொனால் ட்டிரம்ப்புடன் நேரடியாக சந்திக்கத் தயாரென்று பச்சைக் கொடி காட்டியிருக்கிறார் எனலாமா?


## லண்டன் கட்டிடத்தின் மேலே நிற்கும் அந்த 84 பேர்கள் யார்?

லண்டனில் ஐ.டி.வி கட்டடத்தின் கூரையில் பலர் நிற்பதைக்கண்டு அவ்வழியே சென்ற பலர் திடுக்கிட்டார்கள். பலர் அவசர உதவி இலக்கத்துடன் தொடர்பும் கொண்டார்கள்.

விரைவில் அதன் காரணம் ஊடகங்களில் பரவியது. விபரங்கள் தெரிந்தவுடன் அக்காரணம் பற்றியும் அதை ஐ.டி.வி நிறுவனம் கவனப்படுத்தியது பற்றியும் ஆதரவாகவும், எதிர்ப்பாகவும் விமர்சனங்கள் உண்டாகின.

#project84 என்ற பெயரில் சமூக வலைத்தளங்களில் கவனத்துக்கு உள்ளாக்கப்பட்டு அதே பெயரில் ஐ.டி.வி நிறுவனத்தினரால் சுட்டிக்காட்டப்பட்ட விடயம் வாராவாரம் 84 பிரிட்டிஷ் ஆண்கள் தற்கொலை செய்துகொள்கிறார்கள் என்பதாகும். மேலும் சொல்லப் போனால் பிரிட்டனில் தற்கொலை செய்து கொள்பவர்களில் நான்கில் மூன்று பேர் ஆண்கள். 45 வயதுக்குட்பட்ட ஆண்கள் பிரிட்டனில் இறப்பதுக்கு காரணம் தற்கொலைகளே.

அக் கட்டடத்தின் முகட்டில் நிஜமாக தற்கொலை செய்து கொண்ட 84 பேர்களை மார்க் ஜென்கின்ஸ் என்ற சிற்பியின் மூலமாக தத்ரூபமாக சிலைகளாக்கி நிறுத்தியிருந்தார்கள். அச்சிலைகளின் மிக தத்ரூபமான அமைப்பு அவர்கள் அக்கட்டிடத்திலிருந்து குதிக்கக்கூடும் என்றபயத்தைபலருக்குஉண்டாக்கியது. அத்துடன் நிஜமான மனிதர்களை அப்படியான சிலைகளாக்கி பொது இடத்தில் வைத்திருந்ததும் பலரால் விமர்சிக்கப்பட்டது. அதற்காக இறந்தவர்களின் நெருங்கிய உறவினரின் அனுமதி பெறப்பட்டதாக ஐ.டி.வி நிர்வாகம் தெரிவித்தது.






# ஒரேஒரு சட்டம் துப்பாக்கிகளை மௌனமாக்கியது

ஒவ்வொரு தடவையும் யாராவது ஒருவர் அமெரிக்காவில் துப்பாக்கியை எடுத்துப் பலரை சுட்டுக் கொல்லும்போதும் எழுப்பப்படும் சர்ச்சை "அமெரிக்காவில் துப்பாக்கிகளை வாங்க, வைத்திருக்க,பாவிக்க இருக்கும் மிக இலகுவான சட்டங்களை இறுக்க வேண்டுமா?" என்பதாகும்.ஐக்கிய அமெரிக்காவின் துப்பாக்கிக் கலாச்சாரத்தை ஆதரிக்கும் மிகப்பலமான இயக்கம் எந்தக்கட்சி நாட்டின் ஆட்சிக்கட்டிலில் இருந்தாலும் தனது குறிக்கோளான மிக இலகுவான சட்டங்களை காப்பாற்றியே வருகிறது.

தனிமனிதனின் உரிமைகளில் ஒன்று துப்பாக்கி வைத்திருப்பவைகளில் ஒன்றாகும் என்று நம்பும் அமெரிக்கர்களுக்கு அது ஒரு முக்கிய பாரம்பரிய வழமை. "சட்டங்களை கடுமையாக்கினாலும் மிலேச்சத்தனமாகக் கொல்லப் போகிறவர்களை தடுக்க முடியாது," என்று அவர்கள் வாதாடுகிறார்கள்.

வித்தியாசமாக இம்முறை அமெரிக்க சரித்திரத்திலேயே மிகப்பெரிய மாணவர்கள் போராட்டம் வெடித்திருக்கிறது "March for Our Lives" என்ற பெயருடன். சில வாரங்களுக்கு முன்பு பார்க்லாண்ட் கல்லூரியில் நடந்த துப்பாக்கிக் கொலைகளின் பின்பு "இனியும் பொறுக்கத் தயாராக இல்லை, துப்பாக்கிக் கலாச்சாரத்துக்கு அமெரிக்காவில் முடிவு வையுங்கள்," என்று அரசியல்வாதிகள்நோக்கிஉரத்த குரலுடன் ஆரம்பித்த மாணவர்கள் படிப்படியாக நாடு முழுவதும் உள்ள மாணவர்களை ஒன்று திரட்டி இன்று அமெரிக்கா முழுவதும் தங்கள் பலத்தை காட்டுகிறார்கள். "எங்கள் நோக்கம் இவ்வருட இறுதியில் வரவிருக்கும் தேர்தல்களை நோக்கியிருக்கும், அச்சமயத்தில் அரசியல்வாதிகள் எங்கள் குரல்களை கேட்டே ஆக வேண்டும்" என்று திடமாகச் சொல்கிறார்கள் மாணவர் பிரதிநிதிகள்.

அவர்களுக்கு வெற்றி கிடைக்கிறதோ என்னவோ அமெரிக்காவின் இன்றைய ஆயுதத் தாராள மனப்பான்மை போன்ற பாரம்பரியத்தைக் கொண்டிருந்த இன்னொரு உலகநாடு, ஆயுதம் வாங்குவதற்காக இருக்கும் சட்டங்களை கடுமைப்படுத்தியதால் இதுவரை ஒரேயொரு தனி மனிதர் பலரைச் சுட்டுத்தள்ளுதல் இல்லாமல் காலந்தள்ளி வருகிறது.

அதுதான் அவுஸ்ரேலியா. 1996 நடந்த போர்ட் ஆர்தர் படுகொலைகளில் வெவ்வேறு வயதான 35 பேர் ஒரு இளைஞனால் கொல்லப்பட்டார்கள். அன்று அவுஸ்ரேலிய பிரதமராக இருந்தவர் ஜோன் ஹவார்ட்.

நடந்த கொலைகளுக்கு முக்கிய காரணங்களில் ஒன்று எவராலும் மிக இலகுவாக துப்பாக்கி போன்ற ஆயுதங்களை கொள்வனவு செய்ய முடிவதே என்று பல அவுஸ்ரேலியர்களும் கருதினர். 12 நாட்களில் ஜோன் ஹவார்ட் புதிய கடுமையான ஆயுதப் பாவனைச் சட்டங்களை பாராளுமன்றத்தில் கொண்டு வந்து நிறைவேற்றினார். அந்தச் சட்டம் கொண்டு வரப்பட்டதிலிருந்து ஒரே வருடத்தில் நாட்டின் துப்பாக்கி சம்பந்தப்பட்ட குற்றங்கள் 60 விகிதத்தால் குறைந்தன.

அன்று முதல் இன்று வரை 22 வருடங்களாக அவுஸ்ரேலியாவில் பைத்தியக்காரத்தனமாக பலரைக் கொன்றொழிக்கும் கூட்டுக்கொலைகள் எதுவும் நடக்கவும் இல்லை.



"கட்சி மாநாட்டுக்கு அணி அணியாய்த் திரண்டு வருமாறு கேட்டுக் கொள்கிறேன்!"

"தலைவரே! அது 'அலை அலையாய்'.."

"நான் அழைத்தது, நம்ம கட்சிக்குள்ளே இருக்கும் அணிகளை!"



"கூட்டம் வரலைன்னு தெரிஞ்சதும் தலைவர் என்ன செஞ்சார்?"

" 'வேங்கை மகன் ஒத்தையில நிக்கேன்'னு பஞ்ச் பேசுறார்"

# எதிர்காலச் சாரதிச் செயலி செய்த முதலாவது மரண விபத்து.

பலரும் பயந்து கொண்டிருந்தது நடந்து விட்டது அமெரிக்காவில், அரிசோனா மாகாணத்தில். உலகின் வெவ்வேறு பாகங்களிலும் பரிசோதனையாக நடந்துவரும் தானே இயங்கும் காரொன்று ஒரு இரவு பாதசாரிகள் வழிச்சந்தியொன்றில் தனது துவிச்சக்கர வண்டியை உருட்டியபடி நடந்து கொண்டிருந்த 49 வயதுப் பெண்ணை மோதியது.

ஊ்பர் நிறுவனத்தின் வாகனமொன்றில் ஒரு சாரதி ஆசனத்தில் அமர்ந்திருந்தாலும், அந்த வொல்வோ வாகனம் "தானே இயங்கும் செயலி" மூலம் இயங்கிக் கொண்டிருந்தது.



உடனடியாக ஊபர் நிறுவனம் தனது தானே இயங்கும் செயலியால் இயங்கும் கார்களைப் பரீட்சார்த்தமாக இயக்குவதை நிறுத்தி விட்டது. அமெரிக்க வாகனப் போக்குவரத்து ஆராய்வு அதிகாரம் நடந்த ஆபத்தைப் பற்றிய விபரங்களை அறிந்துகொண்டு ஆராய்வதில் இறங்கியிருக்கிறது. அமெரிக்காவில் மட்டுமன்றி உலகின் பல பாகங்களிலும் இப்படியான தானியங்கும் தனியார் வாகனச் செயலிகளை போக்குவரத்தில் இயக்குவது பற்றிய தொழில்நுட்ப பரீட்சை வெவ்வேறு தடங்களில், மட்டங்களில் நடந்து வருகிறது. இத் தொழில்நுட்பத்தில் எங்கெங்கே என்னென்ன நடக்குறது, எவ்வளவு வெற்றி பெற்றிருக்கிறது என்பது பற்றிய சகல விபரங்கள் இன்று எவரிடமும் இல்லை.

பல ஐரோப்பிய நாடுகள், சீனா, கனடா போன்றவைகளையும் இங்கே குறிப்பிடலாம். யார் முதலில் இப்பரீட்சையில் வெற்றி பெறுவது என்ற போட்டியும் இவர்களுக்கிடையே இருப்பதை ஊகிக்கலாம். முதலில் வெற்றிகரமாக இயக்குபவர்கள் பெரும் இலாபமும், பிரபலமும் பெறுவார்கள் என்பதே அதன் காரணம் என்பதை சொல்லத் தேவையில்லை.

அமெரிக்காவில் குறிப்பிட்ட ஒரு நிறுவனம் நாட்டின் போக்குவரத்து அதிகாரத்திடம் தமது தொழில்நுட்பத்தை விபரித்து அதன் ஆய்வுகூடப் பரீட்சை வெற்றிகளை காட்டி அச் செயலியை நிஜமான போக்குவரத்தில் பரிசீலிக்க அனுமதி பெறலாம். ஐரோப்பிய நாடுகளில் போக்குவரத்து அமைச்சு, பரீட்சிக்கும் நிறுவனத்துடன் சேர்ந்துதான் பரீட்சைக்கு அனுமதி கொடுக்கும். இதனால்தான் நடைபெற்ற முதலாவது மரண விபத்து அமெரிக்காவில் நடந்தது என்லாம்.

மனிதர்கள் வாகனங்களைச் செலுத்தும் இச்சமயத்தில் வருடா வருடம் 1 மில்லியன் மனிதர்கள் உலகம் முழுவதும் போக்குவரத்து விபத்துக்களில் இறக்கிறார்கள். 20 50 மில்லியன் பேர் காயப்படுகிறார்கள்.

ஒரு தொழில்நுட்பத்தை சாரதியாக அமர்த்திவிடும் காலம் வரும் போது இப்படியான விபத்துக்கள் மிகவும் குறைந்துவிடும் என்றே சகல ஆராய்ச்சியாளர்களும் சொல்கிறார்கள். அது ஒரு பக்கம்இருக்க அப்படியான் தொழில்நுட்பம் பாவிப்புக்கு வரும்போது நாம் என்ன எதிர்பார்க்கிறோம்?

# உள்ளூராட்சி தேர்தல் கட்சி ஆதரவாளர்களின் மீம்ஸ் மோதல்!

உள்ளூராட்சி தேர்தல், பின்னர் சபைகளில் கட்சிகள் ஆட்சியமைத்தது தொடர்பாக சமூக வலைத்தளங்களில் கட்சி ஆதரவாளர்களின் மோதல் இன்னும் முடிந்தபாடாக இல்லை. இப்போதைக்கு முடியும் சாத்தியமும் தெரியவில்லை.

கட்சி ஆதரவாளர்களிற்கிடையில் சமூக வலைத்தளங்களில் நடக்கும் மோதலில், இப்போதைய அணுஆயுதம் மீம்ஸ்தான். இணையத்தில் மற்ற கட்சிக்காரர்களை கலாய்த்து போடப்பட்ட சில மீம்ஸை இணைத்துள்ளோம்.

www.facebook.com/gengatharanmayuran




Jey Mayu
27 March at 21:16

நக்கல் அடிக்குறவங்க அடிக்கட்டும் தங்கமே , மாகாணசபை தேர்தல் வரைக்குமாவது என்னை உன் கூடவே வைச்சிருடி . மாமனுக்கு இப்ப கட்டம் சரியில்லை தங்கமே.

#மன்றாடவில்லை நியாயத்தை எடுத்துரைத்தோம்




www.facebook.com/Uthaya Shanker




facebook.com/yogakumark>

பருத்திதுறை கள நிலவரம்



www.facebook.com/jayakumar.lowrence




www.facebook.com/senthurs1

முன்னணியைத் தவிர்த்து எல்லாருமே துரோகிகள்




---

13-ம் பக்க தொடர்ச்சி...

என்ற பயனாளி ரூ. 50,000/= கோரி விண்ணப்பித்திருந்தார். அவரது பெயரில் அவ் விண்ணப்பத்திற்குரிய பணத்தை 18.09.2013 திகதி வெளிக்கள உத்தியோகத்தர் வே.பத்மசிறி கடனாளிக்கு தெரியாமல் பெற்றுள்ளார். இதற்கு வங்கி முகாமையாளர் உடந்தையாக செயற்பட்டுள்ளார்.

இவை மோசடி நடவடிக்கையின் சில உதாரணங்கள். சந்திவெளி சமுர்த்தி வங்கி மக்களிற்கான வங்கியாக இயங்கவில்லை. எந்த பொறுப்புணர்வுமில்லாமல் அங்கிருந்த உத்தியோகத்தர்கள் மோசடியில் ஈடுபட்டுள்ளனர். சமுர்த்தி வங்கி நடைமுறைகள் எதையும் அவர்கள் பின்பற்றவில்லை.

கடன் ஒப்பந்தங்கள் வங்கியில் வைத்து முகாமையாளர், அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் முன்னிலையில் பயனாளிகள் ஒப்பந்தம் செய்துகொள்ளப்படவில்லை. கடன் ஒப்பந்தப் படிவங்கள் வெளிக்கள உத்தயோகத்தர்கள், சமுர்த்தி சங்க தலைவர்கள் வீடுகளிற்கு எடுத்து சென்று பயனாளிகளிடம் கையொப்பம் பெற்றுள்ளனர். பயனாளிகளிற்கு பதிலாக வேறு நபர்களும் கையொப்பம் இட்டுள்ளனர்.

வாழ்வாதார திட்டத்தின் கீழ் பயனாளிகளிற்கு வழங்கப்பட்டதாக பதிவுசெய்யப்பட்டுள்ள பொருட்கள், கால்நடைகள் பயனாளிகளிற்கு வழங்கப்படவில்லை. இதற்கு ஒரு உதாரணம் 2011 ஆம் ஆண்டு, வாழ்வாதார திட்டத்தில் வடமுனை பிரிவை சேர்ந்த க.சிவராசா என்பவரிற்கு 20,000 ரூபா பெறுமதியான ஆடுகள் வழங்கப்பட்டதாக வங்கியில் பதிவேடுகள் கூறுகின்றன. ஆனால் பயனாளியின் வாக்குமூலப்படி, அப்படியான உதவிகள் எதுவும் வழங்கப்படவில்லை. அதேபோன்ற ஊத்துசேனை பிரிவின் க.இளையதம்பி என்பவருக்கும் , ஆடுகள் வழங்கப்பட்டதாக பதிவேடுகள் கூறுகின்றன. எனினும், அப்படியான உதவிகள் கிடைக்கவில்லையென பயனாளி உறுதிசெய்துள்ளார். இரண்டு மோசடிகளிலும் ஜெ.சுரேஸ் தொடர்புபட்டுள்ளார்.

பயனாளியால் ஆரம்பிக்கப்பட்ட சிறுவர் சேமிப்பு கணக்கை, பயனாளிக்கு தெரியாமல் அங்கத்தவர் அல்லாதவர் கணக்கிற்கு மாற்றி, அதிலிருந்த சேமிப்பு பணத்தை மோசடியான கையொப்பமிட்டு பயனாளிக்கு தெரியாமல் மோசடி செய்துள்ளனர். இதற்கு ஒரு உதாரணம் குமரகுரு அனுசிய என்ற சிறுவர் கணக்கு. இலக்கம் 10255. கணக்கு மீதியாக இருந்தது 228,206/=. அங்கத்தவர் அல்லாதவர் கணக்கிலக்கம் 6497 இற்கு மாற்றப்பட்டு, வங்கி உத்தியோகத்தர்கள் சுருட்டிய பணம் 227,270/=

தொடர்ச்சி அடுத்தபக்கம்...

மேற்கொள்ளப்பட்ட கண்காணிப்பு அறிக்கையின் சுருக்கம் / கருத்துக்கள்

1) வங்கியில் 2013ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் கூடுதலான அளவு நிதி மோசடிகள் இடம் பெற்றுள்ளது

2) வங்கி முகாமையாளர், உத்தியோகத்தர்கள் மற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்கள் மற்றும் சமுர்த்தி சங்கத்தலைவர்கள் நேரடியாக மோசடியான நிதி நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்கள்

3) கோறளைப்பற்று தெற்கு பிரதேச செயலகப்பிரிவில் உள்ள ஒரே ஒரு வங்கியான சந்திவெளி சமுர்த்தி வங்கியில் ஊழியர்களால் மேற்கொள்ளப்பட்ட நிதி மோசடியானது வங்கி மீது பொதுமக்களின் நம்பிக்கையை இல்லாமல் செய்துள்ளது

4) வங்கியினை வழிநடத்துவதற்காக வெளியிடப்பட்ட சுற்றுநிருபங்கள் மீறப்பட்டு பணியாற்றப்பட்டுள்ளது

5) வறியமக்களின் கோடிக்கணக்கான பணத்துடன் செயற்படும் வங்கியை முறையாக வழிநடத்த வேண்டிய முகாமையாளர் ஊழியர்களை தவறான முறையில் வழிநடாத்தி பொறுப்பற்ற முறையில் செயற்பட்டுள்ளார்.

6) வங்கியில் மோசடி நடவடிக்கையில் ஈடுபட்டதாக கண்டறியப்பட்ட உத்தியோகத்தர்கள் அதிலிருந்து நழுவிச் செல்லும் நிலையில் உள்ளார்கள் இதனால் விசேட கணக்காய்வுக்கு இவ்வங்கியை மிக விரைவாக உட்படுத்த வேண்டிய நிலையுள்ளது.

குறிப்பு :- திரு வெ. லகுராஜ் எனும் உத்தியோகத்தர் இதில் தொடர்புபட்டும் அவர் வாக்குமூலம் அளிக்க மறுக்கின்றார்


எனவே முகாமையாளர் மற்றும் ஊழியர்கள் வங்கியில் மேற்கொண்டுள்ள மோசடியான நடவடிக்கைகளுக்கு தொடர்புபட்ட உத்தியோகத்தர்களுக்கு எதிராக கடுமையான ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படுவது அவசியமாக உள்ளது. இவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க தவறுமிடத்து எதிர்காலத்தில் வங்கி மிகவும் பின்னடைவான நிலைக்கு தள்ளப்படும் நிலையுள்ளது.

கண்காணிப்பு முகாமையாளர்

N. VISVALINGAM
Inv... Manager
District S...urdhi Office
Kachcheri, Batticaloa



# WWE
## கிங்ஸ் ஓவ் ரிங்ஸ்
### அதிரடி அடிதடி-3




# 'விவேகம்' அஜித்தும் ப்ரெட் ஹார்ட்டும்

ஊருக்குள்ளே WWEக்கு இவ்வளவு ரசிகர்கள் இருக்கிறார்கள் என்றால், அதற்கு விதை 'ஆட்டிட்யூட் எரா' போட்டது. ஆட்டிட்யூட் எரா என அழைக்கப்படும் 90'களின் இடைப்பட்ட காலம், WWE வரலாற்றின் மிகமிக முக்கியமான காலகட்டமாக கருதப்படுகிறது. அவை WWEன் அலுவலகம் அமைந்திருக்கும் கனெக்டிகட்டில் கல்வெட்டு அமைத்து பொறித்துவைக்கப்பட்டு, மழை பெய்யும் நேரத்தில் நனையாதவாறு குடைப் பிடித்து பத்திரமாக பார்த்துக்கொள்ளப்பட வேண்டியது. ஸாரி பாஸ், நான் கொஞ்சம் எமோஷன் ஆகிட்டேன்.

சரியாக 'ஆட்டியூட் எரா' இந்த நேரத்தில்தான் ஆரம்பித்ததென, எந்த நேரத்தையும் சொல்லி சூடம் அடித்து சத்தியம் செய்யமுடியாது. 'விருமாண்டி எஃபெக்ட்' போல் ஆளாளுக்கு ஒரு பதிலைச் சொல்கிறார்கள். இருந்தாலும் 'ஆட்டிட்யூட் எரா ஆரம்பித்தது அப்போதுதான்' என பெரும்பாலோனோர் குறிப்பிட்டுச் சொல்வது, 1997ம் ஆண்டு நடந்த 'மான்ட்ரியல் ஸ்க்ரூஜொப்' சம்பவத்தைதான். அது தரம்கெட்ட சம்பவம்தான், ஆனாலும் தரமான சம்பவம். நாலைஞ்சு இடியாப்பத்தை கொசகொசனு பிசைஞ்சு கையில் கொடுத்தாற்போல் குழப்பமாய் இருக்குமே? சுற்றிவளைக்காமல் நேராக மேட்டருக்கே வருகிறேன்...

'ஹிட்மேன்' ப்ரெட்ஹார்ட், ப்ரோ ரெஸ்ட்லிங் உலகின் உத்தமவீரன். ப்ரோ ரெஸ்ட்லிங்கில் உள்ள அத்தனை நுணுக்கங்களையும் கற்றுத்தேர்ந்து ஸ்டேஜில் அரங்கேற்றி அசத்திய சூப்பர் ஸ்டார். திடீரென ஒரு ஆங்கிளில் பார்க்க 'வெற்றிவிழா' கமல்ஹாசனைப் போல் தெரியும் இவருக்கு, ரசிகர் கூட்டம் எக்கசக்கம். அதாகப்பட்டது நாணயமா, இரண்டு பக்கம் இருக்கு. வாழ்க்கைனா இன்பம், துன்பம் இருக்கு. அந்தமாதிரிதான், வானம், பூமி, இரவு, பகல், நல்லது, கெட்டது, வாழ்க்கையோட அடியில் நோண்டிப் பார்த்தோம் என்றால் இப்படித்தான் எல்லாமே. அப்படி ப்ரெட் ஹார்டுக்கு இணையான இன்னொரு வீரனாக WWEயை



ஷோன் மைகல்ஸ்

கலக்கிக் கொண்டிருந்தார் ஷோன் மைக்கல்ஸ். ஏற்கெனவே, ப்ரெட் ஹார்டுக்கும் ஷோன் மைக்கல்ஸுக்கும் இடையே சின்னச் சின்ன உரசல்கள் இருந்து வந்தன. இந்நிலையில், WWFன் போட்டி நிகழ்ச்சியான WCWல் இணைந்துகொள்ளச் சொல்லி ப்ரெட் ஹார்டுக்கு மில்லியன் டொலர் ஓஃபர் வர, அவரும் ஒப்புக்கொண்டார். இது WWFன் சேர்மன் மெக்மேஹனுக்கு பெரும் கோபத்தை ஏற்படுத்தியது. அப்போது சம்பியனாக இருந்த ப்ரெட் ஹார்ட், சாம்பியனாகவே WCWக்கு புலம் பெயர்ந்தால் WWFக்கு பெருத்த அவமானமாகிவிடும் என எண்ணினார்.

"நீ WCWக்கு போ. ஆனால், சாம்பியனாக போகாதே" என மெக்மேஹன் எவ்வளவோ கெஞ்சியும் ப்ரெட் ஹார்ட் கேட்டபாடில்லை. ஷோன் மைக்கல்ஸிடம் சம்பியன் ஷிப்பை தோற்க அவர் விரும்பவில்லை. மெக்மேஹனும் வேறுவழியில்லாமல் ப்ரெட் ஹார்டிடம் 'சரி. உன் இஷ்டபடியே நடக்கட்டும்' என ஒப்புக்கொண்டார். ஆனால், 1997ம் ஆண்டு நடந்த 'சர்வைவர் சீரிஸ்' சிறப்பு நிகழ்ச்சியில், சகுனியாக மாறி சதி ஒன்றை தீட்டினார் மெக்மேஹன்.

சண்டை நடந்துகொண்டிருக்கும் போது, ப்ரெட் ஹார்டுக்கு 'ஷார்ப் ஷூட்டர்' எனும் சப்மிஷன் லொக் மூவை நிகழ்த்திக் கொண்டிருந்தார் ஷோன் மைக்கல்ஸ். அப்போது ப்ரெட் ஹார்ட் சப்மிஷன் லொக்கை பிரிக்க போராடிக்கொண்டிருக்க, ரெஃப்ரியோ மணியை அடிக்கச் சொல்லி மட்சையே முடிக்க, அரங்கில் இருந்தவர்கள் அப்படியே ஷாக் ஆனார்கள். ப்ரெட் ஹார்ட் 'கிவ் அப்' கொடுக்காமலேயே, 'அவர் கிவ் அப் கொடுத்துவிட்டதாக' நடுவர் மட்சை முடித்தது, ப்ரெட் ஹார்ட்டுக்கு பெரும் கோவத்தைக் கிளப்பியது. சண்டையில் ஷோன் மைக்கல்ஸ் வென்றார் என அறிவித்து, சம்பியன் ஷிப் பெல்ட்டையும் தூக்கிக் கொடுக்க, மெக்மேஹான் முகத்தில் காரி உமிழ்ந்தார் ப்ரெட் ஹார்ட். கிட்டதட்ட, 'விவேகம்' படத்தில் வரும் அஜித்துக்கு நடந்ததைப் போல நம்பிய நண்பர்களே அவர் முதுகில் குத்தினார்கள்.

மான்ட்ரியல் எனும் இடத்தில் நடந்த இந்தச் சம்பவம் 'மான்ட்ரியல் ஸ்க்ரூஜொப்' என ரெஸ்ட்லிங் ரசிகர்களால் அழைக்கப்படுகிறது. அதுவரை சாஃப்டாக சைடுவகிடு எடுத்து


மான்ட்ரியல் ஸ்க்ரூஜொப் கணம்

சரத்பாபு மாதிரி திரிந்துகொண்டிருந்த மெக்மேஹான், ஓவர் நைட்டில் மெயின் வில்லனாக மாறினார். அன்பான மெக்மேஹான், அதிகாரத்திமிர் கொண்ட மிஸ்டர்.மெக்மேஹானாக மாறினார். அவரோடு சேர்ந்து ஒட்டுமொத்த WWFம் மாறியது. ப்ரெட் ஹார்டின் இடத்தைப் பிடிக்கும் ரேஸில் பல இளம் திறமையாளர்கள் கலந்துகொண்டனர். அவர்களில் ஒருவர்தான் தி ரொக். அடுத்த வாரம் அவரைப் பற்றியே பார்ப்போம்...

---

பயனாளிகளிடம் இருந்து சிறுகுழு சேமிப்பாக அறவிடப்பட்ட பணம், அறவிட்ட உத்தியோகத்தரால் மோசடி செய்யப்பட்டுள்ளது. (உ+ம் அரியகுமார் ரஞ்சினி க/கு இல 41/1779 குழு க/கு இல 15426 குழு கணக்கில் இடும் பொருட்டு 28.08.2014 அன்று இரஞ்சினியிடம் இருந்து 10,000/= நாகராசா கயல்விழியால் அறவிடப்பட்டு, சூட்சுமமான முறையில் 100/= வைப்பு செய்யப்பட்டு, மிகுதி பணம் மோசடி செய்யப்பட்டுள்ளது.

பயனாளி வெளிநாட்டில் இருந்த போது, அவரின் பெயரில் வேறொருவர் கடன் பெற வங்கி, ஊழியர்களும், வெளிக்கள உத்தியோகத்தர்களும் வழிகாட்டியாக செயற்பட்டுள்ளனர். மிக பாதுகாப்பாக பேணப்பட வேண்டிய கடன் ஒப்பந்தங்கள், விண்ணப்பங்கள் தற்போது வங்கியில் இல்லை. ஆள்சார் பதிவேடுகள் முறையாக பராமரிக்கப்படவில்லை. மீள செலுத்தப்படும் கடன் வட்டி விபரங்கள் ஆள்சார் பதிவேடுகளில் பதிவுசெய்யப்படுவதில்லை.

பயனாளி கடனுக்கு விண்ணப்பித்தால், அந்த விண்ணப்பத்தின் மூலம் வங்கி உத்தியோகத்தர்களே (பயனாளிக்கு தெரியாமல்) கடன் பெற்றிருக்கிறார்கள். சில பயனாளிகளிற்கு தொழில் தேவைக்கு அதிக பணம் வழங்கப்பட்டுள்ளதால், அவர்கள் கடனாளிகளாக்கப்பட்டுள்ளனர். பயனாளிகள் வைப்பு செய்ய கொடுத்த பணம், உத்தியோகத்தர்களால் மோசடி செய்யப்பட்டுள்ளது.

மொத்தத்தில் சாதாரண மக்களிற்கு சமுர்த்தி திட்டம், வங்கி என்றாலே நம்பிக்கையிழக்கும் விதமாக இந்த வங்கி உத்தியோகத்தர்கள் செயற்பட்டுள்ளனர். இழந்த நம்பிக்கையை மக்கள் மீளப்பெறுவதென்பது, இந்த மோசடியாளர்கள் எப்படி கையாளப்பட போகிறார்கள் என்பதிலேயே தங்கியுள்ளது.



# 9 சென்றதும் வென்றதும்!

செங் ஹே

மிங் இளவரசர் சூ டி, 1402ம் ஆண்டு அதிகாரத்தைக் கைப்பற்றி சீனாவின் மன்னர் ஆனார். நாட்டில் பல முக்கிய மாற்றங்களை மேற்கொள்ள விரும்பினார். சீனப் பெருஞ்சுவரை விரிவாக்குவது அவரது கனவு. அதற்கான வேலைகள் தொடங்கின. தலைநகர் பெய்ஜிங்கில் புதிய அரண்மனை உள்ளிட்ட சில கட்டுமான வேலைகளையும் தொடங்கினார். சீனாவின் வர்த்தக உறவுகளை வலுவாக்க, உலக நாடுகளுடன் தொடர்புகொள்ள விரும்பினார். செங் ஹே அந்தப் பொறுப்பை ஏற்றார்.

“செங் ஹே, எனக்குப் பல கனவுகள் இருக்கின்றன. அவை நிறைவேற நிறையப் பணம் தேவை. வியாபாரம் பெருகினால்தான் பணம் சேரும். முந்தைய மன்னர்கள் இரும்புத்திரை போட்டு சீனாவை மூடி வைத்திருந்தார்கள். கதவைத் திறந்து, நாம் உலகைப் பார்க்க வேண்டும். உலகமும் சீனாவைப் பார்க்க வேண்டும். அதற்கு உன் உதவி தேவை” என்றார்.

“உங்களுக்காக என்ன வேண்டுமானாலும் செய்வேன், சொல்லுங்கள்!” என்றார் செங் ஹே.

“உடனடியாக சில கப்பல்களை உருவாக்க வேண்டும். உலகம் முழுவதும் சென்று சீனாவின் பெருமைகளைச் சொல்ல வேண்டும். புதிய நாடுகளுடன் வர்த்தக உறவுகளை வளர்க்க வேண்டும். உன்னால் முடியுமா?”

“முடியும்” என்றார் செங் ஹே. அப்போது, ‘கப்பல்’ என்பது கடலில் செல்லும் ஒரு வாகனம் என்று மட்டும்தான் தெரியும். அதனாலென்ன, கற்றுக்கொண்டால் போச்சு எனக் களத்தில் குதித்தார் செங் ஹே. தந்தையை இழந்து, கைதியாக்கப்பட்டு, அரண்மனையில் பணியாளனாக ஓடித் திரிந்த ஓர் இளைஞனுக்குக் கிடைத்த வாய்ப்பு இது.

கப்பல் கட்டுவதில் தேர்ச்சிமிக்க பணியாளர்களையும் தொழில்நுட்ப வல்லுநர்களையும் தேடிப்பிடிக்கத் தொடங்கினார். பத்து, நூறு, ஆயிரம் என ஆட்கள் சேர்ந்துவிட்டனர். இருந்தும் செங் ஹேவுக்குத் திருப்தி இல்லை. மேலும் மேலும் ஆட்களைத் தேடிக்கொண்டே இருக்க, “செங் ஹே, நீ எவ்வளவு கப்பல்களை உருவாக்கப்போகிறாய்?”என்று அரண்மனை அதிகாரிகள் சந்தேகத்துடன் கேட்டார்கள்.

“நீங்களே சொல்லுங்களேன். உலகம் முழுக்க சீன வணிகர்கள் சுற்றிவர எவ்வளவு கப்பல்கள் தேவைப்படும்?”

“சில நூறு கப்பல்கள்.”

“இல்லை, ஆயிரக்கணக்கான கப்பல்கள் வேண்டும். மன்னராலும் நினைத்துப்பார்க்க முடியாததைச் செய்து முடிப்பதுதானே எனக்குப் பெருமை? நூறு கப்பல்கள் இருந்தால் நன்றாக இருக்கும் என அவர் நினைத்தால், ஆயிரம் கொண்டுவந்து நிறுத்த வேண்டாமா?” என்றார் செங் ஹே.

ஆயிரக்கணக்கான பணியாளர்கள் கடுமையாகப் பணியாற்றி, கப்பல்களை உருவாக்கினார்கள். ஒவ்வொன்றையும் மேற்பார்வையிட்ட செங் ஹே, ‘இந்தக் கப்பலில் நான் சென்றால் எப்படி இருக்கும், பல தேசங்களைக் கண்டறிந்து என் மன்னருக்கும் என் நாட்டுக்கும் பெருமை சேர்க்கலாமே’ என நினைத்தார்.

மொத்தம் 3,500 கப்பல்களை செங் ஹே உருவாக்கி முடித்தபோது, சீனாவே ஆச்சர்யப்பட்டது. ஒன்பது கப்பல்களை தனக்கே தனக்கென்று பிரத்தியேகமாக வடிவமைக்கச் சொன்னார் செங் ஹே. ஒவ்வொன்றும் 400 அடி நீளம். பிற்காலத்தில் கிறிஸ்டோஃபர் கொலம்பஸ் பயன்படுத்திய கப்பலின் நீளமே 85 அடிகள்தான்.

செங் ஹே உற்சாகத்துடன் பயணத்தைத் தொடங்கினார். முதல் பயணம் 1405ல் தொடங்கி, இரண்டு ஆண்டுகள் நீடித்தது. எதையுமே பிரமாண்டமாக யோசிக்கத் தெரிந்தவர் அல்லவா? 62 கப்பல்கள் செங் ஹேவுடன் பயணம்செய்தன. பின்னால் 200 கப்பல்கள் அணிவகுத்து வந்தன. பாதுகாப்புக்கு 28,000 ஆயுதம் தாங்கிய வீரர்கள் இருந்தனர்.

முதல் பயணமே இந்தியாவுக்குத்தான். தெற்கு சீனக் கடலில் இருந்து கிளம்பி, இந்தியப் பெருங்கடல் வழியே காலிகட் அடைந்தார். ‘இனி நிலமே வேண்டாம், கடலில் தூங்கி, ஒவ்வொரு நாள் கண் விழிக்கும்போதும் ஒரு புதிய பிரதேசத்தைக் காண வேண்டும்’ என்று நினைத்துக்கொண்டார்.

சீனா திரும்பும் வழியில், சுமத்திரா தீவில் ஒரு பெரிய கொள்ளைக்கூட்டம் தாக்கியது. செங் ஹேயின் வீரர்கள் விடுவார்களா, 5,000 கொள்ளையர்களைக் கொன்று, தலைவனைச் சிறைப்பிடித்தார்கள்.

அரண்மனை திரும்பியவர்களிடம், ‘எவ்வளவு பணம் கிடைத்தது, என்னென்ன பிரதேசங்களைக் கைப்பற்றினீர்கள்?’ எனப் பலரும் ஆவலுடன் கேட்டார்கள்.

“நான் போனது அதற்காக இல்லை நண்பர்களே”. இதோ, நிறையப் பரிசுப் பொருட்கள் கிடைத்திருக்கின்றன” என்றார். ‘3,500 கப்பல்களை உருவாக்கி, 28,000 வீரர்கள் ஆயுதங்களோடு சென்றது, சில பரிசுப் பொருட்களை மட்டும் கொண்டுவருவதற்கா? சரியான ஏமாளி’ என்று அவர்கள் நினைத்தார்கள்.

“நான் சென்றது மன்னரின் மகிழ்ச்சிக்காக. வியாபாரத்துக் காகத் தொடர்ந்து பல நாடுகளுக்குச் செல்வேன். ஆனால், எதையும் ஆக்கிரமிக்கப் போவது இல்லை” என்று உறுதியாகச் சொன்னார் செங் ஹே.



பெர்ஷியன் வளைகுடா, கிழக்கு ஆபிரிக்கா என மேலும் ஐந்து பயணங்களை மேற்கொண்ட செங் ஹே, ஒவ்வொரு பகுதியும் எந்தெந்த வகையில் சீனாவிடம் இருந்து வேறுபடுகிறது என்பதை ஆராய்ந்தார். சில அழகிய பொருட்களை மட்டும் கொண்டுவருவார்.

“என் அருமை சீனர்களே, ஆபிரிக்காவில் இருந்து நான் கொண்டுவந்துள்ள அதிசயத்தைப் பாருங்கள்” என்று கப்பலில் இருந்து பெரிய பெட்டியை இறக்கி, மூடியுள்ள துணியைச் சட்டென விலக்குவார் செங் ஹே.

மக்கள் வாய் பிளப்பார்கள். ‘ஐயோ, இதென்ன பூதமா? இவ்வளவு பெரிய கால்களா? அந்த நீளமான கழுத்து ஒடிந்து விழுந்துவிடாதா? இது நம்மைக் கடித்தால், நம் கழுத்தும் இப்படி நீண்டுவிடுமா?’ என அலறுவார்கள்.

“பயப்படாதீர்கள், இது சாதுவான பிராணி. இதன் பெயர் ஒட்டகச்சிவிங்கி” என்பார் செங் ஹே.

இன்றும்கூட பலர் திரும்பத் திரும்பக் கேட்கிறார்கள். ‘புதிய இடங்கள் பார்த்தார். விதவிதமான விலங்குகளைக் கொண்டுவந்தார். எல்லாம் சரி, செங் ஹேவால் சீனாவுக்கு என்ன பலன்? செங் ஹே நினைத்திருந்தால், இந்தியப் பெருங்கடலை ஆண்டிருக்கலாமே, ஏன் செய்யவில்லை?’

ஏனென்றால், செங் ஹே என்ன செய்ய விரும்பினாரோ... அதை மட்டுமே செய்தார். கடலில்தான் வாழவேண்டும் என விரும்பினார், அதுவே நடந்தது. அவர் இறந்ததும் கடலில்தான்.

(பயணம் தொடரும்)



# மாய மனிதன் க்ரிஃபின் 9

VENU VARIATH ஓவியம்: கே.எஸ்.ரகு தமிழில்: ரமேஷ்












coustomer is king

யாழ்மண்ணில்

# பிறின்ட் ஆர்ட்

## PRINT ART GIFT SHOP

BEST QUALITY GUARANTEED

## உங்கள் கனவை நாங்கள் நனவாக்கித் தருகிறோம்.

பிறந்த நாள் நிகழ்வுகள், திருமண நாள் நிகழ்வுகள், உங்கள் வாழ்க்கையின் மறக்கமுடியாத தருணங்கள், மற்றும் இனிய நிகழ்வுகளை நினைவில் பதித்திடவும்

உங்கள் அன்புக்குரியவர்களது புகைப்படங்களை இவ்வாறு வடிவமைத்து பெறுமதிமிக்க அன்பளிப்பை வழங்கி மகிழ்விக்க இன்றே நாடுங்கள்




புதிய தொழில் நுட்ப பிறின்டிங் சேவை.

PRINT ART ONLINE STORE




எங்கும் பெற்றிட முடியாத விசேட விலைக் கழிவுடன்.

இவ்வாறு பல்வேறுபட்ட அன்பளிப்பு பொருட்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்

தீபம் பத்திரிகை மூலம் புதிதாக வருகின்ற வாடிக்கையாளர்களுக்கு விசேட விலைக் கழிவு

எங்கள் முகவரி

788/4 செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் (கிட்டு பூங்கா முன்னால்)

www.facebook.com/printartsrilanka

0776713032

0214378576

info@printart.lk

www.printart.lk

இந்தப்பத்திரிகை நோர்சி மீடியா (பிறைவேற்) லிமிற்ரட் நிறுவனத்தால் பருத்தித்துறை வீதி, 5ம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியில் உள்ள நாவலர் பிரிண்டர்ஸில் அச்சிட்டு 08.04.2018 அன்று வெளியிடப்பட்டது.